வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1994 திங்கள் மாசி 26-ம் நாள் (10–3–1963) ஞாயிற்றுக்கிழமை ஷவ்வால் 13 | இதழ் 41

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

# இனத்துரோகிகளை ஒதுக்க நடவடிக்கை?

## சிங்களப் பரீட்சை எழுதியதின் விளைவு

### தமிழாசிரியர்கள் மீது மக்கள் ஆத்திரம்

“சிங்களப் பரீட்சை பகிஷ்கார இயக்கத்தையும்” அலட்சியம் செய்து கடந்த வாரம் சிங்களப் பரீட்சை எழுதிய ஆசிரியர்களை ஒதுக்கி வைப்பதென தமிழ் பேசும் மக்களில் ஒருசாரார் முடிவு செய்திருப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

சிங்களப் பரீட்சையை பகிஷ்கரிக்கும் இயக்கம், கடந்த சனிக்கிழமை பெருமளவு வெற்றிபெற்றது.

பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பியிருந்த அரசாங்க ஊழியர்களில் சுமார் 90 சதவிகிதம் பேர் பரீட்சையை பகிஷ்கரித்து விட்டனர். அரசாங்க எழுது வினைஞர் சங்கமும் அஞ்சல் எழுது வினைஞர் சங்கமும் நடாத்திய கிளர்ச்சியின் விளைவாகவே அவர்கள், பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தும்கூட பரீட்சை எழுத மறுத்துவிட்டனர்.

ஆனால் தமிழாசிரியர்கள் மட்டும் இக் கிளர்ச்சிக்குச் செவிசாய்க்காமல் சுமார் 90 சதவிகிதம் பேர் பரீட்சை எழுதியுள்ளனர். அவர்களிலும் பெரும்பாலோர் ஆசிரியைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசாங்க ஊழியர்கள் சிங்களப் பரீட்சையில் தேர்ச்சி பெறவிட்டால் அவர்களின் சம்பள உயர்வு நிறுத்தப்படும். ஆனால் ஆசிரியர்களின் சம்பள உயர்வு நிறுத்தப்பட மாட்டாது. எனினும் இதர ஊழியர்கள் பரீட்சையை பகிஷ்கரிக்க ஆசிரியர்கள் மட்டும் பெரும்

(9-ம் பக்கம் பார்க்க)

எங்கள் பிள்ளைகளுக்கு

## சிங்களம் வேண்டாம்

### நீர்கொழும்பு பெற்றோரின் துணிகர முடிவு

நீர்கொழும்பிலுள்ள தமிழ்ப் பெண்கள் பாடசாலை ஒன்றில் சிங்களம் பயிற்றுவதற்காக ஒரு சிங்களப் பெண் ஆசிரியை நியமிக்கப்பட்டார். தனது கடமையைப் பார்க்கச் சென்ற மூன்றாவது நாளில் அவருக்கு அவ்விடத்தை விட்டு ஓட்டமெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

சிங்கள போதனை ஆரம்பித்த விவரம் பெற்றோருக்குப் பிள்ளைகள் மூலம் தெரிவிக்கப்பட்டது. மூன்றாவது நாட் காலை ஆத்திரங்கொண்ட பெற்றார் பட்டாளம் ஒன்று பாடசாலைக்குள் நுழைந்து ஆர்ப்பாட்டம் நடத்தியதாம்.

“தமிழ் மொழியில் கல்வி பயிற்றவே எங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பினோம். எங்கள் பிள்ளைகளுக்குச் சிங்களம் தேவைப்படாது. இவர்களில் எவரும் அரசாங்க உத்தியோகத்தை எதிர்பார்க்கவில்லை. கடல்படு திரவியமான மீன்கள் இருக்கும் வரை இவர்களுக்கு அரசாங்க உத்தியோகமே தேவையில்லை. உடனே சிங்கள ஆசிரியையை வெளியேற்றுக” என்று பெற்றார் கூக்குரலெழுப்பினராம்.

(8-ம் பக்கம் பார்க்க)

## சீனிக்கும் கூப்பன்?

கிழக்கு ஐரோப்பாவில் கரும்புற்பத்தி வீழ்ந்ததின் பயனாகவும், அதன் விளைவாக உலகச் சந்தையில் சீனியின் விலை அதிகரித்ததினாலும் ஏற்பட்டுள்ள சீனித் தட்டுப்பாடு எமது அரசாங்கத்துக்குப் பீதியை உண்டாக்கியுள்ளது. சீனியையும் கூப்பன் முறைப்படி விநியோகம் செய்ய வேண்டுமென்பதை இலங்கை அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றுள்ளதாகத் தெரிகிறது. இந்தக் கூப்பன் விநியோகம் எப்போது நடைமுறைக்கு வருமென்று தெரியவில்லை.

# யாழ். மக்கள் வங்கியில் தமிழ் ஒழிப்பு!


## வருந்தி அழைத்தோரே வந்தவினை கண்டீரோ?

### பொது மக்கள் வங்கியா? சிங்கள மக்கள் வங்கியா?

98 சதவிகிதம் தமிழ் பேசும் மக்கள் வாழும் யாழ்ப்பாணத்தில் அண்மையில் இருட்டில் திறப்பு விழா கொண்டாடப்பட்ட மக்கள் வங்கி யாழ்ப்பாணக் கிளையின் காசோலைகளில் தமிழ் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பூதக் கண்ணாடி வைத்துப் பார்த்தால்தான் தமிழ் இருப்பது தெரிகிறது. இத்தனை கேவலமான நிலை தமிழுக்கு ஏற்பட்டுள்ளது. அதுவும் யாழ்ப்பாணத்தில்.

இதே மக்கள் வங்கியின் அனுராதபுரக் கிளையில் வெளியாகியுள்ள காசோலைகளில் சாதாரணமாக வாசிக்கக் கூடிய தமிழ் எழுத்துக்கள் காணப்படுகின்றன. அனுராதபுரமோ சிங்கள மக்கள் பெரும்பான்மையாக உள்ள இடம். ஆனால் அனுராதபுரத்தில் தமிழுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இடம்கூட யாழ்ப்பாணத்தில் கொடுக்கப்படவில்லை.

மக்களின் வங்கி என்று கூறப்படும் இவ் வங்கி, தமிழை ஒதுக்குவதைப் பார்த்தால் இது சிங்கள மக்கள் வங்கியாகத்தான் காட்சியளிக்கின்றது. இந்தச் சிங்கள


R 051283
PEOPLE'S BANK மக்கள் வங்கி
Pay
A N 003079
1128
4 - 3 - 1963

மக்கள் வங்கியின் தமிழ் ஒழிப்பு வேலைகள் இன்று யாழ்ப்பாணம் வரை வந்துவிட்டது. பிற்போக்கு வாதிகள், சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளால் பெரிதும் போற்றப்பட்ட இந்த மக்கள் வங்கியின் சுய உருவம் இப்போது புலப்படுகின்றது.

வியாபார நிலையமான மக்கள் வங்கி தமிழ் ஒழிப்பு வேலைகளில்—அதுவும் யாழ்ப்பாணத்தில் செய்வதானால் எந்தத் தன்மானத் தமிழனும் பொறுக்க மாட்டான். தமிழுக்குத் தக்க இடம் கொடுக்கப்படாவிட்டால் மக்கள் வங்கியின் தமிழ் ஒழிப்பு வேலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரும்.




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரேஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

‘ரேஸ்’ பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமக்குள்ளே நடப்பவை

—நான்-தான்—

வாசகர்களுக்கு ஒரு வார்த்தை! என் கருத்துக்கள் சிலவற்றை உங்களுக்குச் சொல்ல முன் என்னைப்பற்றி உங்களுக்குத் தெரிவிக்க வேண்டாமா? நான் உங்களில் ஒருவன். அதாவது, ஒரு வாசகன். இலக்கியத்தின் எல்லாத் துறையிலும்—கதை, கவிதை, கட்டுரை, விமர்சனம், நாவல், மொழி பெயர்ப்பு—எனக்கு ஓரளவு பரிச்சயம் இருக்கிறது. பத்திரிகைத் துறை பற்றிச் சிறிது விளங்கும். கலையுலகத்திலும் கொஞ்சம் அனுபவம் உண்டு. இவ்வளவு கூறும் நான்? நான் தான்!

சரி, இனி விஷயத்திற்கு வருவோம். இலங்கையில் இலக்கியம் வளரவேண்டும், தமிழர்களின் கலைகள் பெருக வேண்டும், இவற்றின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் சக்திகள் அழிக்கப்பட வேண்டும்—என்றுதான் எல்லோரும் விரும்புகின்றார்கள். இந்தச் சிறந்த இலட்சியங்களை எதிர்க்கும் தமிழ் மகன் யாராவது இலங்கையில் இருப்பான் என்று நான் நினைக்கவில்லை.

கலைஞர்களுக்கும் இலக்கிய கர்த்தாக்களுக்கும் கௌரவம் கொடுக்க வேண்டியது எல்லோரின் கடமையாகின்றது. ஆனால் கலை, இலக்கியப் போர்வையில் சில கயவர்கள் உலாவும் போது, அவர்களை இனம் கண்டு அவர்களின் அநாகரீகச் செயலைக் கண்டிப்பதும் ஒரு தொண்டுதான். தனிப்பட்ட நபர்மீது எனக்குக் கோபதாபம் இல்லை. அவர்கள் கௌரவமான ஒரு போர்வையுள் புகுந்து கொண்டு அகௌரவமான ஒரு தொழிலைச் செய்யும் போது கண்டிப்பதில் தவறுண்டோ?

***

இலங்கையில் இப்போது கொஞ்சக் காலமாக ஒரு கூக்குரல் கேட்கிறது! தமிழ் நாட்டிலிருந்து ஆயிரக்கணக்காகப் பத்திரிகைகள் இங்கு வருகின்றனவாம். இந்த நாட்டு ஏழை மக்களின் பணம் ஏராளமாக அங்கு செல்லுகின்றதாம். ஆகவே இந்தப் பத்திரிகைகளை அரசாங்கம் தடை செய்ய வேண்டுமாம்! இப்படி ஓலமிடுவது வாசகர்கள் என்று தானே நினைக்கின்றீர்கள்? அல்ல எழுத்தாளர்கள்—அதுவும் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் கீழ் இயங்கும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த எழுத்தாளர்தான் அடிக்கடி இப்படிக் கூச்சலிடுகிறார்கள். "இந்த நாட்டு மக்களின் மீது இவர்களுக்குத்தான் எவ்வளவு அன்பு! இவர்களல்லவா பாட்டாளி மக்களின் எழுத்தாளர்கள்!" என்றுதான் சாதாரண மக்கள் நினைப்பார்கள். அவ்வளவு ஆவேசத்துடனும் உருக்கத்துடனும் இவர்கள் மேடைகளில் முழங்குவார்கள். ஆனால் உண்மை என்ன? இந்தியப் பத்திரிகைகளில் வெளியாகும் கதைகளை இங்குள்ள வாசகர்கள் விழுந்து விழுந்து படிக்கிறார்கள், அவ்வளவு தூரம் சிறப்பாக இந்த முற்போக்கு எழுத்தாளர்களால் எழுத முடிவதில்லை, இந்தக் குறைபாட்டை மறைக்கத்தான் "மக்களின் நன்மைக்காக" வேஷம் போடுகிறார்கள்.

இந்தக் கோஷ்டியைச் சேர்ந்த ஒரு எழுத்தாளர் ஏதோ பிரமாதமாக ஒரு பத்திரிகை நடத்தப் போவதாகச் சொல்லிக் கொண்டு, பணம் சேர்த்தார். தன்னுடைய பத்திரிகையால் இலக்கிய உலகத்தையே ஒரு திருப்புத் திருப்பி விடப் போவதாகத் தம்பட்டம் அடித்தார். பத்தாயிரம் ரூபாவுக்கு மேல் பணம் சேர்ந்தது. (இது என் கற்பனையல்ல, இப்படி அடிக்கடி அவரே தன் நண்பர்களிடம் கூறினார். பத்திரிகையின் வருட சந்தா ஆறு ரூபா. இரண்டாயிரத்துக்கு மேல் சந்தா சேர்ந்ததாக அவர் ஒரு நண்பரிடம் கூறினார். வேறொரு சந்தர்ப்பத்தில் ஐயாயிரம் சந்தா சேர்ந்து விட்டதாகவும் கூறினார். இதன்படி அவர் 30,000/- ரூபா சேர்த்திருக்க வேண்டும்) இன்று வரும் நாளை வரும் என்று சொல்லி ஏமாற்றி விட்டு நீண்டகால தாமதத்தின்பின் பத்திரிகை வெளிவந்தது. ஆசிரியரின் பிரசாரத்தில் மயங்கியவர்கள் பிரமாதமாக எதையோ எதிர்பார்த்தார்கள். வநது சேர்ந்ததோ குப்பைதான், எப்போதோ நடந்து முடிந்த 'கல்கி சிறுகதைப் போட்டி' பற்றிக் கிளறியிருந்தது ஒரு காக்கை. பக்கத்திற்குப் பக்கம் முதுகு சொறியும் முழுத் திருட்டு, முக்கால் திருட்டையும் பார்த்த வாசகர்கள் மூக்கைப் பிடித்துக் கொண்டார்கள்.

நான்கு இதழ்கள் வெளிவந்தபின், நல்ல காலம் அது நின்று விட்டது. ஆசிரியர் மூச்சுப் பேச்சில்லாமல் யாழ்ப்பாணம்வந்து சேர்ந்து விட்டார். "ஆயிரக் கணக்கில் பணம் சேர்த்திரே, எங்கே அந்தப் பணம்? எங்கள் சந்தா எங்கே?" என்று

(13-ம் பக்கம் பார்க்க)

## கவிதை நெஞ்சம்

பாரசீக இலக்கியப் பூங்காவை அணி செய்த பெரும் கவிஞர்களுள் ஒருவரான பிர்தவ்ஸ் என்பவரின் வாழ்க்கை நிகழ்ச்சியைச் சித்தரிக்கும் சிறு காவியம், யூ. எல். தாவூத் எழுதும் சிறந்த ஓவியம் விரைவில் 'சுதந்திர'னில் ஆரம்பமாகிறது!

## ஜனநாயகத்துக்கு இந்தியா ஓர் சிறந்த எடுத்துக்காட்டு

### அட்லி பிரபு கூறுகிறார்

ஆசியாவிலேயே ஜனநாயக அரசாங்கத்துக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக இந்தியா விளங்குகிறது. ஜனநாயகம் ஒத்து வராத ஓர் கண்டத்தில், ஒரே ஒரு வெற்றிகரமான உதாரணமாக அது இருக்கிறது." இவ்வாறு 'சண்டே டைம்ஸ்' அநுபந்தத்தில், அட்லி பிரபு அவர்கள் எழுதியுள்ளார்.

அவர் மேலும் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளதாவது: பாகிஸ்தான் அவ்வளவு வெற்றிகரமாக இயங்கவில்லை. அது துரதிர்ஷ்ட வசமானது. அங்கும், வெகு விரைவில் ஜனாதிபதி அயூப் கான், பாராளுமன்ற ஜனநாயகத்தை மீண்டும் கொண்டு வருவாரென நம்புகிறேன்.

"பிரிட்டிஷார் இந்திய மக்களுக்கு அதிகாரம் வழங்கியது, ஏகாதிபத்தியத்தின் முடிவைக் குறித்தது. இந்தக் கஷ்டமான காலத்தில் இந்தியாவைக் கட்டிக் காப்பதில், திரு. நேரு மெச்சத்தக்க வகையில் வெற்றியடைந்து இருக்கிறார்.

## இலக்கியம்:

# வாய்ச் சொற்கள் என்ன பயன்?

— தேனீ —

காதல், உள்ளங்களின் பிணைப்பு. அது தெய்வீகமானது. அன்பு கொண்ட உள்ளம் இரண்டு ஒன்று சேரும் தன்மையே காதலாகும்.

தமிழகத்துத் தலைவனும் தலைவியும் தங்கள் காதலின் தன்மையை நன்குணர்ந்திருந்தனர்.

பல கஷ்டங்களுள்ளும் பாசம் தளராது, பொறுமையைக் கைவிடாது, தன் காதலை வளர்த்து வருகிறான் தலைவன்.

தலைவியும் அப்படியே.

மனம் ஒருமித்த காதலர் இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்கிறார்கள்.

இருவரினதும் உள்ளங்களிலும், எத்தனையோ ஆசைகள் துளிர்த்து, கொடிவிட்டுப் படர்ந்து இருக்கின்றன.

சொல்ல வேண்டுமென்று நினைத்தவை ஆயிரம்.

ஒருவரிடம் ஒருவர் கூற வேண்டுமென்று எண்ணியவை எத்தனை எத்தனையோ!

ஆனால், சந்தித்துப் பேசும் சந்தர்ப்பத்தில், இருவரும் பேசா மடந்தையராக நிற்கின்றனரே!

ஏன்? எதற்காக? என்று ஆச்சரியப்படுகிறீர்களா?

இதென்ன விந்தை என்று வியக்கிறீர்களா?

இதில் ஆச்சரியப்படுவதற்கோ, வியப்படைவதற்கோ எதுவுமில்லை.

காதலர்கள் இருவரினதும் வாய்தானே பேசவில்லை?

ஆனால், கண்கள் தான் கதை கதையாய்ப் பேசுகின்றனவே!

உள்ளத்து ஆசையெல்லாம், இதயத்துத் தாகம் எல்லாம், ஆசையின் உணர்ச்சித் துடிப்பெல்லாம், அவர்களின் விழிகளில் துள்ளி விளையாடுகின்றன.

இப்படி விழிகள் பேசும் பொழுது வாய்ச் சொல்லுக்குத்தான் அங்கு இடமேது?

ஆகவே தான், இருவரும் மௌனிகளாய் நிற்கின்றனர்,

கண்கள் பேசிக்கொண்டே இருக்கின்றன.

காதலரின் இந்தத் தத்துவத்தைத் தமது குறளிலே கரும்பாக்கித் தருகிறார், வள்ளுவப் பெருந்தகையார்.

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில.

# குவளை மலர் விழி சிவக்க தயிர்க்கறி சமைக்கிறாள் தலைவி

—o—

## தலைவன் புகழும் போதோ நாணித் தலை குனிகிறாள்

—||—

## குறுந்தொகை தரும் இனிய காட்சி

—வி. ச. லிங்கம்—

அவள் ஒரு அழகி. கண்டவர் மயங்கும் கட்டழகுக் காரிகை. செல்வக் குடும்பத்தில் பிறந்து செல்லக் குழந்தையாக வளர்ந்ததால் செல்வத்தின் மெருகு அவள் உடம்பெங்கும் பொலிந்து விளங்கியது. இந்தக் கட்டழகு மங்கை ஒரு கட்டிளங் காளையைக் காண்கிறாள். கண்ணொடு கண் நோக்கின. காதல் பிறந்தது. முடிவு இருவருக்கும் இனிதே திருமணம் நிறைவேறியது.

இப்பொழுது காதல் தம்பதிகள் இருவரும் தனிக் குடித்தனம் நடத்துகிறார்கள். வீட்டில் சமையலுக்கென சமையற்காரி இருக்கவும் தனது தலைவன் பேற்கொண்ட பேரன்பாலும், அவனை மகிழ்விக்கவும் கருதி தன் கையாலேயே சமையல் செய்து கொடுக்க அவள் ஆசைப்பட்டாள்.

தயிர்க் குழம்பிலே தனது தலைவன் தணியாத விருப்புடையவன் என்பதை அவள் அறிவாள். ஆகவே நல்ல, முற்றிய தயிர்க் கட்டியாக எடுத்துக் கொள்ளுகிறாள். தன்னுடைய கார்த்திகைப் பூப்போன்ற மென்மையான விரல்கள் சிவந்து, நொந்து, வலியெடுக்கும்வரைக்கும் அத்தயிரைப் பிசைந்து அடுப்பில் வைத்துப் பதம் செய்கிறாள். இந்த நேரத்தில் அவள் இடையிலே சுற்றப்பட்டிருந்த ஆடையானது நெகிழ்கின்றது. அவள் கவனமெல்லாம் தயிர்க் குழம்பின்மேல் இருந்ததால் அவள் ஆடை நெகிழ்வதை அறியவில்லை. பின் அதைக் கவனித்ததும், கைவிரல்களில் தயிர் ஒட்டிக்கொண்டிருப்பதையும் கவனியாது அந்தக் கையாலேயே ஆடையைச் சொருகிக் கொள்கிறாள். இந்தச் செயலானது அவளுக்கு முன்பு சமையல் செய்வதில் அனுபவமில்லாமையைக்காட்டிக்கொடுத்து விடுகிறது.

அவளுடைய கண்கள் குவளை மலர் போன்று ஆழமும் குளிர்ச்சியும் பொருந்தியவை. அவளுடைய அழகிய விழிகள் பேசும் மொழியில் தலைவனே பல முறை சொக்கிச் செயலிழந்து விட்டிருக்கிறான். இத்தகைய அழகுவாய்ந்த அவளுடைய மை தீட்டப்பட்ட கண்களில் தயிர்க்குழம்பைத் தாளிப்பதனால் உண்டாகிய புகைபட்டு கண்கள் கலங்கவும் அதைக் கவனியாமல் தயிர்ப்பாகம் கெட்டு விடுமோவென்று அஞ்சி துழாவித் துழாவிச் சமைக்கின்றாள்.

தலைவன் சாப்பிட வந்து உட்காருகிறான். அவன்

(13-ம் பக்கம் பார்க்க)

வேல் தைலம்
மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள் கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

விலை ரூபா 1-25

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

S. P. S. ஜெயம் கம்பெனி,
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஏ. ஆதம் லெவ்வை,
அக்கரைப்பற்று.

கே: உங்கள் பொழுதுபோக்கு என்ன?

ப: ஆயிரக்கணக்கில் வந்து குவியும் கேள்விகளிலிருந்து அசட்டுக் கேள்விகளை ஒதுக்கித் தள்ளுவது.

ஃ

எம். லூர்துமேரி, மூதூர்.

கே: விரைவில் யாழ்ப்பாண பிரதிநிதிக்கு ஒரு மந்திரிப் பதவி கிடைக்கப் போவதாக எனது சினேகிதி கூறுகிறாள். உண்மையை அறிய விரும்புகின்றேன்?

ப: இல்லை. அதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் "தமிழர்" ஒருவர் மந்திரிப் பதவி வரம்கோரி நீண்ட காலமாக ஒற்றைக் காலில் ஊசி மேல் நின்று தவம்செய்கிறாரே!

ஃ

த. யோகராசா, 2ம் குறிச்சி,
கல்முனை.

கே: நாம் உலக சரித்திரம் படிப்பதனால் என்ன நன்மை?

ப: உலக நாடுகளைப் பற்றிய புளித்துப்போன பழைய செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம்.

ஃ

வ. பாலசவுந்தரி, திரியாய்.

கே: அன்புள்ளகுயுக்திமாமா! தங்களை யாரும் காதலிப்பது இல்லையா?

கே: எனது படத்தைப் பார்த்தால் யாராவது என்னைக் காதலிப்பார்கள் என்று உங்களுக்குத் தோன்றுகிறதா?

ஃ

மு. தருமலிங்கம்,
பூண்டுலோயா.

கே: அமெரிக்காவின் உதவி நிறுத்தத்தால் இலங்கை பாதிக்கப்படுமா?

ப: ஆம். பாதிக்கப்பட்டுள்ளது. அந்த நஷ்டத்தைத் தவிர்க்க இப்பொழுது வேறு வழிவகைகளைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

ஃ

ஸ்ரீஸ்கந்தராஜா கந்தையா,
பொரளை.

கே: தொழிற்சங்கங்கள் அரசியலில் பங்கு கொள்வது சரியா?

ப: அரசியல் இன்றேல் தொழிற் சங்கமில்லை. தொழிற் தகராறில் அரசாங்கம் தலையிடும்போது அது அரசியலாக மாறிவிடுகிறது. அரசியல்கலப்பற்ற தொழிற் சங்கமென்பது சுயநலமிகளின் பிரசாரம்.

ஃ

நா. வடிவேலு, சாவகச்சேரி

கே: இலங்கையில் வரவர எல்லாப் பொருள்களின் விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகின்றன. காரணம் என்ன?

ப: அதற்குக் காரணம் பிரதமரே கூறிவிட்டார். இலங்கை "சோஷலிஸ்ட்" நாடாக மாறிவருகிறதென்று.

ஃ

சூ. மரியதாசன்,
உருத்திரபுரம்.

கே: இந்தியா—சீன சண்டையை விலக்கப்போன சிறிமாவோ வெற்றியுடனா அல்லது தோல்வியுடனா திரும்பினார்?

ப: அவர் முயற்சி பாதி வெற்றி பாதி தோல்வி-சீன அவரைப் பிரமாதமாக வரவேற்று தலையில் ஒரு குட்டு வைத்து விட்டது.

ஃ

மு. சுப்பிரமணியம்,
மாவிட்டபுரம்.

கே: தமிழர் பெரும்பான்மையோராக வர வழி யாது?

ப: தமிழரசு ஏற்பட்டால் தமிழ்ப் பிரதேசத்தில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையோராகி விடுவர்.

கே: இந்தியாவின் அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டு ஆட்சியை தி. மு. க. கைப்பற்றினால்?

ப: ஐனாதிபதி தமது விசேட அதிகாரத்தைக் கொண்டு தமிழ்நாட்டு அரசாங்கத்தைக் கலைத்து விடக்கூடும்.

ஃ

ஏ. எம். பாருக், பலாங்கொடை.

கே: கல்வி மந்திரி இந்நாட்டு முஸ்லிம்களுக்கு என்னதான் அப்படிச்செய்து விட்டார்?

ப: "ஒன்றும்செய்யவில்லை. செய்திருந்தால் பகிரங்க மேடையில் நிரூபியுங்கள் பார்க்கலாம்" என்று கல்வி மந்திரிக்கு சவால் விட்டிருக்கிறாரே திரு. தஹநாயக்கா.

ஃ

சு. மயில்வாகனம்,
நுவரெலியா.

கே: நியமனப் பிரதிநிதி திருவாளர் தொண்டைமான் அவர்கள் தற்சமயம் என்ன செய்து கொண்டு இருக்கிறார்?

ப: கனவு காண்கிறார். வட்டமேசை மகாநாடு பற்றி.

ஃ

கே. ராஜூ, மத்துகம,
மத்துகம.

கே: நம் பாராளுமன்றத் தருகில் இருக்கும் திரு. இராம அழிப்பதாகக் கனவு கண்டேன். அப்படி நடந்தால்?

ப: அழிந்துவிடும். நீங்கள் வெறும் கனவல்லவா கண்டீர்கள்! தமிழ் பேசும் இனமே இன்றுபத்தினியைப் போல கொதித்தெழுந்து விட்டதே!

ஃ

ஒற்றுமைப் பிரியன்,
ஏழாலை மேற்கு.

கே: தனிச் சிங்களமென்று அறைகூவிய திருவாளர் ஜே.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.

ஆர். ஜெயவர்த்தனவும், பிலிப் குணவர்த்தனவும் தற்பொழுது தமிழ் மக்களின் ஒத்துழைப்புடன்தான் ஆட்சி செலுத்த வேண்டுமென்று கூறுவது எதைக் காட்டுகிறது?

ப: தமிழ் பேசும் மக்களின் தலையைத் தடவ மற்றொரு முயற்சி என்பதைக் காட்டுகிறது. 1965ல் பொதுத் தேர்தல். தமிழ் பேசுபவர்களின் வாக்குகளை வேட்டையாட வடிக்கும் முதலைக் கண்ணீர் இது.

கே: தனிச் சிங்களச் சட்டத்துக்குப் பின் பதவி வகித்த எந்தப் பிரதமராவது வட பகுதிக்கு விஜயம் செய்தாரா?

ப: இல்லை! விஜயம் செய்யத்தான் முடியுமா?

ஃ

எஸ். கே. சண்முகநாதன்,
வண்ணார்பண்ணை.

கே: குயுக்தி மாமா! நாம் பஸ்களில், பிரயாணம் செய்யும் போது, இட நெருக்கடியான நேரங்களில், எழுந்து பெண்களுக்கு இடவசதி செய்து கொடுத்தால், அதை வேறு விதமாக நினைத்துக்கொள்ளும் பெண்களுக்குத் தாங்களென்ன கூறுகிறீர்கள்?

ப: [illegible] தவறு. பெண்கள் எவ்வகையிலும் ஆண்களுக்குச் சளைத்தவர்களல்ல; அவர்களைக் கோழைகளெனக் கருதி எழுந்து இடவசதி செய்து கொடுப்பதில் அவர்கள் சலனம் கொண்டு, வேறு விதமாக நினைத்துக்கொள்வது நியாயமே!

ஃ

ரஞ்சனி வேல்முருகன்,
காரைதீவு.

கே: தமிழரசுக் கட்சியினரின் அடுத்த நடவடிக்கையைக் கூற முடியுமா?

ப: முதல் நடவடிக்கையும் அடுத்த நடவடிக்கையும், எல்லா நடவடிக்கையும் உரிமைப் போராட்டமே!

ஃ

வா. ஜெயரெத்தினம்,
கண்டி.

கே: ஓய் குயுக்தியாரே! திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வந்த புதிய அரிசி, மா, விலைகளின் படி, தமிழ்ப் பிரதேசங்களிலொன்றாகிய யாழ்ப்பாணத்திற்கு மட்டும் ஒரு கொத்து அரிசிக்கு நாலு சதம் கூட்டி ஓர் அறிக்கை நம் அரசாங்கத்தால் விடப்பட்டிருக்கின்றதே! இதைப் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

ப: அரிசி விலையைக் கூட்டமாட்டோமென்று கூறிக் கொண்டே ஏதோ ஒரு சாக்குப் போக்கு கூறி இரவோடு இரவாக விலையைக் கூட்டிவிட்டனர். அதுவும் யாழ்ப்பாண மக்கள்தான் அதிக விலை கொடுக்க வேண்டுமாம். அரிசி விலைஉயர்வை எதிர்த்த கட்சிகள் இப்பொழுது என்ன செய்கின்றனவோ?

ஃ

இரகுநாதன், சாவகச்சேரி.

கே: 1956 ஜனவரி 17ம் திகதி கூடிய களனி மகாநாட்டில் தனிச் சிங்களம் மட்டும் என்று யூ. என். பி. இயற்றிய நிர்மானத்தை அறியாமல் ஒரு சில தமிழர்கள் யூ.என்.பி. ஆட்சிக்கு வந்தால் சம அந்தஸ்து தந்து விடுவார்கள் என்று கனவு காண்கிறார்களே.

ப: ஒரு 'காசின்' இரு பக்கங்களே சுதந்திரக் கட்சியும் யூ. என். பியும். சம அந்தஸ்துக்கும் யூ. என். பிக்கும் காதவழி தூரம்.

ஃ

செல்வி. எம். எம். பாத்துமுத்து,
கொழும்பு-12.

கே: ஆண்கள் பெண்களைப் பார்ப்பது எதற்காக?

ப: அன்னையைப் பார்த்த பழக்கம் தான் காரணம்.

ஃ

ராஜராஜன், ஆரையம்பதி.

கே: நான் ஒரு பட்டதாரி. இந்த அரசாங்கத்தில் ஏதாவது உத்தியோகம் வாங்கித்தர முடியுமா உம்மால்?

ப: என்னால் முடியாது. உத்தியோகம்தேடிக்கொடுக்கும் பணியில் பலர் இருக்கிறார்கள். உம்மிடம்பணமிருந்தால் அவர்களைப்போய்அண்டிப்பாரும். பலன் கிடைக்கும்.

பாரதப் போருக்கு நமது பங்கு

## கற்ற வித்தை தீட்டுவோம்!

—: திமிலைத் துமிலன் :—

சத்தியம் அகிம்சையென்ற தாரகத்தை ஏந்தினோர்
பித்தரென் றெழுந்தரோவீண் பேயரென் றெழுந்தரோ?
வித்தை முற்று பாரதத்தில் வீரமென்று செத்ததோ?
புத்திகெட்ட சீனரைப் பொடித்திடப் புறப்படு!

பாரிடத்து ஒற்றுமை படைப்பமென்று நின்றதால்
வீரமற்ற கோழையென்று வீணர்கள் கணிப்பதோ?
சோரமுற்று விட்டதோ துடிக்குமெங்கள் தோளடா!
பாரதத்து வெற்றியே படைத்திடப் புறப்படு!

வீரர்கள் தியாகமூச்சில் மீண்டதெங்கள் பாரதம்
பீறுகட் குருதியிற் பிறந்ததெம் சுதந்திரம்
மாறுபட்ட சீனர் எங்கள் மண்ணில் ஆட்சி நாட்டவா!
வீறுகெட்ட நீசரை விரட்டிடப் புறப்படு!

கற்பெறித்த பொற்புமாதர் கண்ணில்வீர மூட்டுக.
அற்புதச்செல் வந்தர்பொன்னை அள்ளியள்ளி நீட்டுக.
மற்றுநற் றொழிற்குலத்து வாணர்சேவை கூட்டுக
கற்றவித்தை தீட்டுவம் கனலெனப் புறப்படு!

நாதன், அருணாசலம் அவர்களின் சிலைகளும் ஸ்டாலின் சிலையைப்போல அகற்றப்பட்டால்.........

ப: ஆச்சரியப்படவேண்டியதில்லை. நன்றி கெட்டவர்கள் எதையும் செய்யத் துணிந்தவர்கள்.

ஃ

வ. பாலசுந்தரி, திரியாய்

கே: தமிழினத்தை எல்லா வழியாலும் காட்டிக் கொடுக்கும் சில பிரமுகர்கள் கடவுள் பக்தியில் மட்டும் முன்னுக்கு நிற்பதேன்?

ப: துரோகத்தை மறைத்து மக்கள் கண்ணில் மண்ணைத் தூவ கடவுள் பக்தியையும் பயன்படுத்துவதற்காக.

ஃ

அபூர்வப்பிறவி, துறையூர்.

கே: தமிழ் இனத்தையும் மொழியையும் படிப்படியாக விழுங்கி வரும் பதவி மோகம் பிடித்த சிங்கள ஆட்சியினை [illegible] நான் பாண்டி நாட்டை எரித்த பத்தினிக் கண்ணகி [illegible]



## விற்பனையாளர்கள் தேவை

பின்வரும் ஊர்களில் 'சுதந்திரன்' விற்பனையாளர்கள் தேவை. முன் பணம் கட்டக் கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

பொரத்துவில் — கிரான்
எஹலியகொட — முள்ளியவளை
கொத்மலி — உபிலங்குளம்

நிர்வாகி
"சுதந்திரன்"






ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி
கொழும்பு-14.

டெலிபோன்: 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

காலைகண்டன்

உற்றாரிருந்தென்ன! உறவு இருந்தென்ன! பெற்றவளிருந்தென்ன! பேணி வளர்க்கும் தந்தைதான் இருந்தென்ன! இத்தனை பேரையும் விற்ருவது ஒரு பதவி கிடைத்தால் அதுவே போதும் என்ற அவாவினுல் உந்தப்பட்டு, ஆசைக்கு அடிமையாகிஅலேயும் அப்பாவிகள் மலிந்துவிட்டனர்.

ஈன்ற அன்னையையோ, தாலிகட்டிய மனேவியையோ, உடன்பிறந்த சகோதரியையோ மானமிழக்க வைத்தாவது தன் வயிற்றை நிரப்பிவிட வேண்டுமென்ற மதோன்மத்தர்கள் நிறைந்து விட்டனர்.

இலங்கைவாழ் தமிழ் பேசும் இனத்துள் இத்தகைய பதவிப் பித்தர்களும் தன்னலம் விரும்பிகளும் தோன்றியதஞலேதான் தமிழ் அன்னே இன்று தலேகுனிந்து தன் வளமனேத்தையும் இழந்து பரிதவிக்கின்ருள்.

இந்நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததும், அச் சுதந்திரத்தைத் தாங்கள் மட்டும் ஆண்டு அனுபவிக்க வேண்டுமென்ற ஒரே ஆசை கொண்ட பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை விழுங்கி ஏப்பமிட எண்ணி, திட்டங்களேத் தீட்டியது; செயலேயும் துரிதப்படுத்தியது.

மெல்ல மெல்லத் தமிழ் பேசும்மக்கள் ஒதுக்கப்பட்டு வந்தார்கள். உருவாகும் சூழ்நிலேயை உன்னிப்பாய்க் கண்ட உத்தமர்கள் உண்மையை எடுத்துரைத்தனர்.

ஒத்துழைப்பு வேடம் புனேந்து, ஒற்றுமைக்கு வழி தேடியவர்கள் எஜமானர்களின் மேசையிலிருந்து விழும் எலும்புத் துண்டுகளே எண்ணிக் கொண்டிருக்கும் நிலேக்கே தம்மைத் தாழ்த்திக்கொள்ள நேர்ந்தது.

இனத்தைதவிழிக்கவைத்து, இன்னல் துடைக்க எண்ணி, ஏறுநடைபோட்டு எழிலாக நடந்தவர்கள், எத்தர்களாஞர்கள், ஏமாளிகளாஞர்கள். எடெல்லாம் புகழ்பாட எத்திசையும் பேர் சிறக்க போர் முரசு கொட்டியவர்கள், பேராசை கொண்டு, பதவிதனே நாடி, பணத்தை விளேயாடி படுதோல்வி கண்டார்கள். காப்பாற்றப் போனவர்கள் காட்டிக் கொடுத்தார்கள்.

புண்பட்ட நெஞ்சினராய் புலம்பி அழுதவர்க்கு தக்க வழிகாட்டி, துணேகள் பல புரிந்து போராடும் கூட்டமொன்று புறப்பட்டது. மக்கள் வலு கொடுத்தனர், வாய்ப்புக் கொடுத்தனர்.

போரும் தொடங்கியது. சூழ்ச்சி வலேவீசி, சூதுதனே ஏவி சங்கடத்தைக் கொடுத்தனர் ஆளவந்தவர்கள்.

ராணுவத்தை ஏவி மக்களே மருட்டினர். தத்தளித்த குலம் தலேவணங்க மறுத்தது.

ஆனுல் காட்டிக்கொடுக்கும் கயமை வழிவந்து, கூட்டிக்கெடுக்கும் கும்பலின் பிரதிநிதிகள் நாளுக்கு நாள், வலுவிழந்த மக்களின் வளமான எதிர்ப்பை முறியடிக்க சூதுகள் செய்தனர். தலேமைதனே இழந்து தவித்த மக்களிடம், தக்க தருணம் பார்த்து தீவினேகளே விதைத்தனர்.

ஆளவந்தோரும் அடிமைப்படுத்த சந்தர்ப்பம் எங்கே என்று எண்ணி ஏங்கிக்கொண்டிருக்கும் போது இலகுவானவழி கிடைத்தது. நஞ்சு தடவிய உணவை நாசுக்காகஊட்டியது. வஞ்சமுனைராதோர் வாயார உண்ண ஆரம்பித்தனர்.

### கிராம சேவகர் நியமனம்......

கிராம சேவர்கள் நியமனத்தில் ஏராளமான ஊழல்கள் மலிந்துள்ளன என்பது பலராலும் அறியப்பட்ட பரம இரகசியமாகும். 'கிராம சேவகர் நியமனம் பெற்றுத் தருகிறேன்' என்று ஆசை வார்த்தை கூறிக் கொண்டு ஆளுக்கு ஆயிரமும், ஐந்நூறும் வாங்கி ஒப்பமிட்ட மக்கள் பிரதிநிதி ஒருவரைப் பற்றி அம்மானுக்குச் செய்தி கிடைத்துள்ளது. விரைவில் சந்தியில் சந்திக்கலாம்.

ஆமாம்...பதவி உயர்வையும், பணத்தின் உயர்வையும் காட்டிப் பலரை ஏமாற்றினர். ஒத்துழைப்புப்பாடி ஒய்யார வாழ்வு தேடும் உலுத்தர்கள் வெஞ்சாமரை வீசுகின்றனர். பஞ்சணேயும், பல்சுவை உணவும், படாடோபமும், பதவியும், பணமும் பெறுகின்றனர் வஞ்சகர்கள்.

செய்வதறியாது, தீமைதனேயறியாது உண்மைதனேச் சீர்தூக்கிப் பாராது திக்குமுக்காடுகிறது இனம்.

***

தமிழ் பேசும் இனத்தின் அவல நிலேயை உணர்ந்து அதற்கான பரிகாரம் தேட முனேந்த தமிழரசுக் கட்சியைக் குழிதோண்டிப் புதைக்க முயலுகிறது அரசாங்கம். குழிபறிக்க உதவி புரிகின்றனர் நம்மிடையில் பிறந்த நம் சகோதரர்கள். அத்தனேயும் பதவிக்காக.

சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து தலேவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதும் இந்தத் துரோகிகளின் தீச் செயல்கள் நாட்டின் நாலாபக்கமும் திரண்டெழுந்து தமிழ் பேசும் இனத்தைச் சிதைக்க ஆரம்பித்தன. தமிழ் பேசும் இனத்தைக் காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்திற்காக ஆளவந்தவர்களிடம் அச்சாரம் பெற்றுவிட்டார்கள்.

உடன் பிறந்த அண்ணனேயே காட்டிக் கொடுத்து இலங்கையின் மன்னனுனே விபீடணன்! அவனுக்குக் கிடைத்ததுபோல் இந்தத் துரோகச் சின்னங்களுக்கும் பதவிகள் கிடைத்தன.

***

இப்படிக் காட்டிக் கொடுத்துப் பதவிபெற்ற ஒரு சீமான் ஒரு மந்திரிப் பதவியையும் எதிர்பார்த்து ஏமாந்ததுதான் மிச்சம் என்று தெரிகிறது. மந்திரிசபையில் மாற்றம்ஏற்படும், மகத்தான மந்திரிப் பதவி ஒன்று நிச்சயம் எமக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்த்த ஒருவருக்கு இப்பொழுது இருக்கும் பதவிக்கும் 'அதோகதி' ஏற்பட்டு விடும்போல் இருக்கிறது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு அரசாங்க கார்ப்பரேஷன் ஒன்றில் பொறுப்பான பதவி வகிக்கும் இந்த மகான் தனக்குச் சாதகமானவர்களுக்குப் பலபதவிகளேப் பெற்றுத் தந்தார்.

## பதவி வேண்டுமா? காசெடு........!

'நீ ஒரு பட்டதாரியா? உனக்கு ஒரு வேலே வாங்கித் தருகிறேன். எடு ரூபாய் ஐயாயிரம்.' இப்படியும் சிலர் இன்று பணம் தேட முனேகின்றனர். அம்மானிடம் இந்த நபர்களே சந்திக்குக் கொண்டு வரக் கூடிய தகவல்கள் அதிகம் கிடைத்துள்ளன. விரைவில் சான்றுகளுடன் சந்தியில் இடம்பெறும்.

ஆட்சியாளர்களிடம் தன் இனத்தைக் காட்டிக் கொடுப்பதனுல் ஏற்படும் நல்லெண்ணத்தை அடிப்படையாக வைத்து பல இடங்களிலும் தனது செல்வாக்கை ஸ்திரப்படுத்த முயன்றதனுல், சலுகையை துஷ்பிரயோகம் செய்யும் 'தரித்திரம்' என்ற பெயரை வாங்கிக்கொண்டாராம்.

இத்தகைய சூழ்நிலேயில்தான் இவருடைய செல்வாக்கும், சிபார்சுகளும் மந்திரிமார்களிடமும், வேறு ஸ்தாபனங்களிலும் பாதிக்கப்பட்டுப் போய்விட்டனவாம். தனது பதவியிலிருந்த சில விசேட அதிகாரங்களும் பிடுங்கப்பட்டு விட்டனவாம்.

காட்டிக்கொடுத்த தம்பிரான் நாளே ரோட்டுக்கூட்டுவார் என்பது பொது மக்களின் கருத்து!

***

தமிழ்த்தாய் வயிற்றில் பிறந்து, தமிழ்த்தாயின் பாலே உண்டு, தமிழைப் படித்து, இறுதியில் தமிழைக்கொண்டுவயிறுபிழைக்கும் தன்மானம் சிறிதுமற்ற தமிழாசிரியர்கள்தான் இம்முறை தமிழ்த் தாய்க்குத் துரோகமிழைத்த துரோகிகளில் அதிகமாக விருந்தனர் என்ற செய்தி கேட்டுத்தாய்மார்கள் தவிக்கின்றனர்.

மானமே பெரிதென வாழ்ந்த மன்னர்களேப்பற்றியும், வீரத்தைப்பற்றியும், விவேகத்தைப்பற்றியும், பகுத்தறிவைப்பற்றியும் நாட்டின் வருங்காலச் சந்ததியினருக்குப் புகட்டும் ஆசிரியர்கள் தாஞ துரோகத்தின் முதலிடத்தைப் பிடித்துக் கொள்ள வேண்டும்?

ஐயோ! தமிழ்த் தாயே! இத்தகையோரையுமா நீ படைத்தாய்!

***

இம்முறை சிங்களப்பரீட்சை எடுத்தவர்கள் பாடு பேரதிர்ஷ்டம். பரீட்சை மண்டபம் அமைதியோடு பரீட்சை எழுதப்பட வேண்டிய இடம்; கேளிக்கைக் கொட்டகையாகத் திகழ்ந்தது. மண்டபமெங்கும் ஒரே இரைச்சல்! பரீட்சை தொடங்கி முடியும் வரை சிரிப்புக்கும் கும்மாளத்துக்கும் ஓய்வில்லே. இவற்றுக் கிடையிலே "உஸ்ஸ்..." என்ற ஒலியுடன் ஒருருவம் எழுந்து நின்றது—பேசத் தொடங்கியது:

"முதலாவது கேள்வியிலுள்ள இடைவெளிக்கு இரண்டாவது சொல்லே வைத்து நிரப்புங்கள்" எல்லாரும் தீவிரமாக எழுதுகிருர்கள்.

"அடுத்த கேள்வியின் இடைவெளிக்கு முதலாவது சொல்லே வைத்து நிரப்பலாம்" எல்லாரும் நிரப்புகிருர்கள். அப்போது பரீட்சை மேற்பார்வையாளர்—ஒரு பெண் வந்து; "தயவு செய்து அமைதியாகப் பார்த்தெழுதுங்கள்" என்று பணிவுடன் கேட்டுக்கொண்டதற் கிணங்க ஓரளவு அமைதி நிலவிச் சிறுபொழுதில் விடைத்தாள்கள் பரீட்சார்த்திகளுக்குள் கைமாறப்படுகின்றன— பரீட்சையும் முடிகிறது. இது, மட்டக்களப்பிலுள்ள ஒரு பிரபல கல்லூரியில் சிங்களப் பரீட்சை நிகழுகையில் நிகழ்ந்த நாடகம்—காட்சியாகும்.

மாபெரும் சிங்கள ஆசிரிய சங்கத்தின்ஒத்துழைப்போடு தமிழாசிரிய சங்கங்கள் எழுப்பிய உரிமைக் கிளர்ச்சியினுல்; "தமிழாசிரியர்கள் சிங்களம் படிக்கத் தேவையில்லே" என்ற நிலே திட்டவட்டமாக உருவாகியுங்கூட சில கருங்காலிகள் சிங்களப் பரீட்சைக்குத் தோற்றியது தமிழ் ஆசிரிய குலத்துக்கே பெரியதொரு அவமானம்.

***

பல வருடங்களாக ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒரு கூட்டுறவு சமா

(13-ம் பக்கம் பார்க்க)

★ சூழ்ச்சி வலேயில் வீழ்ந்த சூது மதியினர்

★ இனத்தை விற்றவரின் பதவி அதோகதி

★ சிங்களப் பரீட்சைக்குத் தோற்றிய தமிழாசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைப் பூங்கா

# அறக் கடலே வாழ்க

(பாண்டியூரன்)

தெள்ளுதமிழ் அமுதத்தில் தேனேப் போன்ற
தெய்வநெறி அறம்பொருளாம் இன்பம் தந்த;
வள்ளுவனே யுன்னடிக்கே வாழ்த்துகின்றேன்.
வழிவகுத்த தமிழன்நீ யின்று வாழ்ந்தால்;
உள்ளமெலாம் வெடித்துருகி உயிரைப் போக்க
ஒருகணமும் தாமதியாய்; இன்றுன்செஞ் சொல்
வெள்ளமெனப் பெருகிறது உலகின் திக்கில்
வெளிப்பகட்டில் மிளிர்கிறது வெறியர் சொல்லில்.

கற்றதனுல் என்னபயன் என்று கல்வி
கற்பித்த கவித்திருவே! மனிதர் இன்று;
உற்றபயன் கண்டறியார் மேடை யேறி
உளறுகிருர்! உலகத்தைப் படைத்தார் போன்று;
நற்றவங்கள் எவ்வெவர்க்கும் நாட்டிச் சென்ருய்
நாம்தமிழர் கண்ணிழந்து நடத்தப் பட்டோம்;
வெற்றியிலாத் தமிழரென வாழநாங்கள்
விரும்பவி(ல்)லே வேரோடு அழிவோம் சத்யம்!

அல்லற்பட் டாற்றுது அழுத கண்ணீர்
அழித்துவிடுஞ் செல்வத்தை யென்றீர் ஐய!
சொல்லத்தான் நாக்கூசிச் சோர்ந்து கண்முன்
சுருட்படமாய் மறைந்தனஅக் காட்சியாவும்;
தொல்லேபல சூழ்ந்திடினும் துணிந்துநின்றன்
தூயஅடிச் சுவட்டினேயே தொடர்ந்து செல்வோம்!
வல்லவனே! தமிழ்த்தாயின் மறையின் தேவா!
வாழ்த்துகிறேம் நின்பாதம் மறவோம் ஐய!

மலரினிலும் மெல்லிதடா காமம் என்ற
மாண்புடைமை காமத்தில் மாற்றித் தந்தாய்!
சிலரதிலே செவ்விதலேப் படுதல் கண்டோம்
சீரழிவு பெருமளவில் செழிக்கக் கண்டோம்!
உலருகின்ற மலராகக் குரங்கின் கையில்
உருக்குலேயும் காதலினே உணர்வார் இல்லே;
நிலேமையிது மாறும்நாள் எந்நாள் என்று
நெஞ்சுருகிக் கேட்கின்றேன், நீரே சொல்லும்!

அறவழியிற் சென்றுபொரு ளீட்டி யின்பம்
அடைகின்ற இல்வாழ்க்கை அமைத்த தேவா!
புறமுதுகு காட்டுவது புன்மை; நெஞ்சிற்
புண்ணேந்தி மாள்பவனே புறத்தின் செல்வன்!
மறவருக்கு வேறென்ன மானம் அன்றி
வாழ்வினிலே துணேசத்(தி)ய வாட்போ ரென்று
உரமளித்த அறக்கடலே! உந்தன் பாதம்
ஊழிவரை யெம்நெஞ்சில் ஊன்றிச் செல்வீர்!




# பல கட்சிகளாய்ப் பிரிந்து பிளவுபட்ட மலையகத்துக்கு ஒரு கட்சி வந்துவிட்டது

## திசை கலங்கி நிற்கும் தொழிலாளிக்கு கலங்கரை விளக்கம் தமிழரசுக் கட்சியே

### இல. நாகலிங்கம்

சிங்கம், புலி, சிறுத்தை வாழ்ந்த காடு, நாடாக, கனி தரும் சோலையாக, வளமற்ற மலையகம் வண்ணத் தேயிலை குலுங்கும் கலையகமாக, வற்றிய நீரூற்றுக்கள் ஜீவ நதிகளாக மாற்றியமைத்து ஈழத்தை நிலமகளின் நெற்றித் திலக மாக்கியவன் மலைநாட்டுத் தமிழன்! இதை யாரும் மறுக்க முடியாது.

மலை நாட்டவருக்கென்று ஒரு தொழிற் சங்கம் இல்லாமல இன்னல்பட்ட காலத்தில் தான் பாரதப் பிரதமர் நேருவால் "இலங்கை இந்தியக் காங்கிரஸ்" ஆரம்பிக்கப்பட்டது.

அக் காலங்களில் தொழிலாளி ஒரே தொழிற் சங்கத்தில் இருப்பதையும், அவன் வலிமையையும், ஆற்றலையும், கண்ட வெள்ளைத் துரைமார் தொழிலாளிக்குத் தேவையான வசதிகளைச் செய்து தந்தனர்.

தொழிலாளியும் சீரும் சிறப்பும் கொண்டு நல்லபடியாக வாழ்ந்தான்.

தமிழனின் தலைவிதியோ என்னவோ அவன் சரித்திரம் மாறுபட்டது கூடையழகிக்கு ஒரு கட்சி! கொண்டையழகிக்கு ஒரு கட்சி! குமாரிக்கு ஒரு கட்சி! கோபாலுக்கு ஒரு கட்சி! என்று நல்ல மரங்களில் புல்லுருவிகள் பாய்வதைப் போல் கட்சிகள் பெருகின.

தொழிலாளியோ, கொழுகொம்பை அணைக்கமுடியாத கொடியாய், நூலேணியில் சிக்கித் தவித்துச் சிதறும் பட்டமென அப்பனுக்கு ஒரு கட்சி! ஆண்டி மகன் சுப்பனுக்கு ஒரு கட்சி! என்று மரம் விட்டு மரம் தாவினர்.

இந் நிலையில் மீண்டும் ஒரு தலையிடி! அதுதான், 48-ம் ஆண்டில், 'இந்தியர் பாகிஸ்தானியர்' பிரஜாவுரிமைச் சட்டம் ஐக்கிய தேசிய கட்சியாரால் கொண்டு வரப்பட்டது.

இதைத் தமிழ்க்காங்கிரஸ் ஆதரிக்கவே, மலைத் தமிழனுக்கு விரோதிகளாகிய இயக்கத்தை விட்டு நல்லவர்கள் வெளியேறி நாட்டிற்குத் தேவையான தமிழரசை ஸ்தாபித்தனர்!

வட மாகாண தானை திரண்டது! தமிழர் மனை சிறந்தது! துந்துபி முழங்கியது! குடா முழா அதிர்ந்தது! அங்கு வாழ் தமிழர் வாழ்வு மலர, போர் முரசு கொட்டினர்.

ஆனால், மலையகத்தில் 'தமிழரசு' கால் எடுத்து வைக்கவில்லை. காரணம்? அங்கு வாழ் தமிழர் இன்று இல்லாவிடினும், நாளை ஒன்று கூடுவர் என்று எண்ணினர்!

மலையகத்திலோ, தொழிற் சங்கங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து மோதியதின் காரணமாக, மேலும் மலைத் தமிழன் கால்கள் அடிமைச் சங்கிலி கொண்டு பிணைக்கப்பட்டன! விலங்கு பூட்டப்பட்டுவிட்டது! மலையகம் வீணர்கள் கோட்டமாகியது.

இந்நிலையில் 54-ம் ஆண்டின் இடையில் டெல்லி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்தத்திற்கு முன் போக்குவரத்து வசதி இருந்தது. அது துண்டிக்கப்பட்டது. முன்பு இலங்கைப் பிரஜைகள் அல்லாதவர்க்கு விஸா மறுக்கப்பட்டது. பின்பு இலங்கைப் பிரஜைகளுக்கும் மறுக்கப்பட்டது. எனவே, அந்த ஒப்பந்தத்தில் கலந்து கொண்டோரின் செயல் ஒரு கேலிக் கூத்தாய் முடிந்தது.

காலம் மாற, மாற, மலைத் தமிழன் கதறினான், கண்ணீர் விட்டான்! கால வெள்ளத்தில் அவன் கண்ணீர் ஓடைகளிலும், நதிகளிலும், செங்குருதியாய்ப் பாய்ந்தோடியது!

இங்கோ, செல்வச் செருக்கால் செய்வதறியாது தொழிலாளியைச் சிதைத்தனர். இந்நேரத்தில்தான் குமுறும் எரிமலையாக, கொந்தளிக்கும் கடலாக மாறியது தமிழரசுக் கட்சி! ஈழத்தை ஞாலத்தில் ஏற்றிவைத்த வனை வாழ வைக்க, அவன் கண்ணீரைத் துடைக்க, வீழ்ந்து விட்டவனை விடுதலை எனும் சொல்லால் எழுப்ப மொழி வாழ, இனம் வாழ, வந்துவிட்டது மலையகத்தில்!

எனவே, மலைத் தமிழர்களே! நெக்குருகிய உங்கள் நெஞ்சத்திற்கு அமைதி தேடிக்கொள்ள வாருங்கள்! ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களாகிய நாம் யாவும், மலையகமும், திருமலையும், மட்டு நகரும், மன்னருமாக ஒன்று பட்டு ஒரே கொடியின் கீழ் இருந்து உரிமைப் போர் தொடுப்போம்.

# நமது முக்கிய குறிக்கோள் அடிப்படை உரிமைகள் பெறுவதே

## அதற்காகவே போராடுவோம் என்கிறார் இ. தொ. க. செயலாளர்

"ஆரைப் பெயர் போடுவதிலிருந்து ஆள் குறைப்பு வரை மலையக தோட்டத் தொழிலாளரின் சகல அன்றாட குறைபாடுகளுக்கும் பரிகாரம் காணும் வகையில் நாம் பணி புரிவோம். என்றாலும் நமது முக்கிய குறிக்கோள் மலையகத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளைப் போராடிப் பெற்றெடுப்பதே. ஏனென்றால் அடிப்படை உரிமைகளை பெற்றெடுப்பதன் மூலமே பொருளாதார வசதிகளையும் பேணிப் பாதுகாத்துக் கொள்ள முடியும்."

இவ்வாறு 3-3-63-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அட்டன் இலங்கைத் தொழிலாளர் கழக அலுவலகத்தில் நடைபெற்ற தலவாக்கொல்லை மாவட்ட கழக முக்கிய உறுப்பினர்களின் ஓர் விசேஷ கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் கழகப் பொதுச் செயலாளர் திரு. பி. எம். கிருஷ்ணசாமி கூறினார். கூட்டத்திற்கு கழக உப தலைவர் திரு. கே. ஏ. இராமன் தலைமை வகித்தார்.



திரு. பி. எம். கிருஷ்ணசாமி

அவர் மேலும் கூறியதாவது: 1948-ம் ஆண்டு மலையகத் தொழிலாளர்களின் பிரஜா உரிமைப் பறிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் அவர்கள்.

தோட்டப் பகுதியிலே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது—ஆயிரக் கணக்கான பிள்ளைகள் வேலை வசதியின்றி தவிக்கின்றார்கள். குடியிருப்பு வசதியைக் குறைத்து வருகின்றனர். அரைக் 'காம்பிரா'க்களிலும் முக்கால் 'காம்பிரா'க்களிலும் ஆயிரக் கணக்கானோர் அல்லற்படுகின்றனர்.

தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி வசதியின்றித் தவிக்கிறார்கள். கல்வி வசதிக்கு தடை போடப்பட்டுள்ளது. நகர்ப் புறங்களிலுள்ள அரசாங்க பாடசாலைகளில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இவைகளுக்கு நாம் நாடற்றவர்களாக்கப்பட்டுள்ளதே காரணம்.

இந்த நிலையில் நமது எதிர்கால வாழ்வை சுபீட்சப் படுத்திக் கொள்வதற்காக நாம் அரசாங்கத்தையோ, அல்லது தோட்ட முதலாளிகளையோ நம்பியிருக்க முடியாது.

நாம் அரசாங்கத்தையோ அல்லது தோட்ட முதலாளியையோ நம்பியிராது 'நமது கையே நமக்குதவி' என்ற தாரக மந்திரத்தை மனதில் கொண்டு செயல்பட வேண்டும். மலையகத்திலுள்ள பத்து லட்சம் தோட்டத் தொழிலாளர்களும் தமிழரசுக் கட்சியின் அரசியல் தலைமையை ஏற்றுக் கொள்வதன் மூலம் மகத்தான சக்தி படைத்தவர்களாகத் திகழ முடியும். இன்றுள்ள நமது இன்னல்களுக்குப் பரிகாரம் காண்பதற்கு இதைத் தவிர வேறு மார்க்கமில்லை.

# அடுத்த இதழில் ஆரம்பமாகிறது

ஈழத் தமிழ் இலக்கிய உலகில் ஒரு புது முயற்சி, இருவர் கூட்டாகப் படைக்கும் உணர்ச்சி மிக்க தொடர் ஓவியம்.




* இலட்சிய வெறியும்
* தியாக மனப்பான்மையும்
* உணர்ச்சி வசப்படக் கூடிய தன்மையும் உடையவன்
இராஜகோபாலன்

இவனைப் பின் தொடர்ந்து செல்லும் நிழல்கள், காதலையும் வீரத்தையும் பின்னிப் பிணைத்து, புவனத்தையும், சாவித்திரியையும் கலங்க வைக்கிறது.

- வீரம் உருவமாயின் காதல் நிழலாகிறது.
- காதல் உருவமாயின் வீரம் நிழலாகிறது.

இனவுரிமைப் போராட்டத்தைப் பகைப்புலமாகக் கொண்டு புனையப்பட்ட சுவைமிக்க நாவல்.

**உங்கள் பிரதிக்கு இன்றே பதிவு செய்யுங்கள்**

# இங்குள்ள இந்தியத் தமிழரை 'கள்ளத்தோணி' என்கிறது அரசு

## யார் 'கள்ளத்தோணி' என்பதை சரித்திரம் நிரூபிக்கிறது

—"கற்கையூர் செல்வன்"—

இலங்கையிலேயே பிறந்து வளர்ந்து, தேயிலை ரப்பர் தோட்டங்களுக்கு உரமாகி, குளிரும், காற்றும், மழையும் பாராது, குறைந்த சம்பளத்தில் வேலை செய்து, இலங்கையிலேயே பல்லாண்டு காலமாக வசித்து வரும் இந்தியத் தமிழருக்கு இன்று இலங்கையிலே வசிப்பதற்கு உரிமையில்லை! சிங்கள அரசினர் அவர்களைக் "கள்ளத்தோணிகள்" என்று களங்கப்படுத்தியும், "நாடற்றவர்" என்று நாமம் சூட்டியும் பரிகசிக்கின்றனர்.

ஈழம் வாழ் இந்தியத் தமிழர்களை இப்படி இழிவு படுத்திக் கூறும் சிங்களச் சோதரர்கள் தங்கள் வாழ்க்கை ஏடுகளைச் சிறிது புரட்டிப் பார்க்கட்டும். தாங்கள் எங்கிருந்து வந்தனர் என்பதை அப்போது உணருவர். தம்மை விஜயனின் பரம்பரையினர் என்று சிங்களவர்கள் பெருமையுடன் கூறுகின்றனர். விஜயன் யார்? எங்கிருந்து வந்தான்? எப்படி வந்தான்? என்பதை ஆராயும் போது தற்போதைய உண்மையான கள்ளத்தோணிகள் யார் என்பது நன்கு புலப்படும்.

சிங்களவருக்கும் இந்தியருக்குமிடையே, அரசியல், கலை, கலாச்சாரம், மதம் முதலிய விடயங்களில் தொடர்பிருந்ததாகச் சரித்திரம் செப்புகின்றது! பண்டைய சிங்கள அரசரிற் பலர் தமது ஆட்சியைப் பெறுவதற்காக இந்தியாவிலிருந்தே படை உதவி பெற்றனர். முகலன் தனது சகோதரன் காசியப்பனிடமிருந்து ஆட்சியைப் பெறுவதற்காக இந்தியாவுக்கு ஓடி அங்கிருந்து படை திரட்டிக்கொண்டு வந்தான்; காசியப்பனையும் யுத்தத்தில் வென்றான். இந்திய அரசன் ஒருவனை சிறைப்பிடித்து வைத்திருந்த பன்னீராயிரம் சிங்களவரையும் சிறை மீட்டதுமன்றிப் பன்னீராயிரம் தமிழரையும் கொண்டுவந்து இலங்கையிலே குடியேற்றினான் கஜபாகு என்ற மன்னன்! அன்றைய சிங்கள அர

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ வைத்த தமிழன் விரட்டப்படுகிறுன்

# இதுதான் ஜனநாயகமா?

## சென்னை ஏடு 'மாலைமணி' தலையங்கம்

இன்று இலங்கைத் தீவு சீரோடும், சிறப்போடும் வாழ்வதற்கே செந்தமிழனுடைய இரத்தம்தான் காரணம் என்பதை உலகமே அறியும்! தமிழனுல் வாழ்வைப் பெற்றுவிட்ட சிங்களம் இன்று தமிழனையே விரட்ட முடிவுசெய்துவிட்டது! இது நியாயமா? நீதியா? நெறி முறையைச் சேர்ந்ததுதானு? இவ்வாறு சென்னையிலிருந்து வெளியாகும் 'மாலைமணி' 3-3-63 இதழில் "இலங்கைத் தமிழர்களின் கதி என்ன?" என்று தலையங்கம் தீட்டியிருக்கிறது.

'மாலைமணி' மேலும் கூறுவதாவது:

இலங்கைத் தீவை ஆட்சி புரிந்துவரும் பண்டா சர்க்கார் இலங்கைத் தமிழர்களுக்கு பெரும் தீங்கு விளைவிக்கும் திட்டம் ஒன்றைத் தீட்டி மனம் களித்துக் கொண்டிருக்கிறது.

"இலங்கையில் எல்லா துறை உத்தியோகங்களிலும் இனி சிங்களவர்களுக்கே இடம் அளிக்க வேண்டும்" என்ற முடிவுக்கு பண்டா சர்க்கார் வந்திருக்கிறது!

1965-ம் ஆண்டுக்குள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிடவேண்டும் என்றும் அவர்கள் முடிவெடுத்திருக்கிருர்களாம்! அப்படியானுல் இலங்கைத் தமிழர்களின் கதி என்ன? தயவு செய்து பண்டா சர்க்கார் இதைப் பற்றி கொஞ்சமாவது யோசித்துப் பார்க்க வேண்டும்!

இந்தத் திட்டம் அமுலுக்கு வருமானுல் சர்க்கார் அலுவலகங்களிலும், தனிப்பட்ட ஸ்தாபனங்களிலும் இலங்கைத் தமிழர்கள் வேலை செய்ய முடியாது! இருக்கும் வேலைகளையும் இழக்க நேரிடும்! அப்படியானுல் இவர்களுடைய நிலை என்ன?

சிங்களவர்களின் வாழ்வுக்காக, சிங்களவர்களின் வளத்திற்காக தமிழர்கள் உழைத்தார்கள்! முடிவில் தமிழர்களின் வாழ்வு நசுக்கப்படுகிறது! இதுதான் ஜனநாயகமா? ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்த தமிழன், இலங்கை வளத்திற்காகவும், நலத்திற்காகவும் பாடுபட்டு வந்த தமிழன், வாழ்வை இழக்கப் போகிருன், சாவை அணைக்கப் போகிருன்! இதுதான் மக்களாட்சியின் முறையா?

"சிங்களவர்கள்தான் வாழ வேண்டும், சிங்கள மொழிதான் தழைக்கவேண்டும்" என்று கூறுவது ஏகாதிபத்திய வெறித் தன்மையைக் காட்டாதா?

இலங்கை பண்டா சர்க்கார் கொழும்பில் மகாநாடு கூட்டி இந்தியாவிற்கும், சீனத்திற்கும், சமரசம் செய்துவைக்கும் முயற்சியில் ஈடுபட்டது! அதற்காக சீனப் பிரதமரையும், இந்தியப் பிரதமரையும் சந்தித்து சமரச யோசனைகளைத் தெரிவித்தது!

இவற்றையெல்லாம் நாம் காணும்போது மகிழ்ச்சியும் பெருமையும் நமக்கு ஏற்பட்டது! பண்டா சர்க்காரின் பெருந்தன்மையை, நல்லெண்ணத்தைக் கண்டு உள்ளமும் பூரித்தோம்! ஒரு பெண்மணியின் பெருமைப் படத்தக்க பண்பை பாராட்டவும் செய்தோம்! "வெறித்தனம் கூடாது, ஏகாதிபத்திய மனப்பான்மையை விட்டுவிட வேண்டும்" என்ற எண்ணத்தைக் கொண்டவர் என்றும் எண்ணினேம்! இது ஊருக்கு உபதேசமே தவிர, எனக்கல்ல என்று சொல்லாமல் சொல்லுகிருர், திருமதி பண்டா!

இலங்கையில் தமிழர்களுக்கு வேலையில்லை, தமிழர்களுக்கு வாழ்வில்லை என்று கூறுவது எந்த வகை ஜனநாயகத்தைச் சார்ந்ததாகும்! இதையும் ஒரு விதத்தில் பார்க்கப் போனுல் எதேச்சாதிகார மனப்பான்மையோடுதான் ஒப்பிட வேண்டும்!

இன்று சிங்களத் தீவு சீரோடும், சிறப்போடும் வாழ்வதற்கே செந்தமிழனுடைய ரத்தம்தான் காரணம் என்பதை உலகமே அறியும்! தமிழனுல் வாழ்வைப் பெற்றுவிட்ட சிங்களம் இன்று தமிழனையே விரட்ட முடிவு செய்துவிட்டது! இது நியாயமா? நீதியா? நெறி முறையைச் சார்ந்ததுதானு? பண்டா சர்க்கார் தயவு செய்து சிந்தித்து விரைவாக ஒரு முடிவுக்கு வரவேண்டும்! இந்தத் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும்!

இல்லாவிட்டால் இலங்கைத் தீவில் பெரும் கிளர்ச்சி நடைபெற ஏதுவாகும்! தமிழர்கள் தங்கள் வாழ்வை இழக்கும் நேரத்தில் தங்கள் வீரத்தைக் காட்ட, மான உணர்வைக் காட்ட துணியாமலா இருப்பார்கள்!

தயவு செய்து பண்டா சர்க்கார் எல்லாவற்றையும் தீர ஆலோசித்து, மனிதாபிமானத்தோடு இந்தப் பிரச்

(13-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் குரல்

## சிலம்பொலி

தமிழ் மக்கள் சிங்களச் சகோதரரின் ஒத்துழைப்பைப் பெற முயற்சிக்க வேண்டுமென்று 'டைம்ஸ்' பத்திரிகையில் 27-2-63-ல் திரு. ஏ. பொன்னுத்துரை அவர்கள் வெளியிட்டுள்ள கருத்தை நாம் வரவேற்ற போதும், சைவ மங்கையர் கழகம் நடாத்தும் களியாட்டுவிழாவிற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர்களை அழைத்தமைக்குக் கண்டனம் தெரிவித்தவர்களின் நோக்கத்தை அவர் முற்றிலும் தவருகப் புரிந்து கொண்டுள்ளாரென்றே எனக்குத் தோன்றுகிறது.

'இருல் போட்டால் தான் சுரு பிடிக்கலாம்' என்ற பழமொழியொன்று தமிழில் உண்டு. தமிழ் பேசும் மக்கள் மத்தியிலேயுள்ள சிறிய ஸ்தாபனங்கள் தம்மை வரவேற்று, இலவசமாக உபசரித்து, மாலையிடத் தயாராகவிருக்குமிடத்தில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர்கள் தமது ஒத்துழைப்பைக் கொடுத்துதவுகிருர்கள். ஆனுல், மொழி உரிமை, சமத்துவம் இவற்றை முழுச் சமூகத்துக்குமே அளிப்பதில் தான் ஏனே அவர்கள் இவ்வளவு உற்சாகம் காட்டாமல், பின்வாங்குகிருர்கள்.

இத்தகைய சிறிய ஒத்துழைப்புகள், பெரிய விஷயங்களை மூடி மறைத்துவிட நாம் அனுமதிக்கக் கூடாது. ஒரு சிலருக்கு ஆக்கம் அளிப்பதன் மூலம், முழுச் சமூகத்தையுமே வலையில் போட எத்தனிக்கப்படும் முயற்சிகளுக்கு நாம் இரையாகக் கூடாது.

உண்மையான ஒத்துழைப்பைச் சோதிக்க விரும்பியிருந்தால், கழகம் கட்சிச் சார்பற்ற சிங்களத் தலைவர்களை அழைத்திருக்கலாமே. மேற்குறிப்பிட்ட பிரமுகர்களுக்கு 'டிக்கெட்' விற்றிருக்கலாமே. பிரமுகர்களிடம் என்ன பணம் இல்லையா?

சிவராத்திரி விழாவன்று துண்டுப் பிரசுரங்களைச் சில 'கொடிய' தமிழரசு வாலிபர்கள் விநியோகித்ததாகக் குறைப்பட்டுக் கொள்கிருர் மதப்பற்றுடைய திரு. ஏ. பொன்னுத்துரை அவர்கள். அவர்கள் அப்படி விநியோகித்திருந்தார்களானுல், அது பல தமிழர்கள் ஒரே இடத்தில் கூடியிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதற்கேயாகும்.

எஸ். ஜே. குணசேகரம்.

## குமுறும் எரிமலை

ஜனநாயக நாடான இலங்கையிலே, சுதந்திரம் அற்று அடிமைகளாக, ஆட்சியாளரின் கொடுமைகளுக்கெல்லாம் இலக்காகிக் கொண்டிருக்கும், தமிழ் சமுதாயத்திலே, தன்மானம் இழந்த துரோகிகளான, சிங்கள தீவிர வாதிகளான ஆட்சியாளரின் கைப் பொம்மைகளான ஒரு சிலர் சிங்கள ஏகாதிபத்தியவாதிகளான மந்திரிமார்களுக்கு மாலையிட்டு வரவேற்பளித்து, எம் தமிழ் மக்களுக்கே, அடி, உதை வாங்கிக் கொடுப்பதை நினைக்க என் மனம் எரிமலையாகக் குமுறுகிறது, குமுறிக் கொண்டே இருக்கிறது. இருந்தாலும் எட்டப்பர்களின் செய்கையால் அடி உதைபட்ட, தமிழைக் காக்கும் வீரர்களுக்காகக் கண்ணீர் சிந்தாமல் இருக்க முடியாது.

—ம. கந்தசாமி,
வவுனியா.

# சாதிவித்தியாசம்நீங்க அறப்போர்

# ஒத்துழைப்புத்தருமாறு

# உ. கு. த. அ. இயக்கம் வேண்டுகோள்

அமெரிக்காவில், நிறத்துவேஷம் எப்படிக் காலத்திற்குக் காலம் பல்வேறு உருவங்களை எடுத்ததோ, அதே போன்று நம் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் இச்சாதி வித்தியாசம் பல்வேறு உருவங்களை எடுத்துச் சமுதாயத்தைப் பலவீனப் படுத்தி வருவதை நாம் காண்கிறேம். ஆகவே இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உடன் அறப்போர் புரிந்து ஆவன செய்தல் வேண்டும் என்ற முடிவுக்கு எமது இயக்கம் வந்துள்ளது.

இவ்வாறு 'உரிமை குறைந்த தமிழர் அபிவிருத்தி இயக்கம்' ஒரு வேண்டுகோள் வெளியிட்டுள்ளது. இவ்அறப்போரில் கலந்துகொள்ளுமாறு பல தாபனங்களையும் பெரியார்களையும் இயக்கம் கோரியுள்ளது. அப்படி அழைக்கப்பட்ட தாபனங்கள் பின்வருமாறு:

இலங்கைத் தமிழரசுக் கட்சி, இலங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை பொதுஉடைமைக் கட்சி, சாதி வித்தியாச ஒழிப்புச் செயற்குழு, காந்தீய சேவா சங்கம், சட்டக் கல்லூரி தமிழ் மாணவர் சங்கம், தமிழ் மன்றக் கழகம், இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணி, சுதந்திரத் தமிழர் இயக்கம், மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம், இலங்கைத் தொழிலாளர் கழகம் பொது எழுது வினைஞர் சங்கம், அஞ்சல் எழுது வினைஞர் சங்கம், அகில இலங்கை உரிமை குறைந்த தமிழர் அபிவிருத்தி இயக்கம், அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை, மக்கள் முன்னேற்றக் கழகம், பல்கலைக் கழகத் தமிழ் மாணவர் சங்கம்.

போசனசாலைகளும், சைவ ஆலயங்களும், பொதுக் கிணறுகளும், பொது இடங்களும், பொதுத்தாபனங்களுமே சாதி வித்தியாசத்திற்கு நிலைக்களனுக அமைந்திருக்கின்றன. இவைகளுள் இயக்கம் முதற்படியில் தேநீர்க்கடைப் பிரவேசம், சைவ ஆலயப் பிரவேசம் இரண்டினையுமே செய்வதற்கு முற்பட்டுள்ளது.

இயக்கம் தனது வேண்டுகோளில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

போராட்டத்தைச்செய்து முடிக்கத் தொண்டர்களும், ஆதரவாளர்களும் தேவைப்பட்டிருக்கின்றனர். ஏறக்குறைய 200 தொண்டர்களை நாம் திரட்டத் தீர்மானித்திருக்கின்றேம். இங்கு குறிப்பிட்ட ஸ்தாபனங்களிலிருந்து தொண்டராகச் சேர விரும்புவோரின் பெயர்களை எமக்கு அனுப்புமாறு எழுதியுள்ளோம். மேலும் போராட்டத்தில் பங்கு கொள்ளும் ஆதரவாளர்களையும் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளோம்.

## ஆசனங்கள் இல்லை!

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த நற்பட்டி முனை என்னும் கிராமத்திலுள்ள அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் 550 மாணவர்கள் கல்வி பயிலுகிருர்கள். ஆனுல், இவர்களில் 300 மாணவர்களுக்கு மாத்திரமே பாடசாலையில் ஆசனங்கள் உள்ளன. ஆசிரியர்களும் குறைவாகவே இருக்கிருர்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள

## இளம் வாலிபர்க்கு விவசாய வசதி

யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள தேர்தற் தொகுதிகளுக்கான தொகுதிப் பண்ணை (கோப்பாய்த் தொகுதியைத் தவிர) பரந்தன்—முல்லைத்தீவு வீதியிலிருக்கும் உடையார் கட்டுக் குளத்தில் அமைந்துள்ளது. இத்தொகுதிப் பண்ணைகளில் குடியேறி விவசாயத்திலீடுபட்டுத் தக்க பலனை பலர் அனுபவித்து வருகின்றுர்கள்.

படித்துவிட்டு வேலையில்லாது இருக்கும் இளைஞர்களின் கமத் தொழிலிலீடுபட விரும்புபவர்களை இத்தொகுதிப் பண்ணைகள் எதிர்பார்க்கின்றன.

விவசாயத்திலீடுபட விருப்பமுடைய இளைஞர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள மாவட்ட கிருஷிக உத்தியோகஸ்தருடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்று தமிழரசுக் கட்சி நிர்வாகச் செயலாளர் கேட்டுக்கொள்ளுகிருர்.




# ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்
மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண், கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினுல் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

**15 நாள் டின் ரூபா 3-00**

**30 நாள் டின் ரூபா 5-75**

தபால் செலவு /-95

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரப் படையில் 70,000 தொண்டர்கள்

## அரங்கம் 9

தொண்டர் படையின் பலம் தொண்டர்கள் பெறும் பயிற்சியிலும் அவர்கள் பாவிக்கும் ஆயுதங்களிலும்தான் தங்கியுள்ளது என்பதை அறிந்த தலைவர்கள் தொண்டர்களுக்கு இராணுவப் பயிற்சியளிப்பதற்காக டப்ளினில் மட்டும் 8 மண்டபங்களைக் குடிக்கூலிக்கு எடுத்தார்கள்; 15 முகாம்களை அமைத்தார்கள். புரட்டஸ்தாந்தவர்கள் பெரும்பான்மையாக வாழாத இடங்கள் அனைத்திலும் பயிற்சி முகாம்கள் ஏற்படுத்தினர். பயிற்சியளிப்பதோடு மட்டும் இவர்கள் நிற்கவில்லை. படைக் கலங்கள் பெறுவதிலும் ஈடுபட்டனர்.

இவற்றைக் கண்ட அரசாங்கம், 4-12-1913 ல்—அயர் தொண்டர் படை அமைக்கப்படத் தொடங்கி 9 நாட்கள் கழியுமுன்னரே, எவ்விதமான ஆயுதங்களும் அயர்நாட்டில் இறக்குமதி செய்யக் கூடாது என்று

## இராணுவப் பயிற்சிக்கு நாடெங்கும் ஏற்பாடு

தடை விதித்தது. எல்லோருமே இத்தடையை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தனர். அதனால், தலைவர்களோ தொண்டர்களோ போராட்ட வேலைகளைத் தொடர்ந்து செய்வதில் சிறிதளவும் தயங்கவில்லை. போர்முனைக்குச் செல்கையில் ஏற்படும் தடைகளைக் கண்டு அஞ்சி, நடுங்கி, ஒடுங்கி, வீட்டு மூலைக்குள்ளும் மரவள்ளிச் செடிகளுக்குள்ளும் ஆஸ்பத்திரி அறைகளுக்குள் கறுப்பு உடைகளை அணிந்து கொண்டும் பேடிகளைப் போல் பதுங்கி, தலையில் கை வைத்து ஒப்பாரி பாடும் ஓணான்களல்ல அயர் வீரர்கள். அதனால் தான் மாற்று வழிகள் மூலம் தொண்டர்களுக்கு ஆயுதங்கள் பெற்றுத் தருவதாக உறுதி கூறினார்கள் தொண்டர் படைத் தலைவர்கள்!

அரசாங்கத்தின் கண்காணிப்பு தலைவர்கள் மீது விழத் தொடங்கியது. இரகசியப் பொலீஸார் அவர்களைச் சுற்றிச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தனர்.

## ஆயுத இறக்குமதி தடை செய்யப்பட்டது

இருந்தும் தொண்டர்கள் தொகை தினசரி கூடிக்கொண்டே சென்றது. சில நாட்களுள் தொகை 10,000 ஆகக் கூடியது.

ஆங்கில, அமெரிக்க பட்டாளங்களிலிருந்து யுத்தங்களில் ஈடுபட்டுப் பயிற்சி பெற்ற அயர்நாட்டு வீரர்கள் இந்தத் தொண்டர்களுக்கு இராணுவப் பயிற்சியளிக்க முன்வந்தனர். ஏற்கனவே தம்மிடம் இருந்த படைத் துப்பாக்கிகளை எவ்விதம் கையாளுவது, பாலங்கள், மதகுகள், தந்திக் கம்பங்கள், அரசாங்கத்தின் படைக்கலச்சாலைகள், துரோகிகளின் வீடுகள், தாங்கிகள், ஆயுதம் பொருத்திய கார்கள் முதலியவற்றை எவ்வாறு தகர்த்து நாசமாக்குவது, பட்டாளத்தினர் பிரயாணம் செய்யும் வாகனங்களை எவ்விதம் புதர்களிலிருந்து தாக்குவது, உளவு சொல்லுபவர்களையும் காட்டிக் கொடுப்பவர்களையும் உற்றார், உறவினர் என்று பாராது சந்திக்கும் இடங்களிலேயே எங்ஙனம் சுட்டுத் தள்ளுவது, எதிரிகள் மத்தியில் எவ்வழியில் உளவு பார்ப்பது ஆகியவை பற்றியும் விரிவான பயிற்சி தொண்டர்களுக்கு அளிக்கப்பட்டது.

### மகளிர் படை

பெண்களும் உதவிப் படையொன்றை நிறுவினர்கள். முதலுதவி, சைகைக் குறிச் செய்தியனுப்புதல், சமைத்தல், உணவுவிநியோகித்தல், பாத்திரங்கள் சேகரித்தல், உடைகளைத் தைத்தல், துவைத்தல், வாகனங்கள்

## ஜேர்மனியிலிருந்து ஆயுத இறக்குமதி

ஓட்டுதல் ஆகியவற்றில் பயிற்சி பெற்றார்கள். இந்தத் தொண்டர் படையில் சிறுவர்களும் தொண்டர்களாகச் சேர்ந்து பயிற்சி பெற்றார்கள்.

ஆண் தொண்டர்கள் வட்டாரவாரியாகப் பிரிக்கப்பட்டார்கள். பயிற்சிபெறும் ஒவ்வொரு 100 பேரும் ஒரு கப்டனின் கீழ் ஒரு கம்பனியாக வகுக்கப்பட்டனர். பல கம்பனிகள் ஒன்று சேர்க்கப்பட்டு பட்டாலியன் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு பட்டாலியனும் பட்டாலியன் கொமாண்டர் ஒருவரின் கீழ் விடப்பட்டது. பல பட்டாலியன்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு பிரிகேட்




உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிகேடும் பிரிகேட் கொமாண்டர் ஒருவரின் கீழ் இயங்கியது. இவ்வாறாகத் தொண்டர் படை அணியணியாக வகுக்கப்பட்டு நேர்த்தியாகக் காட்சியளித்தது.

முழுத் தொண்டர் படைக்கும் பள்மர் ஒப்சன் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார்; சேர் றெஜர் கேஸ்மன்ற் பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அயர் மக்களுக்கு ஓர் எதிர்காலம் உண்டு என்பதில் திடமான நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் இவர்கள். தூக்கு மேடை ஏறியே தான் மரணமடையப் போவதாகத் தனது எதிர்காலத்தையே எடுத்துக் கூறியவர் றெஜர் கேஸ்மன்ற். அவசியமான ஆயுதங்களை விலைக்கு வாங்குவதற்குரிய திட்டங்களை வகுக்கும் துணைக் குழுவின்

## ஆயுத இறக்குமதிக்கு இரகசியத் திட்டம்

தலைவராக ஓராகிலி தெரிந்தெடுக்கப்பட்டார்.

### ஞானி மக்டொனு

நாளுக்கு நாள் தொண்டர் படை வரம்பின்றி வளர்ந்து வந்தது. அயர் கட்சியின் பாராளுமன்றத் தலைவர் றெட்மண்டின் அர்த்தமற்ற கொள்கையை [illegible] பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் தொண்டர் படையில் சேர்ந்தனர். எப்பொழுதுமே சலகலப்பாகப் பேசும் புலவரும் பேராசிரியருமான தோமஸ் மக்டொனுவும் படையில் சேர்ந்தார். அதர்மத்தை அழிப்பதற்காக ஆயுதம் தாங்குவது தனது கடமை மட்டுமல்லாது தான் பெற்ற பெரும் பாக்கியமுமாகும் என்று கூறி மகிழ்ந்த ஞானி அவர். பேச்சுக்கும் எழுத்துக்கும் ஓர் எல்லை வைத்துவிட்டுச் செயலில் இறங்க வேண்டிய காலம் வந்துவிட்டது என்று பறைசாற்றியவர் அவர். பேராசிரியர் டி வேலராவின் நெருங்கிய நண்பர் பேராசிரியர் மக்டொனு. படையில் சேர்ந்த இன்னுமொருவர் யோசேப் பிளங்கே. அயர்

'கோமகன்'
'மாமல்லன்'

நாட்டின் இளம் சமுதாயத்தினரின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் பாடல்களைப் பாடி, விடுதலை உணர்ச்சியைப் பரப்பிய புரட்சிக் கவிஞர் அவர்.

இவ்வாறாக ஆயிரக்கணக்கில் சேர்ந்து பயிற்சிபெற்ற தொண்டர்களையும் அவர்கள் மத்தியில் கரைபுரண்டோடிய உணர்ச்சியையும் கண்ணுற்றார் பழம் பெரும் புரட்சிவாதியான தோமஸ் கிளாக். இள வயதிலேயே நாட்டின் விடுதலைக்காகப் பதினைந்து ஆண்டுகளைச் சிறைச்சாலையில் கழித்தவர் அவர். இவ்வளவு நீண்ட காலம் அடைபட்டுக் கிடக்கையில் தமக்குப் பைத்தியம் பிடியாதிருப்பதற்காகச் சிறைச்சாலைச் சுவர்களிலுள்ள செங்கற்கள் யாவற்றையும் சிறைச்சாலையின் இரும்புக் கதவில் பொருத்தப்பட்டிருந்த ஆணிகள் அனைத்தையும் ஆயிரம் தடவைகள் எண்ணினர்; விவி

**அடுத்த வாரம்**

- ★ பப்ப் பகலில் ஜேர்மன் ஆயுதங்கள்
- ★ பொலீஸார் மீது கல்மாரி
- ★ 70,000 தொண்டர்கள் 12,000 ஆகினர்.

லிய நூலை இரண்டு தடவைகள் பார்த்து எழுதினர். இவற்றையெல்லாம் செய்த பின் விடுதலையடைந்து வந்த நகைச்சுவை மன்னன் தோமஸ் கிளாக் சிறு கடையொன்றை நடத்திவந்தார். அக்கடைக்கு வந்த அனைவருக்கும் பிரிவினைத் தத்துவத்தை விளக்கிக் கூறி வந்தார். இதே தோமஸ் கிளாக் தான் தொண்டர் மத்தியில் கரைபுரண்டோடிய உணர்ச்சியைக் கண்ணுற்றபின் கூறுகிறார்—

'[illegible] தலையும் உயர்த்த [illegible] ஒளிபடைத்த கண்களும் அமையப் பெற்ற இத் தொண்டர்களைக் காணக் கிடைத்த பாக்கியம் பெற்ற இச் சந்ததியார் பாக்கியம் பெற்றரே.''

## அரங்கம் 10

### இரகசிய கம்பனி

அல்ஸ்ரர் மாகாணத்தைச் சேர்ந்த இணையாளர்கள் ஆயுத இறக்குமதித் தடையையும் மீறி 24-4-1914ல் 35,000 படைத்துப்பாக்கிகளையும் 25,00,000 தடவைக்குரிய தோட்டாக்களையும் ஜேர்மனியிலிருந்து இறக்குமதி செய்தனர். அயர்நாட்டின் வட பகுதியில் உ.நா.ஆ. மசோதா அமுலுக்குக் கொண்டுவரப்பட்டால் ஆயுதங்கள் மூலம் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கே இப்படைக் கலங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

இந்த ஆயுத இறக்குமதியைத் தொடர்ந்து, இரண்டு கூட்டத் தொடர்களில் பிரபுக்கள் சபையில் நிராகரிக்

## உதவிப் படையில் பெண்கள் திரண்டனர்

கப்பட்ட உ. நா. ஆ. மசோதா, பிரதிநிதிகள் சபையில் மூன்றாவது கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படுவதற்காக 25-5-1914ல் சமர்ப்பிக்கப்பட்டது. இம்மசோதாவிற்குத் திருத்தம் ஒன்று கூடிய கெதியில் கொண்டு வரப்படும் என விவாத நேரத்தில் அறிவிக்கப்பட்டது. கொண்டு வரப்படவிருக்கும் திருத்தம் புரட்டஸ்தாந்து இணையாளர்களின் ஆயுத பயமுறுத்தலைக் காரணமா

## சாதகமான சட்டத்திற்கும் பாதகமான திருத்தம்

கக் கொண்டு கத்தோலிக்கருக்கு இன்னும் பாதகத்தை விளைவிக்கும் திருத்தமாகவே இருக்கும் என ஊகித்த அயர் கட்சியின் ஒரு பிரிவினர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் றெட்மண்டும் அவரைச் சார்ந்த உறுப்பினர்களும் மசோதாவிற்குச் சாதகமாக வாக்களித்தனர்.

இணையாளர்கள் ஆயுதம் இறக்குமதி செய்ததையும் அயர் மக்களை ஏமாற்றும் மசோதா இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டதையும் அவதானித்த அயர் மக்கள் பலர் தொண்டர்களாகச் சேர்ந்து கொண்டேயிருந்தார்கள். இதன் பயனாகத் தொண்டர் தொகை 70,000 ஆக உயர்ந்தது. இவர்கள் அனைவருக்கும் யுத்த தந்திரங்கள் போதிக்கப்பட்டன.

போராடுவதற்கு அவசியமான ஆயுதங்களை இரகசியமாக வாங்குவதற்கு ஏஸ்கின் சில்டேஸ், டறல் பிகிஸ் ஆகிய இருவரும் இங்கிலாந்தின் பகை நாடான ஜேர்மனிக்குச் சென்றனர். அங்கு இரகசியமாக ஆயுதங்கள் விற்பனை செய்யும் ஒரு கம்பனியாருடன் பேச்சுவார்த்தை நடத்தினர். 1,500 பாவித்த மௌசர் படைத்துப்பாக்கிகளும் 49,000 தடவைக்குரிய தோட்டாக்களும் வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்துகொண்டனர். ஆங்கில ஆட்சியினரிடம் அகப்படாமல் அவற்றை எவ்வாறு அயர்நாடு அனுப்பலாம் என்பதை மிகவும் நுணுக்கமாகவும் விரிவாகவும் சீர்தூக்கி ஆராய்ந்து, திட்டங்களைத் தீட்டினர்கள்.

### நடுக் கடலில் ஆயுதம்

திட்டங்களின்படி, ஜேர்மன் விற்பனையாளர் ஆயுதங்களை இழுவைத் தோணியொன்றில் ஜேர்மனிக்கு வடக்கேயுள்ள வடகடலுக்குக் கொண்டு செல்ல வேண்டும். அங்கு அயர் தொண்டர் படையைச் சேர்ந்த ஓபிரியன் என்பவர் படகொன்றில் சென்று இழுவைத் தோணியைச் சந்தித்து 600 படைத்துப்பாக்கிகளையும் 20,000 தடவைக்குரிய தோட்டாக்களையும் பெற்றுக்கொண்டு இங்கிலாந்தின் தென் பகுதியிலுள்ள பெரி எனும் தீவுக்குக் கொண்டு செல்லவேண்டும். அங்கிருந்து ஆயுதங்களை வேறொரு படகில் ஏற்றி டப்ளினுக்குத் தென் திசையில் அண்மையிலுள்ள கில்கூல் என்னும் ஊருக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

எஞ்சிய 900 படைத்துப்பாக்கிகளையும் 29,000 தடவைக்குரிய தோட்டாக்களையும் பெறுவதற்காக, சில்டேஸ் படகொன்றை ஓட்டிச் சென்று வட கடலிலுள்ள ஜேர்மன் இழுவைத் தோணியைச் சந்திக்கவேண்டும். ஆயுதங்களைப் பெற்றுக்கொண்டு சில்டேஸின் படகு டப்ளினுக்கு வட திசையில் அண்மையிலுள்ள ஹௌத் துறைமுகக் கடலில் 26-7-1914 ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் 12-45 மணிக்கு வந்து நிற்க வேண்டும்.

டறல் பிகிஸ் மோட்டார் வள்ளமொன்றில் சென்று சில்டேஸைச் சந்தித்து ஆயுதங்களை இறக்குவதற்குச் சூழ்நிலையும் ஆயத்தங்களும் சரியாக உள்ளன என்று சைகை கொடுக்கவேண்டும். டறல் பிகிஸின் சைகை கிடைத்தவுடன் ஆயுதங்கள் ஏற்றிவந்த படகைத் துறைமுகத்துக்குச் சில்டேஸ் ஓட்டிச்செல்ல வேண்டும். அங்கு கதல் புருகா தலைமையில் காத்து நிற்கும் டப்ளின் பிரிகேட்டைச் சேர்ந்த தொண்டர்கள் ஆயுதங்களை இறக்கிக்கொண்டு உடனடியாக அகன்றுவிட வேண்டும்.

பிகிஸின் சைகை கிடைக்காவிடின் சில்டேஸ் படகை கிளயா மாவட்டத்தில் ஓடும் ஷெனன் ஆற்று முகத்துவாரத்திற்கு ஓட்டிச் சென்று அங்கு 'சரக்கை' இறக்க வேண்டும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1963 மார்ச் மாதம் 10-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ 1163

# கல்விப்பகுதியின் வகுப்புவாத நடவடிக்கை

"தேசிய ஐக்கியம், தேசிய ஐக்கியம்" என்று தொண்டை கிழிய வரட்டுக் கூச்சல் போடுகின்றனர் ஆட்சியாளர். ஆனால் கல்வி இலாகாவோ அந்த "தேசிய ஐக்கியத்தின்" ஆணிவேரையே அறுத்துவிட்டது ஒரு சுற்றறிக்கையின் மூலம்.

"இனவாரி அடிப்படையிலேயே நியமனங்களைச் செய்ய வேண்டும். அதே அடிப்படையிலேயே அரசாங்க நிதியைச் செலவிட வேண்டும். இது அரசாங்கத்தின் முடிவு" என்று கல்விப் பகுதி உயர்தர அதிகாரிகளுக்கு வித்தியாதிபதி ஓர் அந்தரங்க கட்டளை விடுத்துள்ளாராம்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம் ஆகியோருக்கு 30:20:8 என்ற விகிதாசாரத்தில்தான் நியமனங்களும், நிதியும் கொடுக்கப்படுமாம்.

இது அரசாங்கத்தின் முடிவானால் "தேசிய ஐக்கியம்" என்பது மக்களை மயக்கும் வெறும் பசப்பு வார்த்தைதான். மக்களைத் தனித்தனியாக விகிதாசாரப்படி பிரித்த பின்னர் தேசிய ஐக்கியம் எப்படி ஏற்பட முடியும்?

ஆசிரியர்களும், அதிகாரிகளும் இனத்தின் சனத்தொகையின் விகிதாசாரத்திற்கேற்ப நியமனம் செய்யுமாறு பிறந்துள்ள கட்டளை தமிழ் பேசும் இனத்துக்குக் கொடுத்துள்ள பலத்த அடியாகும்.

அவர்களுக்கு ஆசிரியர் தொழில் என்பது இனிக் குதிரைக் கொம்புதான். ஏற்கனவே பயிற்றப்பட்ட தமிழாசிரியர்களுக்கும் உத்தியோக வாய்ப்புக்கு இடமில்லை. எவ்வளவுதான் விழுந்து விழுந்து சிங்களம் படித்தாலும், அவர்களுக்கு உத்தியோகம் இனி இனவாரி அடிப்படையில்தான். சிங்கள அறிவின் அடிப்படையிலன்று.

அண்மையில் நடைபெற்ற சிங்களத் தேர்வுப் பரீட்சையைப்பெரும்பாலான தமிழ் அரசாங்க ஊழியர்கள் பகிஷ்கரித்தனர். ஆனால் விண்ணப்பித்த தமிழாசிரியர்களோ 90 சதவிகிதம் பேர் பரீட்சை எழுதினராம். இதனால் "இனத் துரோகிகள்" என்னும் அவப் பெயரைத் தேடிக் கொண்டதுதான் கண்ட பயன்.

சிங்களம் படித்தும் பயனில்லை. சிங்களப் பரீட்சை எழுதியும் பயனில்லை. சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களுக்கே இனி உத்தியோக வாய்ப்புகள் அனைத்தும்.

பாடசாலைக் கட்டிடங்கள், விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள், நூல் நிலையங்கள் முதலியவையும் இதே விகிதாசாரப்படிதான் நிறுவப்படுமாம். இதனால் நேரடியாகப் பாதிக்கப்படுபவர்கள் தமிழ் பேசும் மாணவர்களே.

தமிழ் பேசும் மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவது ஆட்சியாளரின் கண்ணை உறுத்துகிறது. வட இலங்கையில் முதற்தரமான கல்லூரிகள் அமைந்திருப்பதும், அவை சிறந்த விஞ்ஞான ஆய்வுக் கூடங்களையும் இதர கல்வி வசதிகளையும் பெற்றிருப்பதும் சிங்கள வகுப்புவாதிகளின் பொறாமையைக் கிளறி விட்டுள்ளன.

இதன் விளைவே விகிதாசார அடிப்படை. கல்வி வசதிகளைக் குறைத்து தமிழ் பேசும் மாணவர்களின் அறிவு வளர்ச்சியைத் தடை செய்வதே இதன் நோக்கம்.

அடுத்து மாணவர்களைப் பாடசாலையில் சேர்ப்பதிலும் இனவாரி விகிதாசாரம் கையாளப்படலாம். மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குவதில் அடிக்கடி பாரபட்சம் காட்டப்படுகிறது.

கல்வித் துறையில் மட்டுமின்றி இதர துறைகளிலும் தமிழ் பேசும் மக்கள் படிப்படியாக ஒதுக்கப்பட்டு இரண்டாந்தர பிரஜைகளாக்கப்பட்டுள்ளனர்.

கல்விப் பகுதியில் கையாளப்படும் வகுப்புவாதம் விரைவில் இதர பகுதிகளுக்கும் பரவி விடும். அரசாங்க நியமனங்கள் அனைத்தும் வகுப்புவாத அடிப்படையிலேயே செய்யப்படும் காலம் வெகு தூரத்திலில்லை. திறமையின், யோக்கியதாம்சத்தின் அடிப்படையில் உத்தியோகங்கள் வழங்கிய காலம் மலையேறிவிட்டது. இன்று ஆட்சியிலிருப்பது ஒரு வகுப்புவாதக் கும்பல். எனவே இனி உத்தியோகங்கள் சிங்களவருக்கு மாத்திரமே. அந்தப் பாகுபாட்டை மறைக்க "விகிதாசார நாடகம்" நடிக்கப்படுகிறது.

வித்தியாதிபதியின் விகிதாசாரம் வேடிக்கையானது. எந்தப் புள்ளி விவரங்களின் அடிப்படையிலே அவர் இந்த விகிதாசாரத்தைத் தயாரித்தார்? தமிழ் பேசும் மக்கள் என்றால் அதில் மலையகத் தமிழர்களும் உட்பட்டுள்ளனரா? இந்த விபரீத விகிதாசாரத்தைத் தயாரிக்க உதவிய சனசங்கி எது? இன்றேல் வித்தியாதிபதி தானாகவே நிர்ணயித்த விகிதாசாரமா? அரசாங்க இலாகாகளில் வகுப்புவாதம் தலைவிரித்தாடுகிறதென்பதையே இந்த "விகிதாசார தந்திரம்" காட்டுகிறது.

மக்களை இனவாரியாகப் பிரித்து நியமனங்களும் இதர வசதிகளும் வழங்குவதாயின், இனவாரியாக ஆட்சி அதிகாரங்களையும் பிரித்துக் கொடுப்பதே நியாயமாகும். இதனைச் செய்யாமல், "விகிதாசாரம்" என்று கூறிக்கொண்டு தமிழ் பேசும் மக்களின் முன்னேற்றத்தைத் தடை செய்வதை முழுமூச்சுடன் எதிர்த்தேயாக வேண்டும்.

# விவசாயிகள் கிளர்ச்சி வலுவடைகிறது

## ஆட்சியாளர் போக்கிற்கு தமிழரசு எம்.பி.கள் ஆட்சேபம்

விவசாயிகளின் ஆதரவைப் பெற்று ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ளதாகக் கூறும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல் தலைமையை எதிர்த்து நாடெங்கிலும் விவசாயிகளினதும் பொதுமக்களினதும் கிளர்ச்சி பெரிதும் வலுப்பெற்று வருகிறது. இதற்கு முக்கிய காரணம் ஆட்சியாளர் விவசாயிகளின் அரிசிக் கூப்பன்களை வெட்டி வெடுப்பதற்கு இன்று புதிதாகத் திட்டியுள்ள திட்டமேயாகும். மேலும் அரசாங்கம் பிரதேச வாரியாக மக்களின் முக்கிய உணவுப் பண்டங்களான அரிசி, மாவு, சீனி ஆகியவற்றின் விலையை உயர்த்தியுள்ளமையினால் பொது மக்களின் எதிர்ப்பையும் பெரும்பான்மையாகச் சம்பாதித்துள்ளது என்று தெரிகிறது.

இவ்வாரம் கூடிய பாராளுமன்றத்தில் அரசாங்கக்கட்சி



திரு. மு. பாலசுந்தரம்

உறுப்பினர்கள் உட்படப் பெரும்பான்மை உறுப்பினர்கள் அரசாங்கத்தின் இச் செயலை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

பிரதேசவாரியாக அரிசி விலை உயர்வு பற்றி கோப்பாய்ப் பிரதிநிதி திரு. எம். பாலசுந்தரம் அவசர பிரேரணை ஒன்றைப் பிரேரித்துப் பேசுகையில் கூறியதாவது:

"அரிசியின் அளவைக் குறைப்பதற்கு இந்த அரசாங்கம் செய்த முயற்சிகள் அனைத்தும் படுதோல்வியில் முடிந்தன. இதையடுத்து அரிசி விலையை உயர்த்த பல தந்திரமான வழிகளைக் கையாண்டு பார்த்தனர். அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தன. அரசாங்கத்தின் உள்ளும் வெளியும் தோன்றிய எதிர்ப்பின் காரணமாக கடந்த வருடம் அரசாங்கம் அரிசியின் விலையை நேரடியாக உயர்த்த முடியாத நிர்ப்பந்தத்தில், இவ்வித சதி முறைகளைக் கையாண்டது. இன்று போக்குவரத்துச் செலவின் பெயரை வைத்து அரிசியின் விலையை அரசாங்கம் கூட்டியிருக்கிறது. அது மாத்திரமல்ல, சீனியின் விலையையும்கூட உயர்த்தியிருக்கிறது.

விவசாயிகளிடமிருந்து அரிசிக் கூப்பன்களை வெட்டியெடுக்கவும் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. மேலும் மாவின் விலையையும் உயர்த்தியுள்ளது.

இப்பிரேரணையில் விவாதம் நடந்துகொண்டிருக்கையில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் உதவி சபாநாயகரினால் சிறிது நேரம் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார். சிறிது நேரத்தின் பின்னர் அவர் திரும்ப சபைக்குவந்து இப்பிரேரணையை ஒட்டிப் பேசுகையில் கூறியதாவது:

"நிதி மந்திரியும், உணவு மந்திரியும்—ஏன்? முழு அரசாங்கமுமே நாட்டுப்புற மக்களின் நலன்களுக்காகவே சேவை செய்வதாக பல தடவை கூறியதுடன், அரிசியின் அல்லது அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை உயர்த்தமாட்டோம் என்றும் மீண்டும் மீண்டும் வாக்குறுதியளித்தனர். ஆனால் இப்படிக் கூறிவந்த அதே நேரத்தில் அரிசிக் கூப்பனை வெட்டவும் அரிசியின் விலையை உயர்த்தவும் அரசாங்கம் மறைமுக நடவடிக்கைகள் பல எடுத்துள்ளது.

"இன்று கிழக்கு, வடக்கு, வடமத்திய மாகாணங்களில் தான் அரிசி அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதே நேரத்தில் இம்மூன்று மாகாணங்களில் வசிப்பவர்கள்தான் அரிசிக்கு அதிக விலைகொடுக்க வேண்டியுள்ளது. திருகோணமலை, யாழ்ப்பாணம், காலி ஆகிய இடங்களிலும் அரிசி இறக்குமதி செய்யப்பட்டால் அரிசி விலை உயர்த்தவேண்டிய அவசியம் ஏற்படாது.

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு இறுத்தல் அரிசி கொண்டுசெல்ல ஏற்படும்செலவு ஒரு சதமும், ஒரு சதத்தில் மூன்றில் ஒருபங்கும்தான் ஏற்படுகிறது.



திரு. அ. அமிர்தலிங்கம்

"வடபகுதி மக்கள்தான் இதனை எதிர்ப்பதாகச் சொல்லி உணவு மந்திரி நாட்டு மக்களை ஏமாற்ற முற்படுகிறார். இந்த தந்திரம் நீண்ட நாள் பலனளிக்காது.

"காங்கேசன் துறையில் உற்பத்தி செய்யப்படும் சீமந்து காங்கேசன்துறையிலும் அம்பாந்தோட்டையிலும், கொழும்பிலும் ஒரே விலையில்தான் விற்கப்படுகிறது. இப்படியாயின் ஒவ்வொரு பொருளுக்கும் அரசாங்கம் விலை உயர்த்த வேண்டி ஏற்படும். இவ்வாறு மக்களை ஏமாற்ற முற்படாது, சிறந்த ஆட்சி நடத்த முடியாவிட்டால் வெளியேறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

# சமாதான யாத்திரைக்கு அரசாங்கம் மறுப்பு

## சீனு மேலுள்ள அனுதாபத்தாலா?

பாரதத்தின் தலைநகரான புதுடில்லியிலிருந்து சீனத் தலைநகரான பீகிங்கிற்குச் செல்லும் உலக சமாதானக் கோஷ்டியுடன் பாத யாத்திரை செல்லவிருந்த, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிப் பேராசிரியர் திரு. பி. நவரத்தினம் எம். ஏ. அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் கெடுபிடி நடவடிக்கையால் இப்பொழுது தனது பிரயாணத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளார்.

[illegible] சீனப் பிரச்சினையில் [illegible] ஏற்படுத்த முனை[illegible]டுகளின் முன்னணி[illegible]தாகக் கூறிக்கொ[illegible]து நாட்டு ஆட்சி[illegible]ன்று அதே நோக்[illegible]லும் பலப்படுத்த [illegible]சிரியர் அவர்[illegible]ல்பட விட[illegible] த[illegible]ளவர்.

இது [illegible]யமாகத் தி[illegible] நவரத்தினம் அவர்கள் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது: 'உலக சமாதானக் கோஷ்டியினரின் பாத யாத்திரையில் நான் கலந்துகொள்வதாக செய்திகள் வெளியாயிருந்தன. நானும் கடந்த சில தினங்களாக, செலவாணிக் கட்டுப்பாட்டு விதிகளைத் தளர்த்தி யாத்திரையில் கலந்துகொள்ள வசதி செய்து தரும்படி நிதி மந்திரியை வேண்டியிருந்தேன். ஆனால் நிதி மந்திரி அவர்கள் அரசாங்கத்தின் தற்போதைய நடைமுறைக்கு இணங்க நான் நாட்டை விட்டு வெளியேற முடியாது என்று கூறிவிட்டார்.

மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து திருச்சிசெல்வதற்கு உரிய பிரயாணச் செலவாகிய ஐம்பது ரூபாவுக்காகுதல் அநுமதி வழங்கும்படியும், அது தவறின் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்குக் கடல் மார்க்கமாகச் செல்வதற்குரிய பிரயாணச் சீட்டுப் பணமாகிய மூன்று ரூபாவுக்கு அனுமதி வழங்கும்படி வேண்டியிருந்தேன். அனைத்தும் மறுக்கப்பட்டு விட்டன. ஆகவே எனது பிரயாணத்தைத் திருத்த வேண்டியேற்பட்டுள்ளது.'

குட்டி உச்சிமாநாட்டைக் கூட்டியதும, பிரதமர் இரு நாடுகளுக்கும் தூது சென்றதும் வெறும் ஏமாற்று வித்தையா? அல்லது திரு. நவரத்தினம் அவர்கள் தமிழர் என்ற காரணமா? அல்லது இலங்கை அரசாங்கத்திற்கும் சீன அரசாங்கத்திற்கும் இடையில் உள்ள இரகசிய ஒப்பந்தங்களின் குட்டு உடைந்துவிடும் என்பதா? அல்லது இலங்கை அரசாங்கத்தார் குட்டி உச்சிமாநாடு கூட்டியதும், சமாதானத் தூது சென்றதும் உண்மையில் நடுநிலைமைநோக்குடன் அல்ல என்பதா? இப்படியான பலத்த சலசலப்புக்கள் இன்று அரசியல் வட்டாரங்களில் தோன்றியுள்ளன.

# சிங்களம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானமான முறையில் தாங்கள் பாடசாலையை விட்டு வெளியேற வேண்டுமானால் சிங்கள ஆசிரியை உடனடியாக பாடசாலையை விட்டு வெளியேற வேண்டுமென்று நிபந்தனை விதித்தனராம். நிலைமையை சீர்படுத்த முனைந்த தலைமை ஆசிரியை சிங்கள ஆசிரியையை அடுத்த அரசாங்க உத்தரவு கிடைக்கும் வரை வெளியேறுமாறு பணித்தாராம்.

தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி அறிவு கிடைக்காவிட்ட போதிலும், சிங்களப் பயிற்சிக்கு இடமளிக்க மாட்டோம், என்று பெற்றோர் சபதமிட்டுள்ளனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களச் சோதனை

# எதிர்ப்பு இயக்கம் வெற்றி பெற்றதா?

## "வீரகேசரியிலிருந்து நானுகவே விலகவில்லை"

### பிரிவுபசார விருந்தில் திரு. லோகநாதன்

"வீரகேசரி பத்திரிகையை விட்டு என்னிஷ்டத்தின் பேரில் நானுக விலகிக் கொள்ளவில்லை. நிர்வாகத்தைச் சார்ந்தவர்கள் இரண்டொருவரின் உபாயங்களின் விளைவே இன்றைய நிலைமை. இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலாக, அபிமானத்தோடு நான் நேர்மையாகக் கடமையாற்றி வந்த ஒரு ஸ்தாபனத்தில், மிகச் சமீப காலமாக நிகழ்ந்து வரும் செயல்கள் பத்திரிகைத் தர்மங்களில் நம்பிக்கையுடையவர்களுக்கு வெறுப்பையூட்டுவன".

'வீரகேசரி' ஞாயிறு இதழின் பிரதம ஆசிரியராயிருந்த திரு. வி. லோகநாதன், தமது தாயகம் திரும்புவதை முன்னிட்டு, கடந்த 2-3-63 சனிக்கிழமை மாலை கொழும்பு கிரான்ட் ஓரியண்டல் ஹோட்டலில் தமக்கு அளிக்கப்பட்டபிரியாவிடை விருந்துபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள சகல தமிழ், சிங்கள, ஆங்கில தினப் பத்திரிகைகளிலும், பிரதான வாராந்த தமிழ்ப் பத்திரிகைகளிலும், இந்திய, அமெரிக்க, பிரிட்டிஷ், ரஷ்ய தூதராலயங்களிலுமிருந்து ஒவ்வொருவரைச் சேர்த்து ஒரு குழுவை உருவாக்கி, திரு. சில்லையூர்ச் செல்வராசனும், திரு. கே. பாலச்சந்திரனும் பொறுப்பேற்று, இந்த உபசாரத்தை நடத்தினர்.

வைபத்துக்குத் தலைமை தாங்கிய இலங்கை வானெலித் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. க. செ. நடராசன், 'அரையாள்' அளவான பெரியதோர் மாலை சூட்டி 'லோகு'வை வரவேற்ருர். 'வீரகேசரி'க்கு எதிரும் புதிருமான 'தினகரன்' பத்திரிகையைச் சேர்ந்தோர் உட்பட, பலர் ஒருவர் பின்னெருவராக 'லோகு'வுக்கு மலர் மாலைகளைச் சூட்டினர்கள். ஒரே பதவியைப் 'பங்கு-மார்க்கெட்' முறையில் வகித்து வரும் இரண்டு 'வீரகேசரி' ஆசிரியர்களும், ஒரு செய்தி ஆசிரியரும் சமுகமாயிருந்தும், யாரும் 'கேசரி' சார்பில் மாலை சூட்டாமல் கைகட்டி வாளாவிருந்தது எதையோ குறித்துக் காட்டுவது போலிருந்தது.

லோகு கடமையாற்றிய ஸ்தாபனம் அவரதுசேவைக் காலத்துக்குரிய உபகார பணத்தை நியாயமானபடி வழங்காவிட்டால் பத்திரிகையாளர் சங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று "லங்காதிப" செய்தி ஆசிரியர் திரு. பெரமுன பேசுகையில் கூறினர்.

வீரகேசரியின் ஒரு ஆசிரியரான திரு.கே.வி.எஸ். வாஸ், தன்னை கேசரி வாரப்பதிப்புக்காகவே இலங்கைக்குத் தருவித்தார்களென்றும், ஆனல், 'லோகு'வையே வாரப் பதிப்பு ஆசிரியராக நியமித்து விட்டார்களென்றும் சொன்னர்.

வீரகேசரியின் இன்னெரு ஆசிரியரான திரு.எஸ்.டி. சிவநாயகம் பேசுகையில், இன்னும் திருமணமாகாதலோகுவுக்கு இலங்கையிலேயே ஒரு பெண் பார்த்துக் கொடுக்க வேண்டுமென்பதே தன் விருப்பமென்றும் மட்டக்களப்புக்கு லோகு சுற்றுப் பிரயாணம் போவதையறிந்து தான் மகிழ்வதாகவும், ஒரு மட்டக்களப்புப் பெண்ணையே 'லோகு' மணந்து கொண்டால் தங்களையெல்லாம் மறக்க மாட்டாரென்றும் கூறினர்.

**அடுத்த இதழில்**

தமிழ் அரசாங்க ஊழியர்களை நட்டாற்றில் கைவிட்ட பிற்போக்கு ஜி. சி. எஸ். யூ. ஐப் பதறடித்த செய்தி......!

சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து வீரக் குரலெழுப்பிய நிகழ்ச்சி......!

தொழிற் சங்கத் துறையிலே புதிய திருப்பத்தை ஏற்படுத்திய அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் சரித்திரம்.........

லோகநாதன் உபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் தொடர்ந்து பின்வருமாறு கூறினர்:—

"நான் நெருங்கிப் பழகியுழைத்த வட்டாரங்களோடு சம்பந்தப்படாதவர்கள் எனக்களித்திருக்கும் இந்த மதிப்பை என்றும் மறவேன். நான் கனவிலும் கருதாத முறையில், நான் கடமையாற்றிய ஸ்தாபனத்துக்கு எதிரும் புதிருமான 'தினகரன்' குழுவினர் எனக்களித்த பரிசையும் பாராட்டையும் போற்றி வருவேன். நான் பாரட்டுக்குரியவனல்லன். இறந்த பிறகு கிடைக்க வேண்டிய பாராட்டை, இளைப்பாறும் பொழுது கொடுத்து விட்டீர்கள். சேவையில் இருக்கும் போதே சிலரைப் பாராட்டுகிருர்கள். அவர்களுக்குத் தலைக்கனம் வந்து விடுகிறது. எனக்கு அப்படி நேர்ந்து விடக் கூடாதே என்று அஞ்சுகிறேன். 'பாரிஸ்டர் சிற்றம்பலம்' என்னும் எனது தொடர் கதை நிர்வாகச் சார்பானவர்களின் நிர்ப்பந்தத்தாலேயே இடையிலேயே நிறுத்தப்பட்டது. பத்திரிகையில் கடமையாற்றும் எழுத்தாளனுக்கு முதலாளியிடம் மட்டுமல்ல, மக்களிடமும், வாசகரிடமும் ஒரு கடமையிருக்கிறது. இந்தக் கடமையைப் பலி கொடுத்து, முதலாளிக்கு மாத்திரம் 'ஆமாம் சாமி' போட்டுக்கொண்டிருப்பவன் தேரிய எழுத்தாளனல்ல. "ஓம், ஓம்" என்று முதலாளியின் "ஓம்" வகுப்பு மாணவனயிருப்பவன், வாசகனுக்கும் மக்களுக்கும் நாமம் சாத்துகிற எழுத்தாளன்.

(12-ம் பக்கம் பார்க்க)

## இனத்துரோகிகளை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாலோர் பரீட்சை எழுதியுள்ளனர்.

இந்த அடாத செயலால் பரீட்சை எழுதிய தமிழாசிரியர்கள் மீது தமிழ் பேசும் மக்கள் ஆத்திரம் கொண்டுள்ளனர். எனவே அவர்களை ஒதுக்கிவைப்பதென்று தமிழ் பேசும் மக்களின் [illegible] முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது.

## அரசாங்க எழுதுவினைஞரின் மகத்தான சாதனை

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தினதும், தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்தினதும் வேண்டுகோளுக் கமைய இம்முறை சிங்கள பரீட்சையை 90வீதமானவர்கள் பகிஷ்கரித்தனர். கடந்த வாரச் சுதந்திரன் செய்தி ஊர்ஜிதமாகியது. வட கிழக்கில் பரீட்சை நடைபெற்ற இடங்களுக்கெல்லாம் தமிழ் அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தினர் நேரடியாகச் சென்று சிங்களப் பரீட்சை பகிஷ்கரிப்பு இயக்கத்தை வெற்றிகரமாக்கினர்.

யாழ்ப்பாணத்தில் 10 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெற்றது. இவற்றில் பரீட்சைக்கு இருக்கவிருந்த எழுது வினைஞர்களில் 90 சதவீதமானேர் பரீட்சைக்குச் சமுகமளிக்கவில்லை.

அஞ்சல் எழுத வினைஞர் ஒருவரும் பரீட்சைக்குப் போகவில்லை. யாழ் காணிப் பதிவகம், யாழ் மாவட்ட நீதி மன்றம் ஆகியவற்றின் ஊழியர்கள் ஒருவருமே பரீட்சை எடுக்கவில்லை. சில டாக்டர்களும், அதிக சம்பளம் வாங்கும் சிலரும், தாதிமாரும் பெரும்பாலான ஆசிரியர்களுமே பரீட்சை எடுத்தனர்.

மட்டக்களப்பில் பகிஷ்கரிப்பு உக்கிரமாக இருந்தது. இங்கும் எழுது வினைஞர்களில் மிகச் சிலர்தான் பரீட்சை எடுத்தனர். உயர் சம்பளஊழியர் சிலர், தமிழ் ஆசிரியர்கள், முஸ்லிம் ஆசிரியர்கள், சிங்கள ஊழியர்கள் முதலியோரே பரீட்சைக்குத் தோற்றினர்என்று செய்தி கிடைத்துள்ளது.

ஒரு நிலையத்தில் 104 பேர் விண்ணப்பம் செய்திருந்தும் 51 பேர்களே பரீட்சைக்கு வந்திருந்தார்கள். 5ம் தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த 13 பேர்களில் ஒருவர் மட்டுமே அங்கு காணப்பட்டார். வேறெரு நிலையத்தில் 18 பேர்களில் மூவர் மட்டுமே பரீட்சை எடுத்தனர்,

தன்மானம் மிக்கவர்கள், தலை வணங்காதவர்கள் என்றெல்லாம் புகழுக்கு இலக்காகி வந்த ஆசிரியர்கள் சிங்களப் பரீட்சையில் சித்தியெதுவுமின்றியே சம்பள உயர்வு பெற வாய்ப்புப் பெற்றவர்கள்—துரோகிகளாக மாறி சிங்களப் பரீட்சைக்குத் தோற்றினர் என்ற செய்திதான் தமிழ் பேசும் மக்களைக் கவலைக்குட் படுத்தியிருக்கிறது.

தமிழ் ஆசிரியர்களுக்குச் சிங்களம் அவசியமேயில்லை என்று சிங்கள ஆசிரியர் சங்கமே அரசாங்கத்துடன் போராடி வெற்றி கண்ட பின்னரும், ஆசிரியர்கள் இத்தகைய வெட்கக் கேடான நடவடிக்கையில் இறங்கியது தமிழ் பேசும் சமுதாயத்தையே காட்டிக் கொடுத்த நாசச் செயலாகும்.

## சிவநெறியைச் சீரழிக்கவா 'சிலம்பொலி'?

### களியாட்டக்காரர்களால் கழகத்தின் பெயருக்குக் கேடு

வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகம் தமிழ்த் தொண்டும் சைவ நெறியும் வளரப் பாடுபடும் நோக்குடன் ஆக்கப்பட்ட ஸ்தாபனமாகும். கழகத்தின் வளர்ச்சிக்காக நிதி சேகரிக்க வேண்டி 'சிலம்பொலி' என்னும் பெயரில் ஒரு களியாட்ட விழாவை கொழும்பில் நடத்தி வருகின்றனர்.

கொழும்பிலுள்ள ஒரு நிறுவனம், இங்குள்ள பல தரப்பட்ட மக்களையும் கவரக்கூடிய வகையில் ஒரு விழாவை நடாத்தினுல்தான் வெற்றிகாண முடியும் என்ற சாக்குடன், சைவசமயத்துக்கும், தமிழுக்கும் இழுக்குத் தரக்கூடிய பல நிகழ்ச்சிகளை சிலம்பொலியில் சேர்த்துக் கொண்டிருக்கின்றனர்.

போதையுள்ள பொருட்களை உபயோகித்தல், மது உண்ணுதல், சூதாடுதல், இன்ன பிற தீய பழக்கவழக்கங்கள் மக்கள் மத்தியிலிருந்து விரட்டியடிக்கப்பட வேண்டிய தீச்செயல்களாகுமென்று சைவசமயம்போதிக்கிறது. அத்தனைதீச் செயல்களைக் கொண்டதாகவும், அதற்கும் ஒருபடி மேலாகவும் அமைந்திருக்கிறது 'சிலம்பொலி' களியாட்ட விழா. சைவத்தை வளர்க்கப் பாடுபடும் சைவப்பெண்கள் இன்று சைவத்துக்கு முரண்பட்டமுறையில் செல்வதைக் கண்டு உண்மை சைவாபிமானிகள் கண்ணீர் வடிக்கின்றனர்.

பெரும்பான்மை சமூகத்தவரான சிங்களச் சகோதரர்களையும் களியாட்ட விழாவில் பங்குகொள்ளச் செய்து அவர்களிடமிருந்தும் பணம் வசூல் செய்யலாம் என்ற கருத்துடன்தான் சூதாட்டம், மதுபானம், மாமிச உணவு, மேலத்தேய சோடி நடனம் போன்றவற்றைச் சேர்த்தார்களாம். அத்தோடு மட்டும் நில்லாது மந்திரிமாரையும் திறப்பு விழாக்களுக்கு அழைத்திருந்தார்கள்.


தற்போதைய இலங்கை மந்திரிமார், இந்நாட்டில் [illegible] தமிழ்பேசும் மக்களுக்கும் [illegible] மதத்தவர்களல்லாதோருக்கும் எத்தகைய மதிப்புக் கொடுக்கின்றனர் என்பதை ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் நன்கு அறிவான். ஒரு தலைப்பட்சமாக நடந்து தம்மின மக்களுக்கு மட்டும் இனிக்கும் வாழ்வளிக்க முற்படும் மந்திரிமாரைத் திறப்பு விழாவுக்கு அழைத்ததமையினுல் பெருவாரியான தமிழ் மக்கள் 'சிலம்பொலி'யைப் பகிஷ்கரிக்கின்றனர்.

#### பண்பாடு காற்றேடு...

சைவத் தமிழ் பெண்மணிகள் போற்றி வளர்க்கும் பண்பாடு 'சிலம்பொலி'யின் பேரால் காற்றில் பறக்க விடப்படுகிறது. கண்ணியம் மிகுந்த குடும்பப் பெண்கள், சூதாட்டத்தி லீடுபடுவதைக் கண்ணுரக் கண்டு வெதும்பி வேதனைப்படாதாரில்லை.

ஊறுபட்ட செய்கையினுல் உற்றவரையும், நண்பர்களையும், நல்லவர்களையும் பகைத்ததோடல்லாமல், பணச் செலவையும் மேம்படுத்தியிருக்கிருர்களே அவர்கள், என்பதை எண்ணுகையில் தான் மனம் பேதலிக்கிறது.

மேல்நாட்டு நாகரீகத்தில் மூழ்கித் தவிக்கும் சில கொழும்புவாழ் ஆங்கிலத்தமிழர்களின் தூண்டுதலுலேயே, இதுகாலவரை நற்பணியாற்றிய சைவ மங்கையர் கழகம் கேவலமான பாதையில் செல்ல முனைந்த என்பதை அறிந்து துன்பப்படுகிறேம்.

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு


டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்,
14, டாம் வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரோகி

[ இந்தியாவின் வட கிழக்கில், சீனருடன் இந்தியப் போர் வீரர் உக்கிரமாகப் போர் புரிந்து கொண்டிருந்த வேளை.

அப்பொழுது, இந்தியப் போர் வீரர் பக்கத்தில், நண்பர் இருவருக் கிடையே மனத்தாங்கல் ஏற்படுகிறது.

நட்புக்கும் தேசபற்றுக்குமிடையே போராட்டம். இறுதியில் எது வென்றது? எது தோற்றது?

கதையைப் படித்துப் பாருங்கள். ]

சிரா. மலைச் செல்வன்

"டுமீல், டுமீல்" என பீரங்கிகளின் வெடிச் சத்தம் வானைப் பிளந்து சென்றது. 'படீர் படீர்' என கைக் குண்டுகளின் ஒலி காதைத் துளைத்தது.

எங்கு பார்த்தாலும் ஒரே புகை மண்டலம். நீல வானிலே தவழ்ந்து விளையாடும் மேகக் கூட்டங்கள் அம்மலைக் குன்றுகளின் — வெள்ளிப்பனிமலைகளின் உச்சியினை கட்டித் தழுவிக் கொண்டிருந்தன. பீரங்கி, கைக் குண்டுகளிலிருந்து எழுந்த விடப் புகையும் அம்மேக மண்டலத்தோடு கலந்து சங்கமமாகியது.

இந்தியாவின் வட கிழக்கில் ஒரு பகுதி. அங்கும் இங்குமாக உயர்ந்த குன்றுகள். அவற்றின்மீது பனிப் படலங்கள் திட்டுத் திட்டாகக் காட்சி அளித்தன. குன்றுகளின் இடையிடையே அடர்ந்து வளர்ந்த காடுகள்-பச்சைப் பவளமென கண்ணுக்கு இனிய விருந்தாக இருந்தன அவை.

அந்த அழகிய பிரதேசங்கள்தான் பீரங்கிகளின் ராட்சத செயலால் உருத் தெரியாமல் சின்னுபின்னமாகிக் கொண்டிருந்தன.

ஆம்! பாரத-சீன எல்லைப் போர்-பாரதத் துருப்புகளுக்கும் சீனத் துருப்புகளுக்கும் மிகப் பயங்கரமாகப் போர் நடந்து கொண்டிருந்தது. சீனர்கள், பீரங்கி—மற்றும் புது வித ஆயுதங்கள் கொண்டு தாக்கினார்கள். வீரத்தின் விளைநிலம் பெற்ற பாரத துருப்புகள் என்ன ஏமாளிகளா? இல்லை. வீர உணர்ச்சியுடன் தோள்கள் துடிக்க, நரம்புகள் முறுக்கேற எதிர்த்துத் தாக்கினார்கள்.

பீரங்கி, துப்பாக்கி, மற்றும் புதுமை மிகு ஆயுதங்களில் இருந்து புறப்பட்ட குண்டுகள் சரமாரியாகப் பொழிந்தன.

அக் குண்டு வீச்சில் சிக்குண்ட வீரர்கள் எத்தனை!... எத்தனை! ஆகாய வெளியில் தூக்கி எறியப்பட்டோர் எத்தனை!

சிறிது நேரத்தில்—

ஆற்றின் அணை உடைந்து தண்ணீர் வெள்ளம் புறப்பட்டது போல, எங்கிருந்தோ வந்து குவிந்தனர் சீனத் துருப்புகள்.

அதனால் பாரத துருப்புகளுக்கு அவர்களை எதிர்த்துப் போராட முடியவில்லை. பின் வாங்க நேர்ந்தது.

சிறிது நேரத்தில் — அந்த இடத்தைவிட்டே வாபஸ் ஆயினர் பாரத துருப்புகள். ஆனால்?

அப்போரில் பாரத துருப்புகள் எத்தனையோ, தாய் நாட்டிற்காக பாடுபட்ட வீரர்களை — வீர முழக்கஞ் செய்யும் சிங்கங்களை — 'தன்னுயிர்போனாலும், தாய்நாடு அன்னியரிடம் மண்டியிட விடேன்' என வீர உணர்ச்சி உள்ளத்திலே பொங்க வெஞ்சமர் புரிந்த வீரத் தங்கங்களை இழந்தது.

பாரதம் பறிகொடுத்த வீரர்களில், சீனர்களிடம கைதானோர் சிலர்.

* * *

'சீன—இந்திய எல்லைப் போர்-கடுஞ்சமர் புரிகின்றனர் — அமெரிக்கா இந்தியாவிற்கு ஆயுத உதவி' என பத்திரிகைகளில்செய்தி.

திரும்பும் திசையெல்லாம் எல்லைப் போரைப் பற்றிய பேச்சே. காலை எழுந்தவுடன் பத்திரிகை படிப்பது போரைப் பற்றியே.

பல நாடுகள் பாரதத்திற்கு ஆதரவு அளித்தன. 'சீனனே வெளியேறு' என சிம்மக் குரல் எழுப்பின.

பாரதத்திற்கு பிரிட்டிஷ், அமெரிக்கா முதலிய வல்லரசுகள் ஆயுத உதவியளித்தன. பாரத நாட்டில் அன்னிய நாட்டு ஆயுதங்கள் குவிந்தன.

அவ்வாயுதங்களைக் கொண்டு போர் புரிந்தனர் இந்தியப்படையினர். ஆனால் பலன்?

கண்டது தோல்வியே. ஆதரவும், ஆற்றலும் இருந்தும் ஏனோ தோல்வி? சீனர் படைகளோ முன்னேறிக் கொண்டே இருந்தனர். காரணம் ஏனோ புரியவில்லை.

* * *

இந்திய காவல் நிலையம் ஒன்று — வெளிப் புறத்தே ஒரு சில இராணுவ வீரர்கள் காவல் புரிந்து கொண்டு இருந்தார்கள்.

காவல் நிலையத்திற்கு ஒரு புறத்தே பெரிய சமதரை— ஆகாயவிமான நிலையம் அது. ஓரிரண்டு விமானங்கள் வான வெளியில் வட்டமிட்டு ரோந்து புரிந்து கொண்டிருந்தன.

காவல் நிலையத்திற்கு மறு புறத்தே காட்டுப் பிரதேசம். அதற்கும் காவல் நிலையத்திற்கும் ஒரு பர்லாங்கு இருக்கலாம். அங்கே— இரண்டு வீரர்கள் துப்பாக்கி தாங்கி காவல் புரிந்து கொண்டு. அங்கும் இங்குமாக நடந்துகொண்டு இருந்தார்கள்.

அந்த நேரத்தில்தான்—

அக்காட்டிலிருந்து 'சலசல' வென செடிகள் அசையும் சத்தம் கேட்டது.

அவ்வீரர்கள் திடுக்கிட்டுத் திரும்பினர். சத்தம் வரும் இடத்தை நோக்கி துப்பாக்கிகளை நீட்டிக் குறிவைத்தனர்.

சலசலப்புக் கேட்ட இடத்திலிருந்து—

ஒரு இராணுவ வீரன் காவல் நிலையத்தை நோக்கி வந்துகொண்டிருந்தான். அவன் நிராயுதபாணியாகவே இருந்தான்.

இரு காவல் வீரர்களும் அவனை நோக்கி மெதுவாக சென்றனர் துப்பாக்கிகளை நீட்டியவாறு. அவனும் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

அவர்கள் நெருங்கியதும் காவல் வீரர்கள் ஆச்சரியத்தோடு தம் கண்களை அகல விரித்து நின்றனர்.

ஆம்! அங்கு வந்தவன் இந்தியப் போர்வீரனே!

காவல்வீரர்களில் ஒருவன், 'ஆ முகர்ஜி! எப்படி அப்பா வந்தாய்?' என்றான் ஆச்சரியத்தோடு.

'ஆமாம் சீனர்களிடம் சிக்கியவர்களில் நானும் ஒருவன். ஒப்படியோ தப்பி ஓடி வந்துவிட்டேன்' என்றான் வந்தவன்-முகர்ஜி.

பின் காவல்வீரர்கள் முகர்ஜியை அதிகாரியிடம் அழைத்துச் சென்றனர். முகர்ஜி அதிகாரியிடம் தான் சீனர்களிடம் சிக்கிக்கொண்டது முதல் தப்பி வந்தது வரை எல்லா விபரங்களையும் கூறி முடித்தான்.

அதிகாரி, 'நீ அவர்களிடமிருந்து தப்பி, நம் காவல் நிலையத்தைக் கண்டு பிடித்து வந்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்' என்றார். பின் சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, 'எப்படியோ தப்ப முடியாதவர்கள், ஒவ்வொரு காவல் நிலைய படை, ஆயுத விபரங்களை அவர்கள் பலாத்காரத்திற்குப்பயந்து, சொல்லாமல் இருந்தால் சரி. பாரத தோல்விக்கு, அப்படி அகப்பட்டவர்களிற் சில பயந்தாங் கொள்ளிகளின் துரோகமே காரணமாக வேண்டுமென்று நினைக்கிறேன்' என்றார் கவலையுடன்.

அப்போது முகர்ஜி முகத்தில் வியர்வை முத்துக்கள் புன்முறுவல் பூத்து நின்றன. ஏதோ சொல்ல முடியாத பீதியால் தவிக்கிறான் என அவனுடைய முகம் காட்டிடியது.

* * *

சந்தர்ப்ப சூழ்நிலையால், அன்பினால் கட்டுண்டவர்கள் பிரிந்து விடுகிறார்கள். அப்படிப் பிரிந்து, பின் சேர்ந்துவிட்டால், அவர்கள் உள்ளம் எப்படி மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கிறது! பிரிந்துவிட்ட சேயைக் கண்ட தாய், அதை கட்டித் தழுவி தன் அன்பைச் சொரிகிறாள். பசு தன் கன்றை, நாவினால் நக்கித் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது.

அப்படித்தான் முகர்ஜியின் நண்பன் ஜெய்ராஜும். ஜெய்ராஜும் நண்பன் முகர்ஜியைக் கண்டதும் ஏதோ புத்துணர்ச்சிகள் கொண்டான். உதடுகளிலே புன்னகை மலர்ந்தது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் முத்தென உருண்டோடியது,

ஜெய்ராஜ் சொன்னான்: 'முகர்ஜி! நீ பிரிந்தது என்னுடைய கண் ஒளியை இழந்தது போல் இருந்தது. இப்போதுதான் என்னுடைய கண்களில் புது ஒளி வீசுகிறது. முகர்ஜி! எப்படிச் சீனத்துருப்புகளிடம் இருந்து தப்பிவந்தாய்?'

'தப்பி வரவில்லை ராஜ்! விட்டு விட்டார்கள்' என்றான் முகர்ஜி.

'என்ன விட்டு விட்டார்களா? ஆச்சரியமாக இருக்கிறதே! அந்த இரும்பு மனம் படைத்தவர்களுக்கு எப்படியப்பா இளகிய மனம் உண்டாகியது?' என்றான் ஜெய்ராஜ் ஆச்சரியத்தோடு.

'சும்மாவா அவர்கள் மனம் மாறியது?'

'எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே! கொஞ்சம் தெளிவாகத்தான் கூறேன்' என்றான் ஜெய்ராஜ்.

'பாரத ராணுவத்தைப் பற்றிய சிற் சில விபரங்கள் சீனத் துருப்புகளுக்கு தெரிந்துவிட்டது.'

'என்ன' என்றான் ஜெய்ராஜ் அதிர்ச்சியோடு.

"ஆமாம்- கைதானவர்கள் கொடுத்த விபரங்கள் அது. கூற மறுத்தோர்களைக் கொன்றுவிட்டார்கள். கூறியோருக்குக்கிடைத்தப் பரிசு விடுதலை!"

'அப்படியானல் நீயும்......' முடிப்பதற்குள் "ஆம்— நானும் எனக்குத் தெரிந்தவற்றைக் கூறிவிட்டேன்".

'ஆ'......' என்றான் ஜெய்ராஜ் பதற்றத்தோடு. அவனது முகம் வியர்வையால் நனைந்தது. கன்னங்கள் கோபத்தால் சிவப்பேறின.

'என்ன ஜெய்ராஜ் அசந்துவிட்டாய்!'

'ம்......உயிருக்குப் பயந்து மானத்தை விலை கூறிவிட்டாயே'

'உயிரைப் போக்க யார் விரும்புவார்கள்?'

ஜெய்ராஜ் பைத்தியம் பிடித்தவனைப் போல் பயங்கரமாகச் சிரித்தான். "முகர்ஜி!உனக்கு மானத்தைவிட உயிர்தான் பெரிது. பார்புகழும் நம் பண்டைத் தாயகத்தில் வாழ்ந்தவர்கள் மானம் பெரிது என மதித்தார்களா? அல்லது உயிர் பெரிதென மதித்தார்களா? நமது நாட்டின் சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பார், எதை மதித்து வாழ்ந்தார்கள் என்று. தாய்நாட்டை, அன்னியன் பிடிக்க வந்தான் என்ற செய்தி கேட்டு, நொடிப் பொழுதில் கையிலே வாள் சுழல, உள்ளத்திலே வீரம் விளையாட, வேற்று நாட்டாரைத் தோற்றோடச் செய்த வீரச் சிங்கங்களின் சவ பேட்டை நுகர்ந்துபார்! அங்கே வீசுவது மான மணமா அல்லது உயிர் மணமா என்று? முகர்ஜி! நீ வந்தது கண்டு உள்ளம் பூரித்தேன். ஆனால் 'அன்னியன் கேட்டான், நா சொன்னேன் நமது இரகசியங்களை' என்று உயிருக்குப் பயந்து ஓடி வந்ததைக் கண்டுதான் என் மனம் புழுங்குகின்றதடா! நீ ஒரு தேசத் துரோகி! மானத்தோடு வாழ்ந்தவர்களின்—நாட்டிற்காக பாடுபட்டவர்களின் - கதைகளைப் படித்து வாயாரப் புகழ்வாயே! எங்கே உன்னுடைய தேசாபிமானம்? உயிருக்காகப் பயந்து, மானத்தை விற்று, நாட்டைக் காட்டிக் கொடுத்த துரோகியே! நீ இந்த நாட்டில் வாழக் கூடாது. உயிரின் மீது ஆசை வைத்தாயே! அந்த ஆசை அற்ப ஆசையாகட்டும்." ஆவேசத்தோடு கூறியவன், தன் கைத்துப்பாக்கியால் முகர்ஜியைச் சுட்டான்.

முகர்ஜி 'ஆ......' என்று அலறியவாறே கீழே சாய்ந்தான். மார்பிலிருந்து இரத்தம் 'குபுகுபு' வெனப் பாய்ந்தது. எதற்கு ஆசைப்பட்டு தேசத் துரோகியாக மாறினனே, அந்த உயிரே அவன் உடலை விட்டு எங்கேயோ சென்றுவிட்டது.

ஜெய்ராய், முகர்ஜியின் உடலை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய கண்களிலிருந்து கணணீர் வடிந்துகொண்டிருந்தது. அக் கண்ணீர் தேசத் துரோகியைக் கொன்றுவிட்ட

(13-ம் பக்கம் பார்க்க)






பணக்காரன் முதல் பாட்டாளி வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தந்தி: தாமரை

3597—6522


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சங்கப் பலகை

## கன்னிகள்

(பொங்கல் மலர்)

ஆசிரியர்: ஐ. வரதராசா.

வெளியீடு: அல்வை வள்ளுவர் கலை மன்றம்.

விலை: 25 சதம்.

'கன்னிகள்' பொங்கல் மலர் 30 பக்கங்களுக்கு மேல் செல்கிறது. கட்டுரை, கவிதை, சிறுகதை, நாடகம் இப்படிப் பல அம்சங்களும் மலரில் தென்படுகின்றன. தாகூரின் சிறுகதை யொன்றின் தமிழாக்கமும் இடம் பெற்றுள்ளது 'மலரும் மாணவர்' என்ற திரு. சி. என். அண்ணுத்துரையின் கட்டுரையும், மாணவச் செல்வன் குணேந்திரராசாவின் 'போச்சுதடா தமிழுலகு பாதாளத்துள்!' என்ற கவிதையும், 'படுபாவி' யின் கேள்வி-பதில் பகுதியும் ரசிக்கத்தக்கவை.

---

## செய்தி

ஆசிரியர்: பெரி. சுந்தரலிங்கம்.

பிரசுரம்: ராஜா பிரஸ், கொழும்பு.

விலை: 20 சதம்.

இலங்கைப் பத்திரிகையுலகில் புதிதாகத் தோன்றியுள்ள 'செய்தி', கலை, இலக்கிய, அரசியல் மாதமிரு முறை இதழ் எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறது.

எடுத்த எடுப்பிலேயே கவர்ச்சிகரமான தலைப்புடன், பின் உள்ளேயும் பக்கங்களைப் புரட்ட, நல்ல கதைகள், கட்டுரைகள், கவிதைகள்—உள்நாட்டு, பிற நாட்டுச் செய்திகள் இவற்றை ருசிகரமான முறையில் அளித்து, வாசகர்களைக் கவரும் தன்மையுடன் 'செய்தி' விளங்குவது, சிறப்பான எதிர்காலத்துக்குச் சிரிய அறிகுறியாகும்.

ஆனால்......?

ஆமாம். வழக்கமான கேள்வி 'செய்தி' யையும் எதிர்பார்த்து நிற்கத்தான் செய்கிறது. 'ஆனால்...பத்திரிகை எவ்வளவுகாலம் நீடிக்கும்?' என்ற கேள்வி தான் அது!

தாய் நாட்டு எழுத்தாளர் பலரின் ஆசியுடன்—சில அரசியற் தலைவர்களினதும் வாழ்த்துடனும் வெளிவந்துள்ள 'செய்தி' இதழ், எதிர்வரும் இன்னல்களை எதிர்த்து வென்று, வாசகர்களின் ஆதரவைப் பெற்று, நின்று நிலைக்கும் ஏடாக விளங்க வேண்டுமென்பதே எமது அவா.

---

## இலக்கியச் சோலை

(ஆண்டு மலர்)

வெளியீடு: மாணவ முத்தமிழ் மன்றம்.

புனித கபிரியேல் கல்லூரி, எட்டியாந்தோட்டை.

எட்டியாந்தோட்டை புனித கபிரியேல் கல்லூரியைச் சேர்ந்த மாணவ முத்தமிழ் மன்றத்தின் வெளியீடாகிய 'இலக்கியச் சோலை'யின் ஆண்டு மலர், மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் தமிழார்வத்தையும், தமிழபிமானத்தையும் நன்கு புலப்படுத்துகிறது.

மலைநாட்டு இளைஞர்களிடையே தமிழ் மொழிப் பற்றை உண்டாக்கி, அவர்களுக்குத் தமிழ் மீதும், தமிழ் இனம் மீதும் தணியாத பாசத்தை ஏற்படுத்தும் தொண்டில் மாணவ முத்தமிழ் மன்றம் அயரா முயற்சியுடன் உழைப்பதாக, அதன் மலரில் காணப்படும் நடவடிக்கைகளின் பட்டியலிலிருந்தும், அதன் பிற கலை, கலாச்சார அலுவல்களிலிருந்தும் எமக்குத் தெரிய வருகிறது.

மலையகத்தில் தமிழ் இலக்கியத் தொண்டு புரியும் மாணவ மன்றத்தின் நன் முயற்சியே இலக்கியச் சோலை ஆண்டு மலர். பாராட்டுகிறோம்.

---

## சமுதாயம்

ஆசிரியர்: எ. ஈ. மூர்த்தி.

வெளியீடு: இலங்கை அருந்ததிய வாலிபர் முன்னேற்றச் சங்கம்.

விலை: 15 சதம்.

திருபான்மைத் தமிழரின் உரிமைகளைப் பற்றி அதிகம் பேசுவோர், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அவர்களின் கல்வி, அறிவு வளர, எவ்வித முயற்சியிலும் ஈடுபடுவதாகத் தெரியவில்லை.

இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவதற்குத் தகுதி வாய்ந்தவை தனிப்பட்ட சங்கங்களும், கழகங்களுமே யாகும். அரசியல் கண்ணோட்டத்தோடல்லாது, பொது நோக்குடன் தொழிற்படும் அவைகளால் தான் முடியும்.

அத்தகைய சங்கமொன்று தான் இலங்கை அருந்ததிய வாலிபர் முன்னேற்றச் சங்கம். அதன் உரிமைக் குரலாக வெளிவந்துள்ளது 'சமுதாயம்' என்னும் பத்திரிகை. சங்கத்தின் நடவடிக்கைகள் விஸ்தரிக்க, முயற்சிகள் வெற்றி பெற இப் பத்திரிகை உதவியாக அமையுமென நம்புகிறோம்.

---

## விவேகி

(ஆண்டு மலர்)

வெளியீடு: ஆசீர்வாதம் அச்சகம்.

விலை: 60 சதம்.

தமிழ் கூறும் நல்லுலகின் வாசகப் பெருமக்களை மகிழ்வித்து வந்த 'விவேகி' இந்த ஆண்டுப் பிறப்புடன், நான்காம் பிராயத்தை அடைகின்றதெனப் பெருமைப்பட்டுக் கொள்கிறது, 1963-ம் ஆண்டு மலராக வெளிவந்துள்ள 'விவேகி' யின் தலையங்கம். உண்மையிலேயே பெருமைப்பட வேண்டிய விஷயம்தான்.

ஆண்டு மலர் நல்ல அம்சங்கள் நிறைந்தனவாக, வாசிப்பதற்குப் பல்வேறு சுவை நிரம்பிய கட்டுரைகள், கதைகள் அடங்கியனவாகத் திகழ்கின்றது.

தாழையடி சபாரெத்தினத்தின் சிறுகதையொன்றும், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் கவிதையும் இடம் பெறுகின்றன. வேறு நல்ல சிறு கதைகளும் கூடவே இருக்கின்றன.

காகிதப் பஞ்சம் போலும்-அச்சுத் தாள் பொலிவிழந்து காணப்படுகின்றது. என்றாலும், இன்னும் கொஞ்சம் நல்ல தாளில் மலரைப் பிரசுரிக்க முயற்சித்திருக்கலாம்.

—மாவன்ன

# பதவியின் மகிமைக்குப் பெருமை அளித்த பெருமனிதர்



வடபீகாரிலுள்ள சாரன் மாவட்டத்தைச் சேர்ந்த குக்கிராம மொன்றில் 1884-ம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 3-ந் திகதியன்று டாக்டர் ராஜேந்திர பிரசாத் பிறந்தார். அவருடைய இளமைப் பருவம் கிராமியச் சூழ்நிலையிலேயே கழிந்தது. சப்ராவிலுள்ள உயர் பள்ளியில் மாணவனுகச் சேர்க்கப்பட்ட பிரசாத், படிப்பில் கெட்டிக்காரனுக விளங்கினர். கல்கத்தாப் பல்கலைக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட உயர் பள்ளிப் பரீட்சையில் முதலாவதாக இவர் தேறிய பொழுது, அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ராஜேந்திர பிரசாத் தான், இத்தகைய ஸ்தானத்தை அடைந்த முதல் பீகார் மாணவராவர். ஆகவே, பீகாரில் அவருடைய தேர்ச்சி அதிக உற்சாகத்தை ஏற்படுத்தியது. உள்ளூர்ப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் தலையங்கம் கூட அதைப்பற்றி எழுதினர்கள்.

பள்ளித் தேர்வில் காட்டிய அதே திறமையை ராஜேந்திர பிரசாத், இண்டர் மீடியற், பி. ஏ. பரீட்சைகளிலும் காட்டத் தவறவில்லை. ஆம். இரண்டு பரீட்சைகளிலும் முதலாவதாக அவர் தேறினர். ஆனலும், பிரசாத் அவர்கள் வெறும் புத்தகப் பூச்சியாக என்றுமே இருந்ததில்லை. மாணவர்க்கான சகல நடவடிக்கைகளிலும் முழு மூச்சுடன் ஈடுபட்டு, முன்னணியில் நின்று உழைத்தார். 1915-ம் ஆண்டில், ராஜேந்திரப் பிரசாத் அவர்கள் எம். எல். பரீட்சையில் முதல் வகுப்பில் முதலாவதாகத் தேறினர். அவர் கல்கத்தா ஹைகோர்ட்டில் வழக்கறிஞராகக் கடமையாற்றத் தொடங்கிய காலத்தில், பீகார் மாகாணம் முழுவதுமே அவரைத் தெரிந்து வைத்திருந்தது எனில், அதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

மாணவராக இருந்த காலத்திலிருந்தே அரசியலில் அதிக ஈடுபாடு காட்டி வந்த ராஜேந்திர பிரசாத், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தீவிர பங்கு பற்றி, கடைசிவரைக்குத் தன்னலமற்ற தியாகச் சேவையை நாட்டுக் கீந்தார். 1906-ம் ஆண்டு தொடக்கமே பிரசாத் அவர்களுக்கு இந்திய தேசியக் காங்கிரசுடன் தொடர்பிருந்து வந்தபோதிலும், 1917-ம் ஆண்டிலேயே அவர் மகாத்மா காந்தியை முதன் முதலில் நேரிற் சந்தித்தார். மகாத்மாவின் சந்திப்புடன், பிரசாத் அவர்கள் காந்தீயக் கொள்கைகளுக்கு அடிமையானுர். தமது இலாபகரமான வழக்கறிஞர் தொழிலைத் துறந்தார்; பல்கலைக் கழக செனேற் சபையிலிருந்து ராஜினுமாச் செய்தார்; மகாத்மாவின் மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவராகவும், காங்கிரசின் முக்கிய தலைவர்களில் ஒருவருமானுர். காங்கிரசின் பொதுக் காரியதரிசியாகவும், செயற்குழு அங்கத்தவராகவும் அவர் நாட்டின் விடுதலைக்குத் தமது முழு நேரத்தையும் அர்ப்பணித்து உழைத்தார். 1934-ம் ஆண்டில் பீகாரில் ஏற்பட்ட பூகம்பத்தின் போது, பீகார் நிவாரண சங்கத்தின் தலைவராக அவர் ஆற்றிய அரிய சேவையை யாரும் மறக்க முடியாது. அதே வருடத்தில் அவர் இந்திய தேசியக் காங்கிரசின் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டார். அடுத்த வருடம் நடைபெற்ற காங்கிரஸ் பொன் விழாவுக்கும் அவரே தலைமை வகித்தார். இந்த உயர்ந்த பதவியை அவர் மீண்டும் இரு முறை 1939லும், 1947-லும் வகித்திருக்கிறுர்.

இந்தியா குடியரசாகியதும், ராஜேந்திர பிரசாத் அவர்களை ஜனுதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மிகவும் எளிய மனிதராக விளங்கியவர் ராஜேந்திரப் பிரசாத். 'இந்திய அரசியலின் கண்ணிய மனிதர்' என்று அவர் விவரிக்கப்பட்டார். காந்திஜி அவரை அஜத்த சத்துரு—எதிரிகளில்லாத மனிதர்—என்றே அழைப்பார். அவருடைய எளிமையுடன், பண்பட்ட, பட்டை தீட்டப்பட்ட ஓர் நாகரீகமும் கலந்திருந்தது. இன் முகமும், அளவுகடந்த பொறுமையும் கொண்டவரானலும், கொள்கைகளைப் பொறுத்த மட்டில் விட்டுக்கொடுக்காத தன்மையும் அவரிடம் காணப்பட்டது.

உண்மையிலேயே தாம் வகித்த பதவியின் மகிமைக்குப் பெருமை அளித்த பெருமனிதராவார், காலம் சென்ற தேசத் தியாகி டாக்டர் ராஜேந்திர பிரசாத். அவர் ஆத்மா சாந்தியடைவதாக.

# தமிழரசுக் கட்சி முதல் மாவட்ட சபை

## உடுப்பிட்டியில் அமைக்கப்பட்டது

புதிய அமைப்புத் திட்டத்தின் கீழ் முதலாவது மாவட்ட சபை உடுப்பிட்டி தொகுதியில் 27-2-63 ஆரம்பிக்கப்பட்டது. இச் சபை உடுப்பிட்டித் தொகுதியில் இயங்கி வரும் ஒன்பது கிளைகளையும் இணைத்து இயங்கும்.

ஆரம்பமான தினத்தன்றே கட்சியின் வளர்ச்சி கருதிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன:

உடுப்பிட்டுத் தொகுதியிலுள்ள ஒவ்வொரு கிளையும் குறைந்த பட்சம் 25 அங்கத்தவர்களை ஒரு வார எல்லைக்குள் சேர்க்கவேண்டும்.

அண்மையில் நடைபெறவிருக்கும் கட்டவேலி-உடுப்பிட்டி கிராம சங்கத் தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகர்களை நிறுத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்யவும், அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கவும் ஒரு சபையும் தேர்ந்தெடுத்த [illegible] சி. மயில்வாகனம், கா. தம்பையா, க. சுப்பிரமணியம், சி. க. ஆறுமுகம், நா. செல்லையா ஆகியோர் இச் சபையில் இடம் பெறுவர்.

உடுப்பிட்டித் தொகுதியில் கோழிவளர்ப்பு முறைகளைக் கவனிக்கவும், விஸ்தரிக்கவும் ஒரு சபையும் நிறுவப்பட்டது.

உடுப்பிட்டி தமிழரசு மாவட்ட சபையின் உத்தியோகத்தர்களாகப்பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. க. ஜெயக்கொடி, உபதலைவர்கள்: திரு. க. தம்பையா, திரு. மு. க. தம்பையா; செயலாளர் திரு. நா. செல்லையா, உதவிச் செயலாளர்: திரு. க. நற்குணம், பொருளாளர்: திரு. கி. மயில்வாகனம், உதவிப் பொருளாளர்: திரு. க. பொன்னுச்சாமி,

மற்றும் கிராமக் கிளை செயற்குழு உறுப்பினர்கள் கட்சி விதிகளுக்கமைய மாவட்ட சபையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

## தேயிலைக்கு ஆபத்து

அவுஸ்திரேலியாவில் இறக்குமதி செய்யப்படும் தேயிலையில் 60 சத விகிதம் இலங்கையிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனல், இப்பொழுது அவுஸ்திரேலிய சந்தையில் இலங்கைத் தேயிலைக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது. அங்கு கோப்பி இறக்குமதி அதிகரித்து வருகிறதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயக்குநரை அதிரவைத்த இரகசியம்

## உருமாறிய 'லவகுசா' உருவான வரலாறு

பல வருடங்களுக்கு முன்னர் டைரக்டர் சி. புல்லையா 'லவகுசா' என்ற படத்தை தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் தயாரிக்க ஆரம்பித்தார். இப் படம் முழு நீள வர்ணப் படமாகத் தயாரிக்கப்பட்டதாகும்.

பட ஆரம்ப காலத்தில் லவனுக்கும் குசனுக்கும் நடிப்பதற்காக 10 வயது உடைய இரு பெண் குழந்தைகள் பொறுக்கி எடுக்கப்பட்டனர். படப் பிடிப்பும் ஆரம்பமாகி 6 மாதங்கள் விறுவிறுப்பாகத் தொடர்ந்து நடைபெற்றது.

தென்னிந்தியப் படத் தயாரிப்பிலுள்ள சீர்கேடுகளினால் விளையும் சிக்கல்கள் இப்படத்திலும் தலையெடுத்ததன் காரணமாகப் படம் தொடர்ந்து வளர்ச்சியடைய முடியவில்லை. பாதியில் வேலைகள் நிறுத்தப்பட்டன.

மீண்டும் மூன்று வருடங்களின் பின்னர் படப்பிடிப்பை டைரக்டர் புல்லையா தொடங்கினார். படப்பிடிப்புக்கான தேதியும் குறிப்பிடப்பட்டு, காட்சியமைப்புகள் யாவும் தயாராகின.

சாதாரண நடிகர்களுக்கு முன்னறிவித்தல் படப்பிடிப்புக்கு முதல் நாளில்தான் கொடுக்கப்பட்டது. லவகுசன் வேடங்களில் தோன்றும் இரு பெண்களும் வந்து சேர்ந்தனர்.

அன்று வால்மீகி முனிவரிடம் லவனும் குசனும் பாடம் கேட்க வேண்டிய கட்டம் படமாக்கப்பட வேண்டியிருந்தது. டைரக்டர் தயாராக 'செட்'டில் வந்து நடிகர்களின் வருகைக்காகக் காத்திருந்தார்.

ஏனைய சிப்பந்திகள் யாவரும் தயங்கியபடி எதையோ டைரக்டரிடம் முறையிட முடியாது தவித்துக் கொண்டிருந்தனர்.

டைரக்டர் புல்லையா கண்டிப்பு நிறைந்தவர். ஓரளவு முன் கோபியும்கூட. பல முக்கல் முனகலுக்குப் பின்னர் விடயம் வெளியாகியது. டைரக்டரின் முன்னிலையில் உதவி டைரக்டர் ஒருவர் ஆஜரானார்.

"என்னையா ரெடியா—ஷூட்டிங் ஆரம்பிக்கலாமா?" என்று டைரக்டர் கேட்டார்.

"ஆரம்பிக்கலாம் தான். ஆனால் ஒரு விடயம், படத்தின் தொடர்பு கெட்டுப் போகும் அளவுக்கு சம்பவம் நடந்து விட்டது. லவனும் குசனும், தங்கள் குருவுக்கு முன்னர் ஆசார உடைகளுடன் தென்பட முடியாது. மேலுடைகள் தரித்தால் தான்...... முடியும்" என்று உதவி டைரக்டர் கூறினார்.

### தமிழ்வாணன் தலைவரானார்

தென்னிந்திய சினிமாப் பத்திரிகை எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகத் தமிழ்வாணன் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

'என்னையா உளறுகிறீர்' என்று உறுமினார் டைரக்டர் புல்லையா.

லவனும் குசனுமாகப் பாக மேற்போர் இருவரும், பாவாடை தாவணி சகிதமாக டைரக்டர் முன்பு வந்து நின்றார்கள். விடயமறியாத டைரக்டர் 'யார் இவர்கள்' என்று வினவினார்.

'இவர்கள்தான் லவனும், குசனும்' என்று கிடைத்த பதிலைக் கேட்ட டைரக்டர் புல்லையா அதிர்ச்சியடைந்தார். மூன்று வருடங்களுக்கு முன்னர் சிறுமிகளாகவிருந்த இரு பெண்களும் பூரண வளர்ச்சி பெற்ற பருவப் பெண்களாகக் காட்சியளித்தனர்!



'விக்கிரமாதித்த'னில் அடலழகிகள் பத்மினி, ராகினி.

### படம் முடிந்தது

எப்படியோ வேண்டிய பல மாற்றங்களை செய்து 'லவகுச' படத்தை முடித்துள்ளார்களாம். இம் மாதம் தமிழகமெங்கும் திரையிடப் படுமாம்.



அழகின் திருவுருவோ அழித் தெழுதாச் சித்திரமோ? சிரித்துச் சித்திரவதை செய்யும் இந்தச் சிங்காரி யார் தெரியுமா? சாவித்திரி தான். சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் விருந்தளிக்கும் 'பாத காணிக்கை'யில் சித்திராவாகத் தோன்றுகிறார்.

# சந்திர மண்டலத்துக்கு புரட்சி நடிகர்

நவின முறைப்படி அமைக்கப்பட்ட ரொக்கெட் ஒன்றில் ஏறி வானுலகிற்கு புறப்பட்டார் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.



தமிழ் நாட்டிலிருந்து பெரும் புரட்சிகளை செய்து வரும் ஒருவருக்கு தேசப் பிரஷ்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டதோ என்னவோ என்று திணறவேண்டாம். சரோடி பிலிம்சார் தயாரித்துள்ள 'கலையரசி' படத்திற்காகத்தான் எம். ஜி. ஆர். வானுலகம் புகுந்து சந்திர மண்டலம் வரை சென்று புரட்சிக் கருத்துக்களை அங்கே உள்ளவர்கள் மத்தியிலும் பரப்ப முனைகிறார்.

புரட்சி நடிகருக்கு ஜோடியாக 'கலையரசி'யில் ராஜஸ்ரீ தோன்றுகிறார். அற்புதமான கதை அமைப்புடன் கூடிய இப் படத்திற்காக சந்திர மண்டலத்துக் காட்சிகள் எல்லாம் சிறந்த முறையில் படமாக்கப்பட்டுள்ளனவாம்.

உயரிய சங்கீதமும், உன்னத உடையலங்காரங்களும் கொண்ட சரோடி பிலிம்சாரின் 'கலையரசி' இம் மாதம் தமிழகமெங்கும் பவனி வருவாளென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### வழி பிறந்தது

ராஜேந்திரன், விஜயகுமாரி' ராதா ஆகியோரை வைத்துக் கொண்டு 'வழி பிறந்தது' என்ற படத்தை ஏ. கே. வேலன் தயாரிக்கப் போகிறாராம். இப்படத்தை வேலனே டைரக்ட் செய்வார். அருணாசலம் ஸ்டூடியோவில் இப்படம் வளரும்.

### 'வீரகேசரி...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகா தர்மத்தில் நம்பிக்கையுடையவன் நான். எனக்குச் சந்தர்ப்பங்களிருந்தும், நான் கடமையாற்றிக் கொண்டிருந்த பத்திரிகை தவிர்ந்த மற்றப் பத்திரிகைகளுக்கு தர்ம விரோதமாகவும் ஒளிவு மறைவாகவும் நான் எழுதிக் கொண்டிருந்ததில்லை. பத்திரிகையில் ஆசிரிய குழுவிலிருக்கும் ஒவ்வொரு தனி நபரும் பத்திரிகா தர்மங்களை நேர்மையாகக் கடைப்பிடித்தாற்தான் அந்தப் பத்திரிகையும் ஒரு நேர்மையான பத்திரிகையாயிருக்கும். இலங்கையை விட்டுப் போனாலும், உங்களில் உண்மையான நண்பர்களை மறவேன். உதட்டளவில் உள்ளங்களைக் கொடுப்பதாகச் சொல்லுகிறவர்களை விட, வாய் பேசாமலே மனத்தால் எனக்கு வாழ்த்துரைப்பவர்கள் உண்மையான நண்பர்கள். அவர்களுக்கு நான் என்றும் நன்றியுடையவன்".

திரு. செல்வராசன் நன்றியுரையுடன் பிரியாவிடை விருந்துபசாரம் இனிதாக முடிந்தது. இந்த உபசாரத்தில் 'வீரகேசரி' நிர்வாகச் சார்பானவர்கள் எவரும் ஒத்துழைப்பாக நடக்கவில்லையென்றும், அதை நடத்தும் உற்சாகத்தைக் குறைக்கும் முறையில் முயன்றார்களென்றும் விசாரித்ததில் தெரியவந்தது. இருந்தும் இலங்கையில் ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு எடுக்கப்பட்ட ஒரு பெரு விழாப் போலவே இந்த உபசாரம் நிகழ்ந்தது. 'வீரகேசரி'க்கு—கேவலம்—ஒரு கரி விழாவாகவும் இது அமைந்துவிட்டதில் வியப்பில்லை.

# தயாராகும் புதுப் படங்கள்

### பச்சை விளக்கு

பாலும் பழமும், ஆலயமணி ஆகிய படங்களின் கதாசிரியரான ஜி. பாலசுப்பிரமணியமும் திரு. பி. எஸ். வரதனும் சேர்ந்து 'ஸ்வாதி புரொடக்ஷன்ஸ்' என்ற பெயரில் ஒரு படக் கம்பெனியை ஆரம்பித்துள்ளனர். முதலாவது படமாக 'பச்சை விளக்கு' என்ற படத்தைத் தயாரித்து வருகிறார்கள். நெப்டியூனில் பூசை போடப்பட்ட இப்படத்தில் சிவாஜிகணேசன் தோன்றுவாரென நம்பப்படுகிறது.

### தாயின் மேல் ஆணை

'காஞ்சித் தலைவனை' வேகமாகத் தயாரித்து வரும் மேகலா பிக்சர்ஸ் அடுத்து ஒரு சமூகக் கதையைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். இப்படத்திற்கு 'தாயின் மேல் ஆணை' என்று பெயரிட்டுள்ளனர். கலைஞர் மு. கருணாநிதியே இப்படத்தின் கதை வசனத்தை எழுதுவார் எனத் தெரிகிறது.

### வீரபுத்திரன்

நடிகர் நாகேந்திரராவ் தனது ஸ்தாபனமான ஆர். என். ஆர். பிக்சர்ஸ் சார்பாக இந்தியாவின் யுத்தத் திறமைகளைப் போதிக்கும் பிரசார நோக்குடைய படம் ஒன்றைத் தயாரிக்க முனைந்துள்ளார்.

'பாரத நாட்டின் வீரபுத்திரன்' என்ற பெயரில் இப்படத்தை தயாரிக்கின்றார்கள். கல்யாண் குமார், நாகேந்திரராவ் முதலானோர் இப்படத்தில் தோன்றுவர்.

### வின்ஸ்டன் சர்ச்சில்


ஹாலிவூட் தயாரிப்பாளர்களான பாரமவுண்ட் பிக்சர்சார் உலக அரசியல் பிரமுகரான வின்ஸ்டன் சர்ச்சிலின் வாழ்க்கையைப் படமாகத் தயாரிக்க உத்தேசித்துள்ளார்களாம்.

வின்ஸ்டன் சர்ச்சில் எழுதிய சுயசரிதையான 'எனது வாழ்க்கை' என்ற நூலினையே ஆதாரமாக வைத்து இச் சித்திரத்தை உருவாக்க எண்ணியுள்ளார்களாம். பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் நடைபெற்று வருகின்ற இவ்வேளையில் பிரபல பிரிட்டிஷ் இயக்குநரான பிரியோண் போர்பிஸ் என்பவரும் இப்பட உருவாக்கத்துக்கான ஒத்துழைப்பை நல்கி வருகின்றாராம்.

### வாழ வைத்தவன்

விக்கிரமாதித்தனைத் தயாரித்த ஜெய் பாரத் புரடக்ஷன்ஸ் உரிமையாளர்களில் ஒருவரான வி. நமசிவாயம் தனது சொந்த தயாரிப்பு ஸ்தாபனமான ராஜேஸ்வரி பிலிம்சாருக்காக 'வாழவைத்தவன்' என்னும் படத்தைத் தயாரிக்கின்றார்.

இப்படத்தின் கதையை ஆர். எஸ். நல்ல பெருமாள் எழுதியிருக்கிறார். சி. எஸ். ஜம்புலிங்கம் இப்படத்தை டைரெக்ட் செய்கிறார்.



சிறும் சிறுத்தைகளின் [illegible] விளையாடுகிறான். தாயாருமில்லே. இந்தக் குழந்தை[illegible] தான் காரணமோ? அஞ்சலி பிக்சர்சின் 'மங்கையர் உள்ளம் மங்காத செல்வம்' படம் வந்தால்தான் இந்தப் புதிருக்கு விடை காண முடியும். சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் எதிர்பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்துக்கு இழுக்குத் தேடும் சைவ மங்கையர் கழகம்

## சை. ப. சபை கொழும்புக் கிளை தீர்மானம்

சைவத்தின் பெருமையை நிலைநாட்ட வேண்டிய சைவ மங்கையர் கழகம், இன்று சைவத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் முறையில் விழா எடுத்துள்ளது. தலைநகரில் சைவம் தழைக்கிறது என்று பெருமைப் பட்டோம், ஆனால் இன்று தலை கவிழ்ந்து செல்ல வேண்டியவர்களாகி விட்டோம்.

இவ்வாறு 3-3-63 மாலை நடைபெற்ற இருபாலைசைவ பரிபாலன சங்கக் கொழும்புக் கிளையின் விசேட கூட்டத்தில் 'சிலம்பொலி' பற்றிய ஆட்சேபத் தீர்மானத்தையொட்டிப் பேசுகையில் கோவை—மணி குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:—

அன்று பெருமைப் பட்டோம்; பூரிப்படைந்தோம். ஆம். ஈழத்தின் தலை நகராம் கொழும்பு மாநகரிலே செந்தமிழையும் சிவநெறியையும் வளர்க்கவோர் ஸ்தாபனம்—அதுவும் சைவ மகளிர்க்கென்று தனிப்பட்ட கல்லூரி அரசினர் ஆதரவின்றி தமிழ்ப் பெருங்குடி மக்களின் ஒத்துழைப்பாலும் ஆதரவாலும் இயங்குவதையிட்டு. ஆனால் அப் பெருமையும் பூரிப்பும் எம்மனதை விட்டு நீங்கத்தக்க வகையில் இன்று சைவ மங்கையர் கழகம் செயல்படத் தொடங்கியுள்ளது.

அன்று பிறமத எதிர்ப்புக்களிலிருந்து சைவ சமயத்தின் பெருமையை நிலைநாட்டிய மங்கையற்கரசியாரையும் திலகவதியாரையும் போன்ற மாதர் குல திலகங்களின் மரபில் வந்துதித்த மங்கையர் கழகத்தினர் கேவலம் அற்ப சலுகைகளுக்காக—பேருக்கும் புகழுக்குமாக—தங்கள் இனத்தின் பெருமையை, சமயத்தின் அருமையை அடகு வைத்து நவநாகரிக மங்கைகளாக கேளிக்கை யாட்டங்களிலும் புலால் விருந்துகளிலும் நாட்டம் கொள்ள முற்பட்டுள்ளனர்.

### இதுதானா பயிற்சி?

அன்றியும், பால் மனம் மாறாத தன் பச்சிளம் பாலகனைப் போருக்கனுப்பி, அப் போரிலே தன் மகன் புறமுதுகிட்டோடி மாண்டனன் என்ற செய்தி கேட்டு, அக் கோழை மகனைப் பெற்ற சுமைக்காக, அவனுக்குப் பால் ஊட்டி வளர்த்த தன் தனங்களை அரியச் சென்ற மறக்குல மங்கையர் வழி வந்த எம் மாணவிகளை—வீர மகளிர்களை — மந்திரிக்கு மாலையிடுவதற்கும்—ஆலவட்டம் ஏந்துவதற்குமா கழகத்தினர் பயிற்சியளிக்கின்றனர்?

தன் மொழியிழந்து, குடியிழந்து, தவிக்கின்றது தமிழினம். அதற்காக ஆயிரமாயிரம் இன்னல்களை ஏற்று இன்பத் தமிழைக் காக்க இன்னுயிரையும் ஈய முன்னிற்கின்றது ஒரு கூட்டம். அன்றியும் அன்னை மொழியாம் தமிழ் மொழிக்கு அரியாசனத்தில் அமர இடம் மறுத்த ஆட்சியாளரின் அவதாரங்களை தமிழ்ப் பிரதேசத்தில் காலடி எடுத்து வைக்க அனுமதிக்க விடாது எதிர்ப்புக் காட்டி ஆட்சியாளரின் கைப்பொம்மைகளால் கல்லடிபட்டு—பொல்லடி பட்டு நீதிக் கூண்டிலே நீதிப் பிச்சை கேட்டு நிற்கிறது தமிழினம். இங்கு மங்கையர் கழகம் மானத்தை விற்று மந்திரிகளைக் கொண்டு திறப்பு விழா நடாத்துகின்றது! சிலம்பொலி என்ற பெயரிலே சைவத்தையும் தமிழையும் புண்படுத்த முற்பட்டுள்ள இச்சைவ மங்கையர் கழகத்தினர், ஏன்? கழக நிர்வாகிகள்-தங்கள் தவறுதலுக்காக தமிழினத்தின் முன் தலை குனியும் காலம் வெகு தூரத்திலில்லை!

இத் தீர்மானத்தின் நகலை சைவ மங்கையர் கழக நிர்வாகிகளுக்கு அனுப்பி வைப்பதென்று ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## குவளை மலர்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் சமைத்த தயிர்க் குழம்பைக் களிப்புடன் உண்டு கொண்டே அதைத் தயாரித்த அவளின் பெருமையைப் புகழ்ந்து பேசுகிறான். தன் தலைவனுடைய புகழ்ச்சியைக் கேட்டதும் அவளுக்கு நாணம் வந்துவிட்டது. அதனால் அவள் தனது அழகிய முகத்தைக் கவிழ்த்து அடக்கத்துடன், தன் மகிழ்ச்சியை வெளிப்படையாகக் காட்டாது நுட்பமாகக் காட்டிக் கொண்டாள். வெட்கம், அடக்கம், பணிவு, இவற்றோடு கலந்த அவளது முக மலர்ச்சிக்கு ஒரு தனிப்பட்ட காவியமே இயற்றிவிடலாம்.

இத்தகைய ஒரு சித்திரத்தை நமக்கு குறுந்தொகை மூலம் படைக்கிறார் ஒரு புலவர். படித்துப் பாருங்கள் சுவை மிகுந்த இச் செய்யுளை:

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்தட்ட தீம்புளிப்பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

(குறுந்தொகை 16)

இருபாலை சைவபரிபாலன சங்கத்தினர் இம்முறை கோப்பாயில் சிறப்பான முறையில் மகா சிவராத்திரி விழாவைக் கொண்டாடியதையிட்டு பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

## நமக்குள்ளே...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பலர் நேரிலும், எழுத்து மூலமும் கேட்டு விட்டார்கள். இதுவரை பதில் இல்லை. பணக்காரரிடம் மட்டும் பணம் சேர்த்திருந்தாலும் பாதகமில்லை. "நானும் உங்கள் வர்க்கம்தான், ஏழைகளின் தோழன் தான்" என்று சொல்லி ஏழைப் பாட்டாளிகளிடமல்லவா பணம் சேர்த்தார். அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டியது அவர் கடமையல்லவா? இப்படிப் பட்டப் பகலில் பணத்தைக் கொள்ளை அடித்தவர் இப்போதும் மேடைகளில் முழங்கத்தான் செய்கிறார்—"இந்தியப் பத்திரிகைகள் வருகின்றனவே, இந்நாட்டு ஏழைகளின் பணம் பாழாகின்றதே!—என்று!

## இங்குள்ள இந்தியா....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்களே, இந்தியரை இங்கே குடியேற்றினார்கள்.

ஆனால் இன்றைய சிங்கள அரசினரோ இந்தியத் தமிழர்களை நாட்டை விட்டுத் துரத்த முன் வந்துள்ளனர்.

எகிப்தையும், பாரசீகத்தையும் இரங்க வைத்த தமிழன் இன்று ஈழத்திலே உழைத்து இளைத்துக்களைத்து அல்லலுறுகின்றான். இலங்கையின் மலைநாட்டுத்தேயிலைக்கு இங்கிலாந்திலே 'மவுசு' ஏற்படுத்தினான் தமிழன்.

மலைநாட்டிலே இருந்த காடுகளை அழித்து, மேடுகளைச் சிதைத்து, அதை தேயிலைத் தோட்டங்களாகவும், ரப்பர் தோட்டங்களாகவும் மாற்றினான் இந்தியத் தமிழன். அவனுக்குத் தான் இன்று நாடில்லை; நகர் இல்லை; வீடில்லை; வீதியிலே நடமாட முடியவில்லை.

தேயிலைத் தோட்டங்களிலும், ரப்பர் தோட்டங்களிலும் உழைத்து—உருக்குலைந்து—உருமாறி, இலங்கையை உயர்ந்த நிலைக்கு உயர்த்திய பின்னர் இந்தியத்தமிழரை நாட்டைவிட்டு வெளியேறச் சொல்லுகின்றனர் சிங்கள அரசியலார்.

இன்று மலையகத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை இல்லை; குடியுரிமை இல்லை; கல்வி வசதியில்லை; இருக்க இடமில்லை. யாவற்றையும் பறித்து அவர்களை அனாதைகளாக்கி மகிழ்கின்றது சிங்கள அரசாங்கம்!

தங்கள் சொந்தச் சகோதரர்கள் யாருமற்ற அனாதையாக—இருக்க இடமின்றி அவதிக்குள்ளாவதைக் கண்ட தமிழ்த் தலைவர்கள் பல முறை பாராளுமன்றத்தில் குரலெழுப்பினர்—எழுப்பிக் கொண்டே இருக்கின்றனர். ஆனால் ஆட்சியினரோ இதில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

இலங்கை-இந்தியர் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் பல முறை ஏற்பட்டும் தீர்த்து வைக்கப்படவில்லை.

கடைசியாகச் சென்ற ஆண்டு பண்டித நேரு அவர்கள் இலங்கைக்கு வந்த போது, தான் வாழப் பிரதமர் நேரு வழிவகுப்பார் என்ற நம்பிக்கையில் தோட்டத்தொழிலாளியும் நேருவை வாழ்த்துக்கூறி வரவேற்றான். ஆனால் பிரதமர் நேருவோ தான் வந்த விஷயத்தை முடித்துக் கொண்டு திரும்பினார். மலையகத் தமிழனே ஏமாந்து விட்டான்.

இந்நிலையில் தோட்டத் துத் தோழனின் பரிதாப நிலையைக் கண்ட தமிழர்களின் ஒரே கட்சியாம் தமிழரசுக் கட்சி—தந்தை செல்வாவின் தன்னிகரில்லா விடுதலை இயக்கம் மலையகத்தில் செயல்படத் தொடங்கிவிட்டது! பிரிந்திருந்த மலைநாட்டுத் தமிழன் ஒன்று சேர்ந்து விட்டான் !!

வெற்றி நிச்சயமாகி விட்டது! வெற்றி நிச்சயமாகி விட்டது!! விழுந்திருந்த மலைநாட்டுத் தமிழன் எழுந்து விட்டான்! விழுந்தவன் எழுந்துதானே ஆக வேண்டும்!

இருளுக்குப் பின் ஒளியும், புயலுக்குப் பின் அமைதியும் நாம் உலகில் காணும் [illegible] இதற்கு நாம் [illegible] விதி விலக்கா என்ன?

## துரோகி

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

டதால் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீரா அன்றி நண்பனைக் கொன்றுவிட்டதால் பெருக்கெடுத்த துன்பக் கண்ணீரா? சிறிது நேரத்தில்—

ஜெய்ராஜ் 'முகர்ஜி!' என்று கத்தியவாறே முகர்ஜியின் முகத்தைத் தன் மார்போடு அணைத்தவாறே கதறி அழுதான். நட்பின் பாசம் சும்மாவிடுமா?

'முகர்ஜி............உன்னைக் கொன்றுவிட்டேனடா. நீ நாட்டைக்கொடுத்த தேசத் துரோகி. நான் நண்பனைக் கொன்ற நட்பின் துரோகி. இருவருமே துரோகிகள். நீ எங்கே போய்விட்டாய்? நான் இன்னும் உயிரோடு தான் இருக்கிறேன். நான் மாத்திரம் தனியாக இங்கே வாழவா? நானும் வருகிறேன். இதோ உன் உயிரைப் போக்கிய துப்பாக்கி என் உயிரையும் போக்கட்டும்' என்று கூறினான்.

மறுகணம், அவனுடைய ஆள்காட்டி விரல் துப்பாக்கி விசையை அழுத்தியது. அதைத் தொடர்ந்து 'டுமீல் டுமீல்' என ஒலி கிளம்பியது.

ஜெய்ராஜின் துப்பாக்கியிலிருந்து வந்த குண்டுகள் அவனுடைய நெஞ்சைப் பதம் பார்த்தன.

இருவரது உடல்களும் அருகருகே கிடந்தன. சீன ஆக்கிரமிப்பின் மனிதப் பலிகள் அவை!

ஜெய்ராஜின் மார்பிலிருந்து கிளம்பிய செங்குருதி பனியால் உறைந்து போய்க் கிடந்த முகர்ஜியின் இரத்தத்தோடு கலந்தது.

(யாவும் கற்பனை)

## வாழ வைத்த...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சினையை அனுபவிப் பார்க்கும் படி வேண்டுகிறோம்!

இந்தத் திட்டம் கொடுமையான திட்டம், ஈவு இரக்கமற்ற திட்டம், கருணையில்லா திட்டம்! தயவு செய்து இதை வாபஸ் பெறுங்கள்! தமிழர்களை ஒரளவேனும் வாழவிடுங்கள்!

உங்களை வாழ வைத்தவனை நசுக்காதீர்கள்! அவன் வாழ்வைப் பறிக்காதீர்கள்!

மனித இதயத்தைப் பெறுங்கள்! ஜனநாயகத்தைத் தழைக்க விடுங்கள்!

இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வுக்காக 'மாலைமணி' விடுக்கும் இந்தவேண்டுகோளை பண்டா சர்க்கார் ஏற்க வேண்டும் என்றும் நல்ல இதயத்தோடு வற்புறுத்தி வற்புறுத்தி வேண்டுகிறோம்!

## சந்திக்கு....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சத்தின் தலைவராக நியமனம் பெற்றுப் பதவியிலிருந்து வருகிறார். ஊழல்களும், நிர்வாகச் சீர்கேடுகளும் மலிந்துள்ள இந்த சமாசத்தின் ஆண்டுக் கூட்டங்கள் பல வருடங்களாக நடைபெறவில்லை. இதனால் ஆத்திரமடைந்த மக்கள் மேலதிகாரிகளுக்குப் புகார் செய்துங்கூட, எம். பி. யின் செல்வாக்குப் பிரயோகத்தினால் எதுவித நடவடிக்கையும் எடுபடவில்லை. இதே விடயம் பாராளுமன்றக் கதவுகளுக்கும் எட்டப்போகும் என்ற சூழ்நிலை ஏற்பட்டது தான் தாமதம், ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தச் சமாசத்துள் உட்பட்ட பல கிளைக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் தொடர்பை முறித்துக்கொள்ள முற்பட்டுள்ளன என்று தெரிகிறது.

எம். பி. யின் தலைமையில் இயங்கும் இச்சமாசம், சில அரசியற் காரணங்களையே அடிப்படையாக வைத்து பகடைக் காயாக்கப்படுகிறது. இச்சமாசத்தில் அங்கம் வகிக்கும் உத்தியோகத்தர்களும், நிர்வாக சபையினரும் தகுதியற்றவர்கள் என்று கூட்டுறவு அதிகாரிகள் அறிவித்துள்ளனராம்.

வவுனிக்குள நீர்ப்பாசன இலாகாவில் கடமை பார்த்து வந்த ஒருவருக்கு கொழும்பு மாநகரச் சேவையத்தில் ஆசையிருந்ததாம். ஆனால் அவருக்கு இடமாற்றம் எடுத்துக்கொள்ள முடியாதிருந்ததாம். மூளையைக் குழப்பி யோசனை செய்ததில் ஒரு விடயம் புலனாகியதாம்.

'சிங்களம் படிக்க ஆசையுற்றுள்ளேன். எனக்குக் கொழும்புக்கு இடமாற்றம் தந்தருள வேண்டுகிறேன். வவுனிக்குளத்திலிருந்து சிங்களம் படிக்க முடியாதிருக்கிறேன்' என்று மேலிலாகாவிற்கு எழுதினாராம்.

சிங்களம் படிக்க ஆசைப்படும் ஒரு தமிழ் இளைஞனுடைய ஆர்வத்தைக் கண்ணுற்ற சிங்கள அதிகாரிகளுக்குக் கருணை பிறந்தது. 'கொழும்பிலிருந்தால் தூய சிங்களம் படிக்க முடியாது. ஆகவே திசமாருவுக்குச் சென்று சுத்த சிங்களத்தில் தேர்ச்சி பெறுக' என்று வரமருளினராம். இடமாற்ற உத்தரவைப்பெற்ற இளைஞர் திக்குமுக்காடித் திணறிக் கொண்டிருக்கிறாராம். ஐயோ பாவம்!


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK ஆனந்தா 174, SEA STREET, COLOMBO

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org







## மின்னுவதெல்லாம் பொன்னல்ல

—செல்வி, சாவகச்சேரி—

மின்னுவதெல்லாம் பொன்னல்ல. மண்ணுலகிலே நல்லனவும் தீயனவுமாய் மின்னுவன பல. பொன் மின்னுகிறது; அரசியல் வாதிகளின் சொற்கள் மின்னுகின்றன. ஆனால் மின்னுவதெல்லாம் பொன்னாகுமா?

கவியரசன் பாரதியின் காலத்திலே புவியெங்கும் வஞ்சகர்கள் விஞ்சிக் கிடந்தனர். உரிமை வெறி அடிமை நாட்டிலே தலைகாட்டத் தொடங்கியது. "சொந்த நாட்டில் பிறந்து பிறர்க்கு அடிமை செய்து வாழோம்" என ஆர்ப்பரித்தது பாரத தேசம்.

"நடிப்புச் சுதேசிகள்" என்ற தலைப்பிலே கவிதை மழை பொழிந்தது பாரதி என்ற கார்மேகம். அந்நிலையில் மின்னுவதெலலாம் பொன்னல்ல என்பதை மக்கள் உணரத் தொடங்கினார்கள். நாவொன்று பேச நெஞ்சொன்று நாடும் நயவஞ்சகர் நாணித் தலைகுனிந்தார்கள்.

மனிதருள் மாணிக்கமென மின்னிக் கொண்டிருந்த சான்றோர் இளம் வயதிலே பளபளக்கவில்லை. கல்வியில் வல்லவரென,பணம் படைத்தவரென, பட்டதாரியென மின்னிக் கொண்டிருந்தவர்கள் ஈற்றில் மங்கி விடுகின்றனர். காரணம் தொண்டாற்றும் பண்பு, உண்மை, அறிவு என்பன இன்மையாலேயாம்.

பசுத் தோல் போர்த்த புலிபோல, தரணியிலே பலர் இருக்கிறார்கள். ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுகிறது போல வாழும் தந்திரப்பேர் வழிகளை நாம் நானிலத்தில் காணமுடிகிறது. இவர்களின் வாய் மட்டுமே அனுதாபப் படுகிறது. இவ்வாறாக அங்கும் இங்கும் மின்னுவன பல. சில உண்மையானவை. அவை நன்மை நல்குவன சில தீமையானவை; அவை வஞ்சகம் எண்ணுவன. நல்லவர்களின் அகம் மின்னும். கெட்டவர்களின் புறம் மின்னும். மின்னுவதெல்லாம் பொன்னல்லவே?

# உண்மை பேசுதல்

(எம். பி. துரைராஜ், தெளியாய)

உள்ளதை உள்ளதென்று, இல்லாததை இல்லாததென்று கூறுவது உண்மை எனப்படும் ஆயினும் அவ்வுண்மை பிறர்க்குத் துன்பந் தராதிருத்தல் வேண்டும். துன்பந்தருமாயின் அது உண்மையாகாது. அங்ஙனமே பொய்யும் மற்றையோர்க்குக் குற்றமற்ற நன்மையைத் தருமாயின் அது உண்மையாகும். உதாரணமாக, குடிவெறியன் ஒருவன் குடிமயக்கத்தால் வேறொருவனைக் கொல்லத்துரத்தி வருகிறான் என வைத்துக் கொள்வோம். நாம் பயந்து, ஓடி வந்தவனை ஓரிடத்தில் மறைத்துவிட்டு, கொலைகாரனுக்கு அதைக் கூறாது வேறு கூறி, அவனை வேறு வழியில் அனுப்புதல் பொய்யன்று; உண்மையே. ஏனெனில், அது இருவருக்கும் நன்மை தந்தது. ஆனால் பொய் சொல்லிக் கொலையாளியைத் தப்ப வைத்தல் கூடாது; அப்படிச் செய்யின் அவன் மேலும் மேலும் கொலை செய்ய எத்தனிப்பான். எனவே அது உண்மையன்று.

நம்முடைய மனம் பொய்யென அறிந்ததை நாம் கூறல் கூடாது. அங்ஙனம் கூறின், கூறிய பின் நம்முடைய மனமே நம்மை வருத்தும். இவ்வாறு நம்முடைய மனச்சாட்சிக்கு ஏற்ப உண்மை பேசி வாழ்வோமாயின், உலகத்தவர் நம்மைப் புகழ்வர்; நன்கு மதிப்பர்.

நீரால் நமது உடம்பைக் கழுவினால், நமது உடல் சுத்தமடையும். நமது உள்ளந் தூய்மையடைய வேண்டும் எனில், நாம் உண்மை பேச வேண்டும். புறத் தூய்மையினும் மனத்தூய்மையே முக்கியமானது. ஆகவே, ஒவ்வொருவரும் உண்மை பேசல் வேண்டும்.

நாம் செய்த குற்றங்களை மறைக்கவே நாம் பெரும்பாலும் பொய் சொல்லுகிறோம். நாம் பொய்சொல்வதில்லையானால் குற்றங்களையும் செய்ய மாட்டோம். குற்றத்தை மறைக்க ஒரு பொய் சொல்வோமானால், பின் அப்பொய்யை மறைக்க மேலும் பல பொய்களைச் சொல்ல நேரிடும். இதனால், நாம் பொயயர்களாகி விடுவோம்.

நாம் இளமை தொட்டே உண்மை பேசப் பழகுதல் வேண்டும். இதை நாம் இளமையிலே பழகாவிட்டால் பிறகு பழக மாட்டோம். இதை நாம் ஒவ்வொருவரும் அனுசரித்து பொய் சொல்லாமல் உண்மையே பேசப் பழகுதல் வேண்டும்.

### இது தெரியுமா?

கொசுவில் 1500 வகை இருக்கின்றன.

உலகத்தில் மக்கள் தொகை எவ்வளவோ, அவ்வளவு எலிகளும் உயிர் வாழ்கின்றன.

---

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 1

பெயர் ______________________

பாடசாலை ______________________

விலாசம் ______________________

______________________

______________________ ______________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்

## அழகென்ன அழகே!

—முதல்வனார்—

நெடுவானைத் தொடுமுகட்டி லுறைந்தபனி யுருகி
நீராகஓடி நிலைக்குத்தாக மலையின்
அடிவாரந் தனில்விழ்ந்து பள்ளமதிற் பாயும்
அருவியின் நெஞ்சள்ளும் அழகென்ன அழகே!

நிலத்தினது வளனற்ற நிலைகண்டு கவலும்
மலைமங்கை உதிர்க்கின்ற கண்ணீர்தானோ?
கலகலவென் றோசையுடன் கற்பாறைதனையும்
கரைத்திடப் பாய்கின்ற அழகென்ன அழகே!

நகைசிந்தும்முல்லை மூகைபோல வெள்ளை
மின்வலுவைப் பெறற்கேற்ற மேலான விசைவு
புகையன்ன தோற்றும் புனல்வீழ்ச்சிப் பெண்ணாள்
பொங்கியே புரள்கின்ற அழகென்ன அழகே!

## மலைக்குகை

—க. இராணி நவமணி—

சிறுவன் எல்லோரையும் நன்றாகப் பார்த்தான். எல்லோரும் முகமூடி அணிந்திருந்தனர். ஒருவனிடம் சவுக்கு ஒன்றிருந்தது. மற்றவர்களிடம் வாள்கள் இருந்தன. அவர்கள் பார்வைக்கு மிகவும் கொடியவர்களாகக் காட்சியளித்தனர். மணி இரவு 7-30. இவற்றை எல்லாம் பார்த்த சிறுவனுக்கு, தான் காண்பது கனவா? நினைவா? என்ற சந்தேகம் உண்டாயிற்று. அப்போது ஏதோ நினைவிற்கு வந்தவனாய் மளமளவென்று இறங்கி ஓரத்தில் இருந்த இரண்டு விறகுக் கட்டுகளையும் எடுத்து நடுப்பாதையில் போட்டு விட்டு, மீண்டும் மரத்தில் ஏறிக்கொண்டான்.

இரவு சாப்பிடாததால் பசியும் தாகமும் அவனை வாட்டின. தூக்கமே வரவில்லை. சென்றவர்கள் எப்போது வருவார்கள் என்று எதிர்பார்த்த வண்ணம் இருந்தான். வெகு நேரத்தின் பின் குதிரையின் காலடியோசை கேட்டது. அவர்கள் என்ன கொண்டு வருகிறார்கள் என்று சிறுவன் பார்க்கத் தயாரானான்.

சிறுவன் எதிர்பார்த்தது போல சில மணித்தியாலங்களுக்குமுன் நடந்த நிகழ்ச்சி அப்போதும் நடந்தது. வந்த குதிரைகளில் ஒன்றின் கால் விறகுக் கட்டில் இடறியது. ஒருவன் விழ்ந்தான். குதிரைகள் எல்லாம் வரிசையாக வந்து நின்றன. விழ்ந்தவனுக்குத்தலையிலே லேசான காயம் ஏற்பட்டிருந்தது. அவன்தான் அந்தக் கொள்ளைக் கூட்டத் தலைவன். விழ்ந்தவன் புலிபோல் சீறி எழுந்தான்.

"முட்டாள்கள்! உங்களுக்குக் கொஞ்சமாவது மூளை இருக்கிறதா? வரும்போது விழுந்தோமே, அந்த நேரமே இந்த விறகுக் கட்டுகளை ஒரு ஓரமாக எடுத்துப் போட்டிருந்தால் இப்போது நான் விழுந்திருப்பேனா?" என்று கூறிக் கொண்டு அந்த விறகுக் கட்டுகளை ஓரமாகப் போட்டான்.

"நானல்லவா எடுத்து ஓரமாகப் போட்டு விட்டு வந்தேன். அது எப்படி நடுப்பாதைக்கு வந்தது? இங்கு யாரோ ஒளித்து இருக்கிறார்கள். எல்லோரும் தேடிப் பாருங்கள். என்றான் ஒருவன்" எல்லோரும் சில நிமிடங்கள் தேடினார்கள். ஒருவரையும் காணவில்லை. ஆதலால் எல்லோரும் சென்று விட்டார்கள்.

(தொடரும்)

### ஊரின் பெயர் என்ன?

—எஸ். கே. சண்முகநாதன்—

ஐந்து எழுத்துக்களைக் கொண்ட ஒரு ஊரின் பெயர்......முதலாமெழுத்து காட்டிலுண்டு வீட்டிலில்லை, இரண்டாமெழுத்து, மரையிலுண்டு, மானிலில்லை. மூன்றாமெழுத்து, நாக்கிலுண்டு, வாயிலில்லை. நான்காமெழுத்து, காகத்திலுண்டு, குயிலிலில்லை. ஐந்தாமெழுத்து, மடுவிலுண்டு, மலையிலில்லை. அந்த ஊரின் பெயரைக் கூறுவீர்களா?


## மட்டுநகரில் சிறுவர் கலை விழா

பங்குனி மாதக் கடைசியில் மட்டக்களப்பில் பிரமாண்டமானதொரு சிறுவர் கலை விழா நடைபெறவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு சிறுவர் கலைக் கழகம் துரிதமாகக் கவனித்து வருகிறது.

முற்றிலும் சிறுவர், சிறுமியர்களே கலந்து கொள்ளவிருக்கும் இவ்விழாவில் கன்னன் கடைநாள், திருஞானசம்பந்தர் ஆகிய நாடகங்கள், வள்ளி திருமணம் நாட்டிய நாடகம், வில்லுப்பாட்டு, வயலின், நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுமெனத் தெரிகிறது.

### இது தெரியுமா?

இருட்டறையில் அமர்ந்து படிக்கக் கூடிய மூக்குக் கண்ணாடி ஒன்றை லண்டனிலுள்ள கண் வைத்தியர் ஒருவர் கண்டு பிடித்துள்ளார்.




அமெரிக்காவில் சோளம் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. சோளம் தானியத்தை அறுவடை செய்வதில் அமெரிக்கக் கமக்காரரிடையே போட்டிகள் நடாத்தப்படுவதுண்டு. தேசியப் போட்டிகளான இவற்றில் திறமையாக அறுவடை செய்து, வெற்றி பெறுபவர்களுக்கு பரிசு வழங்குவது வழக்கம். மேலே காணப்படும் இருவரும் தமது வெற்றிப் பரிசுகளைத் தாங்கிய வண்ணம், பெருமிதம் கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## இறைவன்மேல் நாம்கொள்ளும் காதலே சிறந்தது

### கொம்பனித் தெரு சிவராத்திரி விழாவில் சுவாமி சச்சிதானந்தாஜி

கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் சிவராத்திரி தொண்டர் சபையின் ஆதரவில் மகாசிவராத்திரி விழா 22, 23, 24-2-63ல் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

இவ் விழாவின் மூன்றும் நாள் நிகழ்ச்சியில் பங்கு பற்றிய சுவாமி சச்சிதானந்தாஜி, "இறைவன் மீது நாம் கொள்ளும் காதலே சிறந்த காதலாகும். உலகிலே உள்ள எல்லாக் காதலுள்ளும் அதுவே தூய்மையானதாகும்." எனக் கூறினர்.

முதல் நாள் விழாவிற்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஆ. வி மயில்வாகனம், தலைமைதாங்கி உரை நிகழ்த்தினுர்.

திரு. அ. வேல்சாமியின் கூட்டுவழிபாட்டுடன் விழா ஆரம்பமாகியது. சபைச் செயலாளர் திரு. ச. சுப்பையா வரவேற்புரை நிகழ்த்தினுர். சைவப் புலவர், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி "பெரிய புராணப் பெண்கள்" என்ற பொருள் பற்றி உரை நிகழ்த்திஞர்கள். அடுத்து திருமதி அம்பிகா தாமோதரம், செல்வி ஞானு சிவசுப்பிரமணியம் ஆகியோரின் பக்திப் பாடல்களும், திருவாளர்கள் இசைமணி நா. பொன்னம்பலம், கே. வி. ஆறுமுகம், செல்வன் ந. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியவர்களின் கதாகலாட்சேபங்களும் இடம் பெற்றன. இசைமணி திருமதி பூமணி இராசரத்தினத்தின் இன்னிசைக் கச்சேரியும் திரு. ரி. பி. யேசுதாசனின் புல்லாங்குழல் கச்சேரியும் வண்ணை வைத்தீஸ்வர தேவஸ்தான வித்துவான் வி. கே. ஆறுமுகத்தினதும் அவர்தம் கோஷ்டியினதும் வில்லுப்பாட்டும் இடம் பெற அதி விமரிசையாக முதல் நாள் விழா நடந்தேறியது.

#### தங்கப் பதக்கம் அன்பளிப்பு

இசை நிகழ்ச்சிகட்கு மிருதங்கம் வாசித்த 11 வயது செல்வன் நேசதுரை தியாகராசனைப் பாராட்டி சபையின் சார்பாக செயலாளர் திரு. ச. சுப்பையா தங்கப் பதக்கம் அணிந்தார். வைத்திய கலாநிதி த. நல்லைநாதன் மலர் மாலை அணிந்து வரவேற்ருர். கதாகாலட்சேபம் செய்த, பதின்மூன்றே வயதான செல்வன் ந. ஸ்ரீஸ்கந்தராசாவைப் பாராட்டி சபையின் சார்பாக சபைத் தனுதிகாரி திரு. நா. வே. கனகசபை தங்கப் பதக்கம் அணிந்தார். தலைவர் திரு. வ. குமாரசிங்கம் மலர் மாலையிட்டு வரவேற்ருர்.

#### இரண்டாம் நாள்

இரண்டாம் நாள் விழா, பகுதி வித்தியாதரிசி திரு. வெ. சங்கரலிங்கம் பி. எஸ். ஸி. தலைமையில் க. பாலசுப்பிரமணியத்தின் பக்திப் பாடல்களுடன் ஆரம்பமாகியது. ஆத்ம ஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் உரை நிகழ்த்திஞர். தொடர்ந்து 'யாழ்ப்பாணம் நவநாத விநோதன்' என்று அழைக்கப்படுபவரான திரு. ப. தியாகராசா, நூதன கதம்ப இசை நிகழ்த்தி மக்களை மகிழ்ச்சியில் ஈடுபடுத்திஞர்.

#### மூன்றும் நாள்

மூன்றும் நாள் விழா இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. கே. எஸ். நடராசா தலைமையில் திரு. நா. சொர்ணலிங்கத்தின் கூட்டு வழிபாட்டுடன் ஆரம்பமாகியது. 'சிவ வழிபாடு' என்னும் பொருள் பற்றி ஸ்ரீலஸ்ரீ. சுவாமி சச்சிதானந்தா உரை நிகழ்த்துகையில் கூறியதாவது: "உலகில் உள்ள எல்லாக் காதலையும் விட கடவுள் மீது உள்ள அன்புதான் தூய்மையானது. இக் காதல் எமது மனதில் குடி கொண்டால் என்றும் மங்காது. நாம் கடவுளை வணங்கும்போது வேறு எண்ணங்களை எண்ணுது இறைவனை நெஞ்சில் இருத்தி வணங்க வேண்டும்."

தலைவர் உரைக்குப் பின்னர், சபைச் செயலாளர் திரு. ச. சுப்பையா நன்றி கூறினுர்.

மூன்று நாள் விழாவிற்கும் ஏராளமான பக்தர்கள் விஜயம் செய்தனர். சகலருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

---

### ஆனைப்பந்தி அந்தியகால சகாயநிதிச் சங்கம்

ஆனைப்பந்தி உயர்கலை மன்றத்தில் 23-2-63-ல் ஆனைப்பந்தி அந்தியகால சகாயநிதிச் சங்கத்தின் மகாசபைக் கூட்டம் நிறைவேறிற்று. ஆரும் வருடத்தைய உறுப்பினர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. ப. த. நடராசா உபதலைவர்: திரு. மு. கந்தையா, காரியதரிசி: திரு. த. இராசரத்தினம், தனுதிகாரி, திரு. சி. கதையா, நிர்வாகசபை: திரு. என். அருட்பிரகாசம், திரு. ச. ஆசீர்வாதம், திரு. பொன்னு அந்தோனிப்பிள்ளை, திரு. ச. லோறன்ஸ், திரு. சீமான் நீக்கலாஸ், (கணக்குப்பரிசோதகர்) திரு. அ. வீரசிங்கம்.

---

### ஈழகேசரி பொன்னையா நினைவு தினம்

ஈழகேசரி பொன்னையா ஞாபக தினத்தன்று 30-3-63 மாலை 2-30 மணிக்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒரு கருத்தரங்கம் நடாத்துகின்றனர்.

நாடகம், விமரிசனம், உரைநடை ஆகிய மூன்று துறைகளைப் பற்றியும் கருத்தரங்கம் நடைபெறும். அத்துறைகளில் இலங்கையில் பிரசித்திபெற்றோர் கலந்து கொள்வார்கள்.

வேறு சந்தர்ப்பத்தில் சிறுகதை, நாவல், கவிதை ஆகியவை பற்றி கருத்தரங்கு நடத்துவதெனவும் [illegible] சங்க செயற்குழு முடிவு செய்துள்ளது.

### மறைந்த தலைவருக்கு அஞ்சலி

ஞாயிற்றுக்கிழமை 17-2-63 மாலை இரம்புக்கந்தை உதயசூரியன விளையாட்டு கழகக் கூட்டம் தலைவர் திரு. பெ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் 11-2-63-ல் இயற்கை எய்திய தலைவர் திரு. கே. இராஜலிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இரண்டு நிமிடம் மௌனம் அனுட்டிக்கப்பட்டது. திருவாளர்கள் வெ. ஆறுமுகம், மு. நாகப்பன், பெ. கதிர்வேல் ஆகியோர் தலைவர் இலங்கை வாழ் தொழிலாளர்கட்கு ஆற்றிய சேவைகளைப்பற்றி எடுத்துரைத்தனர். பின்னர், அவரது பெயரால் ஞாபக சின்னம் அமைக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டு, கூட்டம் இனிதே முடிவுற்றது.

---

### ஆசிரியர்களுக்குப் பிரியாவிடை

இருகலை அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் உதவி ஆசிரியர்களாகக் கடமையாற்றிய திருவாளர்கள் க. வேலாயுதன், மு. திருஞான சம்பந்தபிள்ளை ஆகிய இருவரும் முறையே நுவரேலியா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும், ஹக்கலை அரசினர் சிங்கள தமிழ்க் கலவன் பாடசாலைக்கும், மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு அன்னுரிருவருக்கும் மேற்படி வித்தியாலய மாணவ மாணவிகளாலும், ஆசிரியர்களாலும் பிரியாவிடை அளிக்கப்பட்டது.

பிரியாவிடை வைபவம் வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு. கே. எஸ். பொன்னையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

---

### ஜீவகாருண்யப் பிரசங்கம்

வெள்ளிக்கிழமை (15-2-63) அன்று இருகலை அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில், ஜீவகாருண்ய சங்கப் பிரசாரகர் திரு. டி. பி. எஸ். தம்பதேவியா அவர்கள் ஜீவகாருண்யம் பற்றிப் பிரசங்கம் செய்தார்.

இவ்வைபவம் மேற்படி வித்தியாலய மண்டபத்தில், வித்தியாலயத் தலைமை ஆசிரியர் திரு. கே. எஸ். பொன்னையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

---

### இ. த. எ. சங்கம் கூட்டும் எழுத்தாளர் பேரவை

இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு, செயலாளர் இல்லத்தில், திரு. சி. ஸ்ரீநிவாசன் தலைமையில் கூடிப்பின் வரும் முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றியது:

"இலங்கை எழுத்தாளன்" என்னும் தலைப்புடன் திரு. சு. வேலுப்பிள்ளை, திரு. இ. மகாதேவா ஆகியவர்களை பொறுப்பாசிரியராகக் கொண்டு சங்க வெளியீடாக நயனுய்வுச் சுவடி ஒன்றினை சித்திரைத் திங்களிலிருந்து வெளியிடுவது.

ஆவணி மாதத்தில் மட்டக்களப்பில் எழுத்தாளர் பேரவை ஒன்றைக் கூட்டுவது.

[illegible] கள் துரிதமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

## தமிழ் மாணவர்களுக்கு வர்த்தகக் கல்வி இலவச போதனை

### அகில இலங்கை வர்த்தகக் கலை மன்றத்தின் நன்முயற்சி

### அரசாங்கத்துக்கு நல்ல பதில்

அகில இலங்கை வர்த்தக கலை மன்றத்தின் அவசர பொதுக் கூட்டம் 18-2-63 திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் யாழ்ப்பாணம் உயர்கலை மன்றத்தில் தலைவி செல்வி. தி. தியாகேஸ்வரி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

கடந்த வருடங்களில் கீழ் குறிப்பிட்டுள்ள பாடசாலைகளில் வர்த்தக ஆசிரியர்கள் கடமையாற்றி வர்த்தகக்கல்வியைப் போதித்து வந்தார்கள். அவர்கள் சாதாரண பயிற்சிக்குச் சென்றமையினுலும், பதவியை விட்டு நீங்கியமையினுலும், இடமாற்றம் பெற்றுச் சென்றமையினுலும் காலியான இடங்களுக்கு வர்த்தக ஆசிரியர்கள் இன்றுவரையும் நியமிக்கப்படவில்லை. அப்பாடசாலைகளில் ஆசிரியர்களை நியமிக்கும்படி மன்றத்தினரும், அப்பாடசாலை அதிபர்களும் பெற்ருேர்-ஆசிரியர் சங்கத் தலைவர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடன் தெரிவித்தும் இன்று வரையும் வர்த்தக ஆசிரியர்களை நியமிக்கத் தவறியதினுல், வர்த்தகக் கல்வி பயின்ற மாணவர்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தார்கள். வர்த்தகக் கல்வி பயின்ற மாணவர்கள் படும் கஷ்டங்களை அறிந்த அகில இலங்கை வர்த்தகக் கலை மன்றம், தனது அங்கத்தவர்களிலிருந்து தெரிந்தெடுத்து (அரசினர் நிரந்தர வர்த்தக ஆசிரியரை நியமிக்கும்வரையும்) அப் பாடசாலைகளில் வர்த்தக ஆசிரியர்களாக நியமித்து, இலவச போதனை மூலம் மாணவர்களின் கஷ்டங்களை நீக்க முன் வந்துள்ளது. இவ்விடயம் மன்றத்தின் அவசர பொதுக் கூட்டத்தில் ஆலோசனைக்கு எடுக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் அப்பாடசாலைகளில் இலவசமாகப் போதனை செய்யத் தகுதியுள்ள ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். பின்வரும் பாடசாலைகளில் உடனடியாக இலவச போதனை செய்யும் வர்த்தக ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்: (1) வண்ணுர்பண்ணை நாவலர் பாடசாலை, (2) வித்தியானந்தா கல்லூரி, முள்ளியவளை (3) மத்திய மகா வித்தியாலயம், மூதூர் (4) மத்திய மகா வித்தியாலம், காத்தான்குடி (5) மத்திய மகா வித்தியாலம், எருக்கலம்பிட்டி.

#### தமிழ்ப் பல்கலைக்கழகம் பற்றித் தீர்மானம்

சிங்களசகோதர மாணவர்களுக்கெனப் பல சர்வகலாசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந் நிலையில் தமிழ் மாணவர்களுக்கு ஒரு தமிழ் சர்கலாசாலை அவசியமென்று கருதி தமிழ் சர்வகலாசாலை இயக்கம் செயலில் இறங்கியுள்ளது. ஆகவே இவர்களுக்கு நாம் எம் நன்றியைத் தெரிவிக்கும் அதே சமயத்தில், அவ்வியக்கத்தினருக்கு நாம் உதவ முன்வர வேண்டும்' என்று மன்றச் செயலாளர் திரு. மா. புவனேந்திரன், அகில இலங்கை வர்த்தக கலைமன்ற அவசரப் பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டார். கூட்ட இறுதியில் எதிர்வரும் சித்திரை மாத விடுமுறை நாட்களில், "மன்றத்தினர் இலவசமாகத் தமிழ் பல்கலைக்கழக கட்டிடத் தொழிலில் ஈடுபட்டு, தொண்டாற்ற வேண்டும்" என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இவ்விடயத்தை உடனடியாகத் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தினருக்குத் தெரிவித்து ஏற்ற ஒழுங்குகள் செய்து தரும்படியும் அங்கத்தினர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

### சித்தாந்தப் பரீட்சைப் பெறுபேறுகள்

கொழும்பு விவேகானந்த சபையாரால் 22, 23-12-63ந் திகதிகளில் நடாத்தப்பெற்ற சித்தாந்த பிரவேச பாலபண்டிதர் பரீட்சைகளில் பின் வருவோர் சித்தியடைந்துள்ளனர்:

**சித்தாந்த பிரவேச பண்டிதர்**

ப. கணபதிப்பிள்ளை, அரியாலை, யாழ்ப்பாணம். மு. திருஞானசம்பந்தபிள்ளை, வேலணை மேற்கு, வேலணை.

**சித்தாந்த பால பண்டிதர்**

த. சுவாமிநாதன், கல்வயல், சாவகச்சேரி. க. முத்துவேலு, கரணவாய் வடக்கு, கரவெட்டி.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாடஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி முரசு கொட்டும் 3வது வாரம்!

| சென்ட்ரல் | லவினியா | ராணி | ராஜேஸ்வரா | ஜோதி |
|---|---|---|---|---|
| (மருதானை) | (நுகேகொடை) | (யாழ்ப்பாணம்) | (மட்டக்களப்பு) | (திருகோணமலை) |



புரட்சி நடிகர்
**எம். ஜி. ராமச்சந்திரன்**

அகில உலக நாட்டியப் பேரொளி
**பத்மினி**

தங்கவேலு—ராகினி—ஈ. வி. சரோஜா—ஸ்ரீரஞ்சனி—ஓ. ஏ. கே. தேவர்—பி. எஸ். வீரப்பா
முதலியோர் தோன்றும் உன்னத சித்திரம்



ஜெய்பாரத் புரொடக்ஷன்சாரின்

## விக்கிரமாதித்தன்

★ வாட்போர், மல்யுத்தம், சிலம்பம் முதலியவை மலிந்த படம்—

★ ஆடலும், பாடலும், அழகிய காட்சிகளும் நிறைந்த சித்திரம்—

★ சொல்லழகும், பொருளழகும் பொதிந்த பாங்கான ஓவியம்—



★ வீரதீரச் செயல்கள், மயிர்க்கூச்செறியும் சம்பவங்கள், கருத்தைக் கவரும் கல்யாணங்கள் அனைத்தும் கொண்ட அதி உன்னத திரைக் காவியம்.

ஸ்டண்ட் : ஸ்டண்ட் சோமு

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

| கிங்ஸ்லி | பிளாஸா | வெலிங்டன் | | விஜயா |
|---|---|---|---|---|
| (கொழும்பு) | (வெள்ளவத்தை) | (யாழ்ப்பாணம்) | | (மட்டக்களப்பு) |
| ஸ்ரீகிருஷ்ணா | மொடர்ன் | விஜிதா | தீவொளி | ஜெமினி |
| (திருமலை) | (பதுளை) | (ஹட்டன்) | (நுவரெலியா) | (ராகலை) |



காளையரின் தோள்கள் விம்ம, கன்னியரின் உள்ளம் துள்ள பாரதத்தின் பண்பையும், வீரத்தையும் எடுத்துக் காட்டும் எழுச்சிமிகு காவியம்!

சூழ்ச்சியால் நாட்டைச் சுருட்டி, சுரண்டலால் பொருளை ஈட்டிய தூதுமதியினரை விரட்ட விரதம்பூண்ட சுதந்திர வீரனின் தூய்மைமிக்க தியாக காவியம்.

சிவாஜி கணேசன் * ஜெமினி கணேசன் * சாவித்திரி
குமாரி ருக்மணி * எஸ். வி. சுப்பையா * டி. கே. சண்முகம்
பாலாஜி * நாகையா * ஏ. கருணாநிதி
ஜெமினி சந்திரா * டி. பி. முத்துலட்சுமி
மற்றும் பலர் நடித்த
பத்மினி பிக்சர்ஸ்

பாடல்கள்:
அமரகவி பாரதியார்

தயாரிப்பு-டைரக்ஷன்:
பி. ஆர். பந்துலு

இசை:
ஜி. ராமநாதன்



## கப்பலோட்டிய தமிழன்



# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

| எல்பின்ஸ்டன் | ரெக்ஸ் | வின்ஸர் |
|---|---|---|
| (மருதானை) | (வெள்ளவத்தை) | (யாழ்ப்பாணம்) |
| வேல்ஸ் | இம்பீரியல் | கிங்ஸ் |
| (கண்டி) | (மட்டக்களப்பு) | (பதுளை) |
| அசோகமாலா | நெல்சன் | ரீகல் |
| (நீர்கொழும்பு) | (திருகோணமலை) | (நுவரேலியா) |

ஜெமினி கணேசன் — சாவித்திரி — விஜயகுமாரி
சந்திரபாபு — அசோகன் — எம். ஆர். ராதா
எம். வி. ராஜம்மா - பத்மினி பிரியதர்சினி - கமலஹாசன்
மற்றும் பலர் நடித்த

## பாத காணிக்கை

பாடல்கள்:
கண்ணதாசன்

இசையமைப்பு:
விஸ்வநாதன் - ராமமூர்த்தி

செல்லமஹால் திரையில் 4வது வாரம்!
ஜெமினி கணேசன் — சரோஜாதேவி — ராகினி — தங்கவேலு
நடிக்கும்
**பனித் திரை**

கெபிட்டல் திரையில் 100வது நாள்!
எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி—எஸ். வி. ரங்கராவ்
நடிக்கும்
**சாரதா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் மார்ச் மாதம் 10ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.